

# ஊருக்குத் திரும்பணும்

(சிறுகதைத் தொகுப்பு)

கோவிலூர் செல்வராஜன

# "ஊருக்குத் திரும்பணும்"

## (சிறுகதைத் தொகுப்பு)

-கோவிலூர் செல்வராஜன்-

## பதிப்புரை

திரு. கோவிலூர் செல்வராஜன் அவர்களின் "ஊருக்குத் திரும்பணும்" என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் மெய்கண்டான் பிரைவேட் லிமிடெட் பெருமையடைகிறது. இவர் எழுபதுகளில் எங்கள் நிறுவனத்தின் "கலாவல்லி", "நட்சத்திரமா" சஞ்சிகைகளில் உதவி ஆசிரியராக தனது கலைத் துறை வாழ்க்கையை தொடங்கி பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணி தொடக்கி, பல்துறைக் கலைஞராகப் பரிணமித்து, இன்று உலகளாவிய ரீதியில் தன் கலைப்படைப்புகளை வெளியிட்டு வருகிறார்.

இந்த நூலை எங்கள் அண்ணரும், எங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக இருந்த அமரர்.இரத்தினசபாபதி குமாரகுருநாதன் அவர்களுக்கும், எங்கள் சஞ்சிகைகளில் மற்றுமொரு உதவி ஆசிரியராக இருந்த அமரர். சுகுமாரன் வெலாயுதன் அவர்களுக்கும் அர்ப்பணம் செய்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

திரு. கோவிலூர் செல்வராஜனின் கலைப்பணி உலகமெல்லாம் பரவ எமது நிறுவனம் வாழ்த்துக்கூறுகிறது.

வாழ்த்துகளுடன்,

இரத்தினசபாபதி அருள்சோதிநாதன்
பணிப்பாளர்
மெய்கண்டான் பிரைவேட் லிமிடெட்

# அணிந்துரை

புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களது சிறுகதைகள் என்றாலும் சரி, புகலிடத்தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்றாலும் சரி ஆரம்பகாலத்தில் அதற்கான சிறந்த உதாரணமாக நான் எடுத்துக்காட்டியது "புதிய தலைமுறைகள்" என்ற கோவிலூர் செல்வராஜன் அவர்களின் சிறுகதையாகும். எப்போதோ ஒருதடவை வாசித்த முக்கியமானதொரு சிறுகதை என்பதைத்தவிர அன்று அதை எழுதியவர் யார் என்று அப்போது நான் அறிந்திருக்கவில்லை. நீண்ட காலத்தின் பின்னரே அவர் யார் என்று அறிந்துகொண்டேன். அத்துடன் அவர் சிறுகதை எழுத்தாளர் மட்டுமன்றி கவிஞர்,பாடலாசிரியர்,நாவலாசிரியர், ஊடகவியலாளர், நடிகர், நாடகத்தயாரிப்பாளர், பாடகர், இசை அல்பம் வெளியீட்டாளர், பத்தி எழுத்தாளர் என்று பன்முகத் திறமையானவர் என்பதனையும் அண்மைக்காலங்களில் அறிய நேர்ந்தது. நோர்வே,லண்டன் என்று இரு நாடுகளில் வாழ்ந்துகொண்டு இயங்குகின்றவர். எங்கிருந்தாலும் தனது மண்ணை மறக்காது திருக்கோவில் என்ற தனது ஊரை "கோவிலூர்" என்று சுருக்கி தன் பெயரோடு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே அடைசேர்த்துக்கொண்டுள்ள இப் படைப்பாளி எப்போதோ இயற்றியிருந்த,

"ஊர் பற்றி யாரும் பேசிவிட்டால் -சுடு
தார் அள்ளி முகத்திலே ஊற்றி வைப்பேன்
கூர் வேல் வந்து தங்கிய எந்தனூரில்
யார் வந்து கோலோச்சிப் பார்க்கிறது"

என்ற பாடலடிகள் இப்போதும் என் நினைவிற்குள் பரவி இருக்கின்றன. அத்தகைய படைப்பாளி ஒருவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான இந்நூலிற்கு அணிந்துரை எழுத முற்படுவது களிபேருவகை தருகின்றது.

இந்த தொகுப்பிலுள்ள சிறுகதைகளை இருவகைப் படுத்தமுடிகிறது. ஒன்று புகலிட நாடு சார்ந்தவை. மன்றொன்று ஈழம் சார்ந்தவை. புகலிட நாடு சார்ந்த சிறுகதைகளின் போக்கு பன்முகப் படுத்தப் பட்டவை. தாயக ஏக்கம், புலம் பெயர் தமிழர்,புகலிட நாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், புகலிட நாட்டினரான சுதேசிகளது பிரச்சினைகள் என்பன அவற்றுள் முக்கியமானவை. இவற்றுள் முதலிரு போக்குகளின் வெளிப்பாடுகளாக இத் தொகுதிச் சிறுகதைகள் காணப்படுகின்றன.

புகலிடத் தமிழர் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் என்ற விதத்தில் மிக முக்கியமானதொன்று, புகலிட நாட்டு (தமிழ்) சிறுவர்களுடன் தொடர்புபட்டது. சிறுவர் உரிமைகள், முதலிடம் பெறுகின்ற அந்நாடுகளில்,அது காரணமாக புலம்பெயர்ந்துள்ள குடும்பங்களிடையே ஏற்படும் பண்பாட்டு மோதலொன்றை,அதிர்வு ஒன்றை வெளிப்படுத்துவதாக உள்ளது ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டுள்ள "புதிய தலைமுறை" என்ற சிறுகதை. இத்தகைய சிறுகதைகள் அரிதாகவே வந்துள்ள சூழலில் இச் சிறுகதை முக்கியமான ஒரு படைப்பாக வெளிப்படுகிறது. இதன் காரணமாகவே ஞானம் வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர்களின் புலம்பெயர் சிறப்பிதழுக்காக இச் சிறுகதையை அன்று தெரிவு செய்து கொடுத்திருந்தேன். சொந்த வீடு, பெரிய கார் முதலியன இல்லாமல் புகலிட வாழ்வு, புகலிடத் தமிழருக்கு உன்னதமான வாழ்வாக முடியாது.தமிழர் பலர் மிகுந்த கஷ்டங்களின் மத்தியிலே அந்நிலையினை எய்துகின்றனர். இத்தகைய நிலையில் சொந்தமாக கார் வாங்கிய தமிழர் குடும்பமொன்றினது மன ஓட்டங்களை, மனக்கோலங்களை முற்றிலும் புதியதொரு பார்வையோடு புதுமையான கண்ணோட்டத்தோடு சித்தரிக்கின்ற "கை விட்டுப்போன கார்" என்ற சிறுகதையும் தமிழ் சிறுகதையுலகிற்கு புதியதே!

புகலிடத் தமிழர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் மற்றொன்று முதியோர் சார்ந்தது. பல பிரச்சினைகளின் மத்தியில் தாயகத்திலிருந்து செல்கின்ற முதியவர்களுள் ஒரு சாரார் இங்கு திரும்பி வருகின்ற நிலை ஏற்படுகின்றது. அவ்வாறானதொரு சிறுகதையொன்று முன்பு "ADIEU" பெயரிலே எஸ்.பொ அவர்களால் எழுதப்பட்டு அன்று பிரசித்தியானது. கோவிலூரின் இத் தொகுப்பிலுள்ள சிறுகதையான "ஊருக்குத் திரும்பணும்" என்ற சிறுகதையும் அத்தகைய பட்டியலில் சேர்க்கக் கூடியதாக அமைகின்றது. எண்பதுகளுக்கு பிற்பட்ட தமிழரின் புலம் பெயர்வு தொடர்ந்து பலதடவைகளில் ஏற்பட்டு வந்துள்ளது. இப்போதுகூட ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு பலதடவைகள் சென்று சேர்ந்த தமிழரிடையே உறவு நிலைகளில் சுரிதிபேதம் காணப்படுவதுண்டு. இத்தகைய ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் அத்தகு அவலநிலைக்கு மாற்றாக முன் மாதிரியுடனான சிறுகதையாக உள்ளது "உயர்ந்த உள்ளங்கள்". அது எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதனை வாசகராகிய நீங்களே வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

புலம்பெயர்ந்துள்ள தமிழரின் தாயக ஏக்கம்பற்றி ஆரம்பத்தில் குறிபிட்டிருந்தேன்.

அத்தகைய நிலைமை காரணமாக தமது சொந்த ஊர்களுக்கு இடையிடையே வந்து செல்கின்ற தமிழர்களும் உள்ளனர். அவ்வாறான கதாமத்தர்கள் சிலரைப் பற்றிய இரு சிறுகதைகள் (சந்தையும் சந்திப்புகளும், வீரையடி) இத் தொகுதியில் சேர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இனி ஈழத்துடன் தொடர்புள்ள சிறுகதைகள் பற்றி கவனிப்போம். முன் கூறிய போக்கிலான சிறுகதைகள் ஈழத்து இலக்கியப் போக்குகளை அகலப்படுத்துகின்றன என்றால் இவரது ஈழம் தொடர்பான சிறுகதைகள், ஈழத்து சிறுகதைப் போக்குகளை ஆழப்படுத்துகின்றன என்று சொல்வதில் தவறில்லை. இவற்றுள் சில ஈழத்தில் வாழும் எழுத்தாளர்கள் இதுவரையும் பேசாப் பொருளாகவும் உள்ளன. இவற்றுள் என்னை ஈர்த்தது "கண்ணைத் திறக்கணும் சாமி" என்ற கதை, மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசங்களில் கோவில்சார்ந்த தனித்துவமான ஒருசில பிரச்சினைகள் உள்ளன. இத்தகு பிரச்சினை ஒன்று பற்றியதுதான் "கண்ணைத் திறக்கணும் சாமி". இவ்விதத்தில் இச் சிறுகதையில் பொருள் மட்டுமின்றி சிறுகதையின் தலைப்பும் பாராட்டுக்குரியதே.

இவ்வாறே ஈழத்தில் வாழுகின்ற இன்றைய இளந்தலைமுறையினரின் நடத்தை,அலங்கோலம் பற்றிய"எங்கே போய் முட்டிக்கிறது" சிறுகதையும் முக்கியமாகிறது. மற்றும் சமகால அரசியல் நெருக்கடியொன்று பற்றிப் பேசும் "எல்லைக் கிராமங்களின் தொல்லைகள்" சிறுகதையும் கவனிக்கப்பட வேண்டியதே. ஏனைய இத்தகைய சிறுகதைகள் பற்றி விரிவாஞ்சி இங்கு பேசப் போவதில்லை. இவை யாவற்றையும் வாசகரின் பொறுப்புக்கே விடுகின்றேன். எனினும் ஈழத்து சிறுகதை போக்குகளை ஆழப்படுத்துகின்ற இத்தகு சிறுகதைகளால் இவ்எழுத்தாளர் பாராட்டப்பட வேண்டியவராகின்றார் என்பதனை இந்த அணிந்துரையினூடாக கூறுவதில் அவாவுறுகின்றேன்.

இறுதியில் நட்பார்ந்த ரீதியில் ஓரிரு வார்த்தைகள் கூறவேண்டும். இத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளுள் ஒன்றிரண்டு முதல் வரைவுகளாக (1st draft) இருப்பதுபோல் உள்ளன.இவை ஆழத்தையும், உருவ மாற்றத்தையும் வேண்டி நிற்கின்றன.

இயந்திரமயமான புலம்பெயர் வாழ்க்கை சூழல் காரணமாக அவசர அவசரமாக இவற்றை எழுதமுற்பட்ட விளைவுகளே இதன் பின்புலம் என்பதை நானறிவேன்.

எவ்வாறாயினும் இவற்றை தானே ஆய்வு செய்து கொண்டு தொடர்ந்து இத் துறையில் வீறு நடைபோட்டு, திருக்கோவிலை இவர் உலக வரைபடத்தில் சேர்க்கவேண்டும் என்பதே என் வேணவா.

அதுமட்டுமன்றி, புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து கொண்டே, புலம்பெயர்ந்து திரிகின்ற கோவிலூராரிடமிருந்து எதிர்காலத்திலே நல்ல நாவல்களையும் ஈழதுலகு எதிர்பார்த்து நிற்கின்றது.

வாழ்த்துகளுடன்,
பேராசிரியர் செ. யோகராசா.
மட்டக்களப்பு.
27.07.2016

# என்னுரை

எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 1997ம் ஆண்டு அமரர் எஸ்.பொ அவர்களின் மித்ர பதிப்பாக வெளிவந்தது. அது அந்த ஆண்டின் புலம்பெயர் இலக்கியத்துக்கான தமிழ்நாடு கோயாம்புத்தூர் லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசை பெற்றது. இந்த பரிசினைப் பெற்ற முதலாவது ஈழத்து புலம்பெயர் எழுத்தாளர் என்ற பெருமையும் எனக்கு கிடைத்தது. எழுபதுகளிலும், எண்பதின் தொடக்கத்திலும் நான் தினகரன் பத்திரிகையில் நாவல்கள், வீரகேசரியில் சிறுகதைகள், நான் உதவி ஆசிரியராக இருந்த கலாவல்லி சஞ்சிகையில் தொடர் கதை, நேர்காணல், மற்றும் நட்சத்திரமா (சிறுவர்களுக்கான) சஞ்சிகையில் ஒரு தொடர் கதை, என்று எழுதி வந்தேன். எண்பதின் இறுதியில் புலம்பெயர்ந்தபின் லண்டன் புதினம்,தமிழினி,மேகம், ஒரு பேப்பர், பாரிஸ் ஈழநாடு, ஈழமுரசு நோர்வே சுவடுகள், பறை, கனடா உதயன், ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது கதைகள், கட்டுரைகள், கவிதைகள்,பாடல்கள் என்று அன்றைய சமகால நிகழ்வுகள், பிரச்சினைகள் பற்றி எழுதி வந்தேன்.

நீண்ட காலமாக இலங்கைத் தேசிய ஞாயிறு பத்திரிகைகளில் நான் சிறுகதைகள் எழுதவில்லை. ஆனால் கடந்த வருட (2015) இறுதியிலிருந்து இந்த வருட((2016) ஆகஸ்ட் மாதம் வரை நான் பல சிறுகதைகளை எழுதி தினகரன்,தினக்குரல்,வீரகேசரி ஆகிய ஞாயிறு பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். மூன்று பத்திரிகைகளின் (ஞாயிறு) பிரதம ஆசிரியரியர்களான திருவாளர்கள், செந்தில் வேலவர், பாரதி, பிரபாகரன் ஆகியோர் என்னை உற்சாகப்படுத்தினார்கள். அதனால் நேரம், வேலைப்பளு என்று பின்னடிக்காமல் தொடர்ந்து எழுதினேன். அவர்களுக்கு என் நன்றிகள்.

அந்த பத்திரிகைகளில் வெளிவந்த பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பே எனது இந்த இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். இந்த சிறுகதைத் தொகுப்பை நான் முன்னர் உதவி ஆசிரியராக பணிபுரிந்த (இலங்கை வானொலியில் இணைய முன்னர்) கொழும்பு மெய்கண்டான் நிறுவனத்தாரின் கலாவல்லி சஞ்சிகை ஆசிரியர் அமரர். இரத்தினசபாபதி குமரகுருநாதன் அவர்களினதும் அதில் மற்றுமொரு உதவியாசிரியராக இருந்த அமரர் வேலாயுதன் சுகுமார் அவர்களினதும் நினைவாக வெளியிடலாம் என்று, கனடாவில் இருக்கும் மற்றுமொரு முன்னாள் கலாவல்லி சஞ்சிகையின் உதவியாசிரியரான திரு.அமுர்தராஜா. தேவதாசன் அவர்களிடம் கேட்டபோது அவரும் மகிழ்ச்சியுடன் நல்ல ஒத்துழைப்பு தருவதாகச் சொன்னார்.

மறைந்த நண்பர்களுக்காக இந்த நூலை சமர்ப்பணம் செய்வதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டார். அவருக்கு என் நன்றிகள்.

பின்னர் மெய்கண்டான் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.இரத்தினசபாபதி அருள்சோதிநாதன் அவர்களிடம் பேசினேன். அவரும் மகிழ்ச்சியோடு தங்கள் பதிப்பகத்தின் மூலம் வெளியிட இணங்கினார். அவருக்கும் என் நன்றிகள்.

இனி இந்த நூலுக்கு அணிந்துரை ஒன்று தரமுடியுமா? என்று பேராசிரியர் செ.யோகராசா அவர்களிடம் கேட்டபோது அவரும் மகிழ்ச்சியுடன் இணக்கம் தெரிவித்து காத்திரமான ஒரு அணிந்துரையை வழங்கினார். மூன்று பத்திரிகைகளிலும் வந்த பதினைந்து கதைகளையும் படித்து மகிழ்ந்த பின்னர் தனது அணிந்துரையை வழங்கினார். பேராசிரியர் அவர்களுக்கும் என் நன்றிகள்.

மேலும் இந்த நூலுக்கு அழகிய அட்டைப் படம் வரைந்த ஓவியர், மற்றும் பதிப்பகத்தார், எனக்கு கொழும்பில் உதவி ஒத்தாசை புரிந்த அருமை நண்பன் பி.சீதாராமன்,கொழும்பு தமிழ் சங்க தலைவர் என் பாசத்துக்குரிய அண்ணர் "தாயக ஒலி" தம்பு.சிவா அவர்களுக்கும், மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய கூடலுக்கும், அதைச் சேர்ந்த என் உயிருக்கு இனிப்பான சகோதரர் செங்கதிரோன் க.கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கும், மற்றும் இந்த நூலை மட்டக்களப்பு,கொழும்பு, லண்டன், ஒஸ்லோ, கனடா ஆகிய இடங்களில் அறிமுகம் செய்பவர்களையும், ஆய்வுரை செய்பவர்களையும் உள்ளன்போடு நேசிக்கின்றேன். அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

இந்த தொகுப்பில் புலத்திலும், நிலத்திலும் நிகழும் சம்பவங்களை கதைகளின் களங்களாக தெரிவுசெய்து பல பாத்திரங்களின் மூலம் உங்களுடன் உலவ விட்டிருக்கின்றேன். உங்கள் காத்திரமான கருத்துகளும், பகிர்வுகளும், குறை,நிறை பற்றிய குறிப்புகளுதான், என்னை மேலும் பல படைப்புகளை வழங்க வழிவகுக்கும் என்று நம்புகின்றேன்.
உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் என் ஆயிரம் நன்றிகள்.

அன்புடன்
கோவிலூர் செல்வராஜன்.
ஒஸ்லோ/ இலண்டன்
30.07.2016

# சமர்ப்பணம்



இரட்ணசபாபதி குமரகுருநாதன்



வேலாயுதன் சுகுமாரன்

## கலாவல்லி சஞ்சிகை ஆசிரியர் குழு



இடமிருந்து வலம் -

இரட்ணசபாபதி குமரகுருநாதன்
அமுர்தராஜா தேவதாசன்
கோவிலூர் செல்வராஜன்
வேலாயுதன் சுகுமாரன்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அம்மாவின் அசத்தல் | - 01 |
| 02. | தமிழரசி | - 08 |
| 03. | எல்லைக்கிராமங்களின் தொல்லைகள் | - 17 |
| 04. | கண்ணைத் திறக்கணும் சாமி | - 23 |
| 05. | கைவிட்டுப் போன கார் | - 28 |
| 06. | ஊருக்குத் திரும்பணும் | - 37 |
| 07. | சந்தையும் சந்திப்புகளும் | - 42 |
| 08. | அப்பா | - 51 |
| 09. | அச்சங்கள் | - 62 |
| 10. | புதிய தலைமுறை | - 70 |
| 11. | உயர்ந்த உள்ளங்கள் | - 78 |
| 12. | வீரையடி | - 89 |
| 13. | ஒரு ஓடலியின் கனவு நனவாகிறது. | - 97 |
| 14. | எங்கே போய் முட்டிக்கிறது. | - 104 |
| 15. | தலைமுறை இடைவெளி | - 110 |

# அம்மாவின் அசத்தல்

படலை திறக்கும் சத்தம் கேட்டுத் தன் வீட்டுக் கதவை திறந்து வாசலைப் பார்த்தாள் பாக்கியம். வருவது அவள் கணவன் சிவகுரு என்று கண்டதும்.

"என்னங்க நேரத்தோட வந்திட்டீங்க. மழையும் விட்டபாடில்லை என்ன"

"வேறென்ன பின்ன, முந்தநாள் பிடிச்ச மழை, கொஞ்சமும் ஈவு இல்லாம பேஞ்சுகொண்டுதான் இருக்கு. ஆத்துல கரப்பு குத்தவும் முடியல்ல. தண்ணி கழுத்தளவுக்கு போகுது. இண்டைக்கு கறிப்பாட்டுக்கும் ஒண்டும் அம்புடயில்ல. அதுதான் வந்திட்டன்" அலுத்துக்கொண்டான் சிவகுரு.

"சரி,சரி பரவாயில்ல நீங்க வந்ததும் நல்லதாப் போயிற்று. இண்டைக்கு நம்ம மகள் மகாவல்லிர சோதினை முடிவு வருகுதாம். நேற்று காவித்தியாலயத்தில வாத்தியார் சொன்னவராம் என்று மகா சொன்னாள். அவளும் நீங்க போன கையோட எழுந்து, எனக்கு இடியப்பத்துக்கு சம்பல இடிச்சி தந்துபோட்டு பரபரத்து வெளிக்கிட்டிட்டு வந்து, நிண்டனிலையில தேத்தண்ணீய குடிச்சிபோட்டு போயிற்றாள்"

"மெய்தானா புள்ள. என்னவோ அந்த முருகன்தான் கண்ணத் திறக்கணும். ராப்பகலா படிச்சவள். சோறு தண்ணி, தூக்கம் மறந்து படிச்சவள். பாஸ் பண்ணிற்றாள் எண்டால் பெரிய படிப்புக்கு டவுனுக்கல்லோ போகவேணும்!"

"அப்ப அவள் பாசாக கூடாதென்றா சொல்லுறிங்க"

"சே..சே என்ன பேச்சு பேசுறாய் நீ. நான் அப்படி சொல்லல்ல புள்ள. இவ்வளவு படிக்க வைக்கவே நீயும்,நானும் எவ்வளவு கஷ்டப்பட்டிரிக்கிறம்.நீ பொன்னாங்கண்ணி, குப்பைக்கீரை புடுங்கி சந்தையில கொண்டு விற்று சம்பாதிச்சாய் . பிறகு போடிமாரின் வயல்களிலும் போய் புல்லுப் புடுங்கி சம்பாதிச்சாய். காலையில கடைக்கு இடியப்பம், புட்டு அவிச்சு கொடுத்து உழைச்சாய்.. நானும் கூலிவேலை செய்தேன். அது கிட்டாத சமயத்தில ஆத்தில கரப்புக் குத்தி இறால்,மீன் பிடிச்சி விற்று சம்பாதிச்சேன். இப்படி கஷ்டப் பட்டுத்தானே மகாவை இதுவரைக்கும் படிக்க வச்சோம். மகாவும் நம்ம கஷ்டங்களைப்

புரிஞ்சு கொண்டுதானே படிச்சவள். ஏதோ இவ்வளவு கஷ்டத்திலும் அவள உயர் வகுப்புவரை படிப்பிச்சுப் போட்டம் பாக்கியம். என்ன விட நீதான் கூட அவள் படிக்க வேணும் எண்டு கரிசனை பட்டாய்"

"நம்ம பட்ட கஷ்டம் நம்ம பிள்ள படக்கூடாது எண்டுதானே நான் இவ்வளவு துன்பப் பட்டேன். போர் நடந்த காலத்திலும், அவளப் பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டுபோய் விட்டுவிட்டு வயித்தில நெருப்பைக் கட்டிக்கொண்டு இருந்து, பள்ளி கலையிற நேரம் பார்த்து போய் கூட்டிக்கொண்டு வந்தேன். அதை இப்ப நெனைச்சாலும் ஈரக்குலை நடுங்குது. மகாவும், படிப்புல ஆர்வம் காட்டினபடியால் அவளோட வாத்திமாரும் அவள ஊக்கபடுத்தி படிக்கச் சொன்னாங்க. புத்தகம், கொப்பிகள் கூட வாத்திமார் நம்ம மகளுக்கு வாங்கி கொடுத்தது உங்களுக்கு நெனைப்பு இல்லையா"

"ஏனில்லாம புள்ள.. பரமேஸ்வரன் மாஸ்டர் அவளுக்கு நல்ல உதவி செய்திருக்கிறார். உயர்வகுப்பு சோதினை வருவதற்கு முன்னமே வெளி இடங்களில இருந்து நல்ல மாஸ்டர்மார்களை வரவழைச்சு சனி,ஞாயிற்று கிழமைகளில் படிப்பு சொல்லிக் கொடுத்திருக்கிறாங்க. அதற்கு உரிய செலவுகளை எல்லாம் வெளிநாட்டுக்கு போன நம்ம தமிழ் மக்கள் சிலர், கஸ்டத்தில இருக்கிற பிள்ளைகளுக்கு உதவும் நோக்கத்தோட சங்கங்கள் அமைத்து அதனூடாக பல உதவிகள் செய்கிறாங்களாம். பரமேஸ்வரன் மாஸ்டர் அவர்களை தொடர்புகொண்டுதான் இந்த ஏற்பாட்டை செய்தவர்"

"ஓம் ஓம் எனக்கு தெரியும். பிள்ள மகாவும் சொன்னவள். அவளோடு இன்னும் பல பிள்ளைகள் வந்து சனி ஞாயிறு கிழமைகளில் படிச்சவங்களாம். எல்லா பிள்ளைகளும் பாஸ் பண்ண வேண்டும். எண்டுதான் கடவுளை கும்பிட்ட நான்"

"மகா பாஸ் பண்ணினா நம்மளவிட பரமேஸ்வரன் மாஸ்டருக்குத்தான் சந்தோசமாக இருக்கும் இல்லையா பாக்கியம்"

"பின்ன இருக்காதா? அவள் பத்தாம் வகுப்பு நல்லா பாஸ் பண்ணிட்டு வந்தபோது, அவளுக்கு கணக்கும்,விஞ்ஞானமும் நல்லா வரும் எண்டு சொல்லி அதில கூட கவனம் எடுக்க சொன்னவர். விஞ்ஞான பிரிவில் சேர சொன்னவர். அதோட பள்ளியில படிக்கிறதை விடவும், தன்ர வீட்டுக்கும் வரச்சொல்லி அக்கறையோடு படிப்பிச்சவர்.

நம்ம மகாவல்லியில நல்ல நம்பிக்கை கொண்டவர். அவளை எப்படியாவது நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் எண்ட எண்ணம் அவருக்கு இருக்கு. அதனால அவள் பாஸ் பண்ணினால் நீங்க சொன்ன மாதிரி அவர்தான் கூட சந்தோசப் படுவார்"

சிவகுருவும்,பாக்கியமும் தங்கள் மகள் மகாவல்லி பற்றியும், பரமேஸ்வரன் மாஸ்டர் பற்றியும் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர்கள் வீட்டு வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. இருவரும் எட்டிப் பார்த்தார்கள். பரமேஸ்வரன் மாஸ்டர்.

அவருக்கு பின்னால் மகா அமர்ந்து இருந்து இறங்குகிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் கேள்விக் குறியோடு பார்த்துக் கொண்டார்கள். அதே நேரம் பரமேஸ்வரன் மாஸ்டர் மகாவுடன் வந்து கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஒரு சந்தோசத்தின் சாயல் தெரிந்தது.

'வாங்க மாஸ்டர் .. குடைய மடக்கி தாங்க இந்த பக்கம் வைக்கிறன்" என்ற சிவகுரு அவரிடமிருந்து குடையை வாங்கிக்கொண்டான்.

"அம்மா நான் மூன்று 'ஏ' எடுத்து நல்லா பாஸ் பண்ணிட்டேன்" என்று சந்தோசத்தில் தன் தாயைக் கட்டிக்கொண்டாள் மகா.

"அப்பிடியா மகள்.."என்று மகாவை அணைத்துக்கொண்டாள் பாக்கியம்.

"இருங்க மாஸ்டர்" என்று ஒரு கதிரையை எடுத்துப் போட்டான் சிவகுரு. மகா தன் தகப்பன் கைகளைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

"நான் நினைத்ததை விட மிகத் திறமையாக மகா பாஸ் பண்ணி இருக்கிறாள். மாவட்டத்திலே முதலாவதாக வந்திருக்கிறாள். கணிதம், பைஒலோஜி,கெமிஸ்ட்ரி ஆ,அதுதான் விஞ்ஞான பாடங்கள்,மூன்றிலும் 'ஏ' எடுத்து தேசிய அளவிலும் புள்ளி அடிப்படையிலும் நான்காம் இடம் பிடித்து இருக்கிறாள். இதனால் எங்கள் பாடசாலைக்குப் பெருமை சேர்த்து இருக்கிறாள். எனக்கு இவளில் நல்ல நம்பிக்கை இருந்தது. பாஸ் பண்ணுவாள் என்று தெரியும்.ஆனால் இப்படி மகா அதி சிறப்பாக பாஸ் பண்ணுவாள் என்று நான் நினைக்கவில்லை.. ஏன் எங்க ஸ்கூலும் எதிர்பார்கவில்லை.

எங்க பிரின்சிபால் உட்பட இன்று எல்லா மாஸ்டர் மாருக்கும் பெரிய மகிழ்ச்சி. மகாவை சக மாணவ,மாணவிகளும் கூட வாழ்த்திப் பாராட்டியதைப் பார்க்க முடிந்தது. அஃது அவளின் திறமைக்கு, அடக்கத்துக்கு, அமைதிக்கு, எளிமையான நடத்தைக்குக் கிடைத்த பாராட்டுகள் என்றே நான் எடுத்துக்கொண்டேன்" என்று காலையில் பரீட்சை முடிவு வந்தபின் தங்கள் பள்ளிக் கூடத்தில் நடந்த சம்பவங்களைச் சொன்னார் பரமேஸ்வரன் மாஸ்டர்.

பாக்கியத்தின் கண்களில் நீர்வழிய,அவளால் பேசமுடியவில்லை. சிவகுரு பரமேஸ்வரன் மாஸ்டர் சொன்ன விசயங்களிலிருந்து விடுபடவில்லை. வெளியில் வளவு முழுதும் வெள்ளம். இவர்கள் இருவரின் உள்ளங்களிலும் அந்தக் கணத்தில் மகிழ்ச்சியின் வெள்ளப் பெருக்கு ஓடிக்கொண்டு இருந்தது. ஒரு சிறு அமைதிக்கு பின் பாக்கியம் பேசினாள்.

"ஐயா உங்களுக்குத்தான் நாங்க நன்றி சொல்ல வேணும். மகா நல்லா படிப்பாள் என்று சொல்லி அவளை ஊக்கப் படுத்தி, இவ்வளவு தூரம் கொண்டுவந்தது நீங்கதான். எங்களுக்கு கஷ்டமாக இருந்த நேரங்களில் இவளின் பள்ளிக்கூட செலவுகளைக் கூட நீங்க நிறைவேற்றி கொடுத்தீங்க. நீங்க வருவதற்கு முன்னும் நாங்க பேசிக்கொண்டோம் மகா பாஸ் பண்ணினால் எங்களைவிட நீங்கதான் அதிகமா சந்தோசப் படுவீங்க எண்டு"

""கண்டிப்பா எனக்கு சந்தோசம்தான். ஆனா நான் ஒன்றும் பெரிசாக மகாவுக்கு செய்யவில்லை. ஓர் ஆசிரியராக என்ன செய்யவேண்டுமோ அதைதான் செய்தேன். இவ, மற்றப் பிள்ளைகளை விட கொஞ்சம் அதீத கெட்டிக்காரி என்று அடையாளம் கண்டும் உங்க குடும்ப நிலை அறிந்தும் என் பிள்ளைபோல் நினைத்துதான் இவளுக்கு சில உதவிகள் செய்தேன்.. அதை உதவி என்று சொல்வதைவிட சில அவளின் தேவைகளைச் செய்து கொடுத்தேன். மற்றப்படி மகாவின் அதீத நம்பிக்கையும், இவளுக்கு இருக்கும் அதி புத்திசாலித் தனமும்தான் இன்று இவளுக்கு இப்படி ஒரு வெற்றியை கொடுத்திருகிறது. இன்னும் சொல்லப்போனால் இது ஒரு தாய்க்குக் கிடைத்த வெற்றி என்றும் இதை சொல்ல வேண்டும்"

"நீங்க இப்படி சொல்லுறது உங்கட பெரிய மனசக் காட்டுதுங்க அய்யா. என்ன இருந்தாலும் எங்கட புள்ள உங்கட புள்ளமாதிரி என்று சொன்னது எங்களுக்கு பெரிய சந்தோசம்.பலபேர் கஷ்டத்தின் நிமித்தம் தங்கட பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிறதில்ல. இந்தக் கிராமத்தில எங்களைபோல வசதி இல்லாத குடும்பங்கதான் கனக்க இருக்குது.

நானும் எவ்வளவு கஷ்டப் பட்டாலும் என் மகளை படிபிச்சுப்போட வேணும் எண்டு வைராக்கியதோடு இருந்தன். என்ர புள்ளையும் கஷ்டப்பட்டு படிச்சாள். இரவில அவள் சிமினி விளக்கில கண்விழிச்சி நீண்ட நேரம் படிக்கும்போது நான் எத்தனைநாள் மனசு நொந்து கண்ணீர் விட்டிருக்கிறன். ஒரு நல்ல மேசை,கதிரை கூட அவளுக்கு இல்ல. அவளோடு படிக்கிற மற்றப் பிள்ளைகளுடன் ஒருநாளும் தன்னை ஒப்பிட்டு கதைக்க மாட்டாள். தனக்கு அது வேணும்,இது வேணும் என்று ஒருநாளும் அவள் கேட்டதில்ல. ஏதும் நாங்க வாங்கி கொடுத்தால்தான். பள்ளிகூட சட்டைகள் ஆக இரண்டு சோடிகள்தான் வைத்திருக்கிறாள். அதைக்கூட தானே கழுவி, காயப்போட்டு இரவில் படுக்கும்போது தலவாணிக்குக் கீழ மடிச்சு வச்சிருப்பாள்"

பார்வதி இப்படி சொல்லும்போதே அவளுக்கு அழுகை வந்து விட்டது. மகா ஓடிவந்து தாயை அணைத்துக்கொண்டாள்.

"அம்மா .என்னம்மா ...அதெல்லாம் என்னத்துக்கு இப்போது சொல்லுறீங்க. விடுங்க,,அதுதான் நீங்க நினைத்தபடி நான் பாஸ் பண்ணிட்டன்தானே. நீங்க இனி சந்தோசமாக இருக்க வேணும்" மகா சொல்லும்போதே பரமேஸ்வரன் மாஸ்டர் குறுக்கிட்டார்.

"அதுதானே நீங்க நினைத்ததைச் சாதிச்சுப் போட்டீங்க. இந்த ஊரே இனி உங்களைப் பார்த்து பெருமைப்படப் போகின்றது. மகா சொல்லுறமாதிரி நீங்க இனி அழுகிற நேரமில்ல இது. சந்தோசப்படுங்க." என்ற பரமேஸ்வரன் மாஸ்டர் எழுந்து கொண்டார். மழையும் லேசாக விட்டமாதிரி இருந்தது.

"என்ன மாஸ்டர் எழுந்திட்டீங்க. இருங்கோ தேத்தண்ணீ குடிச்சிட்டுப் போகலாம்"

சிவகுரு சொன்னதும். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு "ஐயா வந்ததும் கதையில இருந்திட்டன். இருங்கோ இந்தா போட்டுக்கொண்டுவாறன்"

"இல்ல..ஒன்றும் வேண்டாம். கேட்டதற்கு நன்றி, நான் ஸ்கூலுக்கு போகவேணும். அங்கு எனக்கு இன்னும் கொஞ்சவேலைகள் செய்ய இருக்கின்றன. மகாவின் இந்தப் பரீட்சை முடிவு எனக்கு மட்டுமல்ல எங்கள் பாடசாலையில் சகலருக்கும் சந்தோசத்தை தந்திருக்கிறது. மகாவை

பாராட்டி கௌரவிக்க எங்கள் அதிபர், மற்றும் ஆசிரியர்கள் விரும்புகிறார்கள். அதுபற்றி நான் அவர்களுடன் பேசவேண்டி இருக்கிறது. நான் புறப்படுகிறேன்.நீங்க குடுபத்துடன் சந்தோசமாக இருங்கள்" என்ற பரமேஸ்வரன் மாஸ்டர் புறப்பட தயாரானார். சிவகுரு, மூலையில் மடக்கி வைத்திருந்த குடையை எடுத்து அவரிடம் கொடுத்தான். மாஸ்டர் விடைபெற்றுகொண்டார்.

அவர் போன பின்பு தாயையும்,தகப்பனையும் சேர்ந்து நிற்கச்சொல்லி இருவரின் பாதங்களையும் தொட்டு வணங்கினாள் மகாவல்லி. அக்கறையுடன் தன்னைப் பார்த்துகொண்ட தன் பெற்றோருக்கு தனது பரீட்சை முடிவு தந்த வெற்றியின் மூலம் பெருமை சேர்த்துக் கொடுத்துவிட்டாள் அவள். குறிப்பாக அவளின் தாய் பட்ட சிரமங்கள், கஷ்டங்கள்தான், மகா என்னும் மகாவல்லியை இன்று வெற்றிக்கனியைபறிக்க வைத்திருக்கிறது.

கடைக்குக் கொடுப்பதற்கு இடியப்பம். புட்டு அவித்து கொடுப்பதற்காக அதிகாலையில் எழும்பும் தன் தாய், தன்னையும் எழுப்பிவிட்டு படிக்கச் சொல்லுவாள். கூடியவரையில் தனக்கு எந்த வேலையும் தராமல் எல்லாவற்றையும் தானே தனித்துச் செய்து முடித்து விட்டுத், தன்னையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, வீதி முனையில் இருக்கும் கடைக்குப் போய் தான் தயாரித்த உணவுகளைக்கொடுத்துவிட்டு, பின் வயல்பக்கம் சென்று இலைக்கறி பறித்து அவற்றை சந்தையில் கொண்டுவிற்று, அரிசி, கறிசாமான் வாங்கி வந்து சமையல் செய்து வைத்து தான் வரும்வரைக்கும் காத்து இருக்கும் தாயை நினைத்து எப்பொழுதும் மனசுக்குள் பெருமைப்படுவாள் மகா.

வயல் வேலைக்கு யாரும் கூப்பிட்டாலும் அதற்கும் சென்றுவருவாள். இதெல்லாம் தனக்காகதான் தன் தாய் செய்தாள் என்று தனது அடிமனதில் பதித்துக் கொண்ட மகாவின் நெஞ்சில் எப்பொழுதும் ஒரு வலி இருந்தது. அந்த வலியையே வைராக்கியமாக்கிக் கொண்டு ஒருவித வெறியோடும் தன்னம்பிக்கையோடும் படித்து, தன் தாய்,தந்தை,ஏன் தன் ஊருக்கும் பெருமை தேடி தந்திருக் கிறாள்.

பரமேஸ்வரன் மாஸ்டர் சென்றபின்னர் செய்தி அறிந்து பெய்து கொண்டு இருக்கும் மழையையும் பார்க்காமல் பலர் பாக்கியத்தின் வீட்டுக்கு வந்து அவளையும், அவள் மகளையும் பாராட்டி சென்றார்கள்.

சற்று நேரம் கழித்து,மீண்டும் வந்த பரமேஸ்வரன் மாஸ்டர் , அடுத்த இரண்டு நாட்களின் பின்னர், மகாவுக்கு ஒரு பாராட்டு விழா தங்கள் பாடசாலையில் நடைபெற இருக்கிறது என்றும் அதற்கு ஊரிலிருந்தும் முக்கிய பெரிய மனிதர்களை அழைக்க இருப்பதாகவும் மகா, பல்கலைக் கழகம் சென்று வைத்தியக் கலாநிதி பட்டப் படிப்பு மேற்கொள்ள அனைத்து உதவிகளையும், செலவுகளையும் செய்ய வெளிநாட்டில் இருக்கும் ஒரு தமிழர் தன்னார்வ தொண்டு அமைப்பு முன் வந்திருகிறது என்ற நல்ல செய்தியையும் சொல்லிச் சென்றார்.அவர் சென்ற பின்னர் மகிழ்ச்சியான மனசுடன் படபடத்துச் சமையல் செய்து தன் மகளுக்கும்,தன் கணவனுக்கும் பரிமாறினாள் பாக்கியம். பொழுது மறைந்ததும், வழமைபோல் தன் அன்றாட வேலைகளில் மூழ்கி விட்டாள்.

இரவு படுக்கும்பொழுது தன் மகள் மகாவை அழைத்து தன் மடியில் கிடத்தி அவள் தலையை கோதிக் கொடுத்தாள். தாயின் அந்த வருடல் கொடுத்த சுகத்தில் அப்படியே கண்ணயர்ந்து போனாள் அந்த வருங்கால வைத்தியக் கலாநிதி.

---

# தமிழரசி

சமையலறையில் காய்கறி நறுக்கிக்கொண்டிருந்த சரஸ்வதி, வாசலில் மோட்டர் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்டு பரபரத்தாள். மகளின் கல்யாண விசயமாக தரகர் கணபதிப்பிள்ளையரிடம் காலையிலே அவள் கணவர் கந்தவனம் சென்றிருந்தார். அவர்தான் வந்துவிட்டார் என்ற பதட்டம் அவளுக்கு உள்ளூர ஏற்பட்டது. நறுக்கிய முருங்கைக்காய்களை அப்படியே போட்டுவிட்டு வாசலுக்கு விரைந்தாள். ஆனால் அவளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. வாசலில் மோட்டார் சைக்கிளில் வந்தது, சரஸ்வதியின் தம்பி தம்பிராசு.

"அட தம்பி நீயாடா..வா.வா." என்று வரவேற்றாள் "ஏனக்கா வேறு யாரையும் எதிர்பாத்து இருக்கிறியா?"

"ஓமடா, உன்ர அத்தார் தரகர் கணபதிபிள்ளையரை சந்திக்கப் போனவர். அவர்தான் வந்திட்டாரோ என்று பார்த்தன்" என்று சொல்லி சலித்துக்கொண்டாள்.

"என்னக்கா, ஏதும் நல்ல சம்பந்தம் ஏதும் இருக்கிறதாமோ, இப்பெல்லாம் டாக்டர், எஞ்சினியர்தானே எல்லோரும் தேடித்திரியிறாங்க. போனகிழமையும் ஒரு கல்யாணம் நடந்தது. டாக்டர்தானாம் மாப்பிள்ளை. நம்மட கடைக்கார ராசலிங்கதின் தம்பி பொண்ணு. அவள் ஒரு டீச்சர். ஆனா ராசலிங்கதின் தம்பி நிறைய சீதனம் கொடுத்து அந்த மாப்பிள்ளையை எடுத்துவிட்டார்"

" எந்த இடத்து மாப்பிள்ளையாம்,என்ன சீதனம் கொடுத்தவங்களாம்.ஏதும் விபரம் அறிஞ்சயோ தம்பி" சரஸ்வதி ஆர்வத்துடன் கேட்டாள்.

"அக்கா சீதனத்தைக் கேட்டால் நீ தலை சுற்றி விழுந்திடுவாய்"

'நிறைய சீதனம் கொடுத்தவங்களாமோ"

"பின்ன, காசு ரொக்கம் அம்பது லட்சம், மாடிவீடு புதிதாக கட்டி அனைத்து தளபாடங்களுடனும், டிவி,இன்டர்நெட், என்று அசத்தலாக கொடுத்து இருக்கிறார்கள்."

"அட,அப்படியே" ஆச்சரியப்பட்டாள் சரஸ்வதி.

"ம்..இதற்கே நீ இப்படி வாயைப் பிளந்தையெண்டால் எப்படி? மிச்சத்தையும் கேளு."

" வேறு என்னடா தம்பி சொல்லன்"

"மாப்பிள்ளை டாக்டர் என்றபடியால் அவருக்கு புதுக் கார் ஒன்றும் கொடுக்கவேண்டும் என்று மாப்பிள்ளைத்தரத்தார் கேட்டிருக்காங்க. கடைக்கார ராசலிங்கத்தின் தம்பி சுந்தரவேல் அதற்கும் ஓம் என்று சொல்லி எழுபது லட்சத்துக்கு ஒரு காரும் எல்லோ சீதனமா கொடுத்திருக்கிறார்." என்று தங்கராசு சொன்னதும் சரஸ்வதி மூச்சுவிட சற்று ஆசுவாசப் பட்டாள்.

"என்னக்கா ஒரு மாதிரி இருகிறாய்?"

"இல்லடா தம்பி இவ்வளவு சீதனம் கொடுத்து ஒரு மாப்பிள்ளை எடுக்க வேண்டி இருக்குதே!"

"அக்கா உனக்குத் தெரியாது இப்பெல்லாம் ஒவ்வொருதரத்தில் தான் மாப்பிள்ளைகள் இருக்கிறாங்களாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரேட் இருக்குதாம். டாக்டர் என்றால் இவ்வளவு,எஞ்சினியர் என்றால் இவ்வளவு, ஏன், டீச்சர்,கிளரிக்கல் என்றாலும் அவற்றுக்கும் ஒரு ரேட் இருக்குதாம்" என்று நடைமுறை மாப்பிள்ளைகளின் ரேட்டுகளைச் சொன்னான் தங்கராசு.

"என்னமோடா தம்பி நம்மட தமிழரசிக்கும் ஏதும் நல்ல சம்பந்தம் ஒன்று வந்தா அந்த கதிரமலையானுக்கு நேர்த்தி வைச்சு நிறைவேற்றுவன். நேற்று நம்மட கணபதிப்பிள்ளை தரகர் போன் பண்ணி, ஒரு நல்ல சாதகம் இருக்கிறதாம். வந்து பாருங்கோ என்றார்.அதுதான் உங்க அத்தான் காலையில தேத்தண்ணியக் குடிச்சுப்போட்டு போனவர். சாப்பிடவும் இல்ல. புட்டும்,சம்பலும்,சொதியும் வச்சனான். அதை பரிமாறுவதற்கு இடையில கிளம்பிட்டார்" என்றாள் சரஸ்வதி.

அத்தோடு, நில்லாமல் தன் தம்பிக்கு தான் செய்து வைத்திருந்த காலை உணவையும் கொஞ்சம் போட்டுக்கொடுத்தாள். தங்கராசு, அக்காவின் சாப்பாடு என்றால்,தன் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்தாலும் ஒரு பிடி பிடிப்பான். ஏனென்றால் சரஸ்வதியின் கைச் சமையல் அப்படி.

அவன் சாப்பிட்டு கை கழுவும்போதே வீட்டு வாசலில் ஸ்கூட்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து தமிழரசி இறங்கி வந்தாள்.

தங்கராசுவைக் கண்டதும், "வாங்க மாமா. எப்படி இருக்கீங்க. உங்க அக்காவின் சமையல் உங்க வீட்டுக்கு மணத்திட்டாக்கும் என்ன.. இல்லையா வழமைபோல் கலாய்த்தாள் தமிழரசி "தமிழ் நீயும் ஒருநாள் கல்யாணம் பண்ணிக்கொண்டு போனால் சமைக்கத்தானே வேண்டும். அப்போதும் நான் வந்து என் மருமகளின் கைப்பக்குவத்தை பார்ப்பன்" என்று ஒரு பொடி வைத்து பேசினான் தங்கராசு.

"மாமா நான் எனக்குப் பிடித்தமாதிரித்தான் சமைப்பன். அம்மா மாதிரி ஒரு தேங்காய் பால் புளிந்து சொதி,குழம்பு,பால்கறி என்றெல்லாம் வைக்கமாட்டன். இப்பெல்லாம் இன்ரநெற்றில் நல்ல சமையல் குறிப்புகள், சமையல் செய்யும் முறைகள், என்பனவற்றை பார்க்கமுடிகிறது. அதெல்லாம் நான் பார்த்து,படித்து எனக்குப் பிடித்ததை நானே செய்துகொள்வேன். அம்மாவின் சமையல் பழங்காலத்து சமையல். அது எனக்கு பிடிக்காது" என்று அம்மாவை வம்புக்கு இழுத்தாள்.

"சொல்லுவாடி, இப்ப சொல்லுவாய். இறால் பால்பொரியல் , வெட்டுமீன் குழம்பு, மான் இறைச்சிக் கறி, முருங்கை இலை சுண்டல், குப்பைக்கீரை கடையல் என்று நல்லா இச்சிக்கொட்டி சாப்பிடும்போது, அம்மாட சாப்பாடு சுப்பர் சுப்பர் என்று சொல்லுவாய். இப்பதான் இந்த டிவில, அதில, இதில வாற கன்றாவிகளை பார்த்துப்போட்டு வந்து அடுப்படியில ஏதோ செய்யிறாய்" சரஸ்வதியும், மகளுக்கு ஏட்டிக்குப் போட்டியாக பேசினாள்.

ஆனால், மகளின் புதிய சமையல் முறைகளை சரஸ்வதி ஆர்வத்தோடு பார்ப்பாள். தன் மகளில் அதீத பாசம் வைத்திருப்பவள். மகளை ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு கட்டிக் கொடுக்க வேண்டும். ஊரில் உள்ள பலரும் தங்கள் மகள்மாருக்கு நல்ல மாப்பிள்ளைகள் தேடிக்கட்டிக் கொடுத்து விட்டார்கள்.தானும்,தன் மகளுக்கு தேடியதையெல்லாம் , மகள் தட்டிக் கழித்துக்கொண்டு தனக்கு இப்போது திருமணம் வேண்டாம். சீதனம் கொடுத்து பார்க்கும் மாப்பிள்ளை தனக்கு வேண்டாம் என்றல்லோ சொல்லிக் கொண்டு இருக்கிறாள். ஆனால் பெற்ற பிள்ளைக்கு நல்ல

மாப்பிள்ளை பார்த்துச் செய்வது, அதுவும் அந்தஸ்துக்கு தக்கபடி செய்வது தங்கள் கடமை அல்லோ என்று நினைப்பவள்தான் சரஸ்வதி.

தனது சொந்தங்களின் பிள்ளைகளுக்கு நல்ல மாப்பிள்ளைகள் கிடைத்திருக்கின்றன, தன் மகளுக்கும் அப்படி கிடைக்க வேண்டும் என்று எண்ணுவதில் தப்பிலையே என்று தான் எண்ணுவதில் தவறில்லையே.

ஆனால் தமிழரசி வித்தியாசமான பெண்ணாக இருக்கிறாளே. என்ற கவலை சரஸ்வதிக்கு இருக்கிறது. பல சம்பந்தங்கள் வந்தன. அதையெல்லாம் தமிழரசி வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். அவளுக்கு இந்த டாக்டர் ,எஞ்சினியர், என்று அலைவது சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவர்களின் பெற்றோர்கள் சீதனம் வாங்க வேண்டும் என்றே இருப்பவர்கள்.ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம் என்ற கருத்துக் கொண்டவள்.

ஓர் அரசு ஊழியர், அல்லது ஒரு கணக்காளர், அல்லது ஒரு பொதுநல சேவையில் நல்ல உத்தியோகத்தில் இருப்பவர்,இவர்களும் நல்ல மாப்பிள்ளைகள்தானே என்று எண்ணுபவள் தமிழரசி. அவள் எதையும் வெளிப்படையாக பேசக் கூடியவள். நன்றாக படித்துப் பட்டம் பெற்று வலயக் கல்வி பணியகத்தில் உதவிப் பணிப்பாளராக இருக்கிறாள். மாணவ சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவள்.முற்போக்கு சிந்தனை உடையவள். நிறைய வாசிப்பவள்.

நேரம்கிடைக்கும்போது பெண்ணியம் பற்றி கட்டுரை,கவிதை எழுதுபவள். யாருடனும் எதையும் நேருக்கு நேராக பேசக் கூடிய சுபாவம் கொண்டவள்.

"அக்கா நான் புறப்படுறன்..தமிழ் நான் போயிட்டு வாறன்" தம்பிராசு கிளம்பத் தயாரானான்.

"ஏன் , மாமா அவசரம். இன்று சனிக்கிழமைதானே, இருந்து மத்தியானம் சாப்பிட்டுவிட்டு போங்களன்"

"இல்ல தமிழ், ஒரு வேலை இருக்கு நான் கல்லுக்குவாரி வரைக்கும் போயிட்டு வரணும்,நான் வாறன்" சொல்லிவிட்டு புறப்பட்டு போயிட்டான் தங்கராசு. அவனும்போக கந்தவனத்தாரின் மோட்டார் சைக்கிளும் வந்து நின்றது.

குசினிக்குள் இருந்த சரஸ்வதி வாசலுக்கு வந்து கணவனை கேள்விக் குறியோடு பார்த்தாள். கந்தவனத்தாரும் ஆறஅமர வந்து ஆசுவாசமாகத்

தன் சாய்மனைக் கதிரையில் சாய்ந்துகொண்டு, "சரசு கொஞ்சம் தண்ணீ கொண்டாவன் குடிக்க" கேட்டார்.

"நீங்க காலையில சாப்பிட இல்லத்தானே வாங்களன் சாப்பிட"

"சாப்பிடத்தான் போறன்.முதல்ல கொஞ்சம் தண்ணீ தா குடிக்க"

செம்பில தண்ணீர் கொண்டு கொடுத்துவிட்டு,அவர் பக்கத்திலேயே நின்றாள்.

கந்தவனத்தாரும் அண்ணாந்து தண்ணீர் குடித்துவிட்டு, ஏவறை விட்டுக்கொண்டே சாய்மனைக் கதிரையில் மீண்டும் சாய்ந்துகொண்டார். சிறிது நேரத்தில் எழுந்துகொண்டார்.

"என்னங்க சாப்பிட வாங்க..காலையில குடிச்ச தேத்தண்ணியோட இருக்கிறீங்க"

"சரி சாப்பாட்ட எடு... இவள் பிள்ளைய எங்க காணயில்ல.. வெளியில ஸ்கூட்டி நிற்குது"

"அவள் குளிக்கிறாளாக்கும். சனிக்கிழமையில அவள்ர மரக்கறித் தோட்டத்துக்கு போயிட்டு வாறவள்தானே.அங்கு சும்மாவே இருந்திருப்பாள்.கொச்சிமரங்கள்,வெண்டி மரங்கள், கத்தரி மரங்கள் என்று பார்த்து.... பேசி,தோட்டக்காரன் சிவலிங்கத்துடன் சேர்ந்து தண்ணீயுமல்ல பாச்சிப்போட்டு வந்திருப்பாள்.அதுதான் வந்ததும் வராததுமாக போய் குளிக்கிறாள்"

"சரி,அவள் குளிக்கட்டும் நீ வா சாப்பாட்டை எடு" தட்டை எடுத்து வைத்து சாப்பாட்டைப் போட்டுக்கொண்டே கேட்கத் தொடங்கினாள்.

"என்னங்க கணபதிப்பிள்ளையர் ஏதும் நல்ல செய்தி சொன்னவரா"

"ம்..ம்ம். சொன்னவர்தான்..ஆனா..." என்று இழுத்தார்..

"என்னங்க...சொன்னவர்" பதட்டத்துடன் கேட்டாள்.

"மாப்பிள்ளை நீ தேடினமாதிரி டாக்டர்தான். முனைக்காட்டை சேர்ந்தவராம்.குடும்பத்தார் போர்காலங்களில் சிரமப்பட்டு,பின்னர் புளியந்தீவுக்கு வந்து இருந்தவங்களாம். மாப்பிள்ளைக்கு ஒரு தமக்கையும், இரண்டு தங்கச்சிமார்களுமாம். தமக்கை கலியாணம் கட்டிட்டாவாம்.தங்கச்சிமார் படிக்கிறாங்களாம். மாப்பிள்ளைக்கு நல்ல பொண்ணு, நல்ல சீதனத்துடன் பார்க்கிறாங்களாம்.
பொண்ணு எந்த ஊர் என்றாலும் பிரச்சினை இல்லையாம் வீடு மட்டக்களப்புல கொடுக்க வேணுமாம். இதைத்தான் சொன்னவர் கணபதிப்பிள்ளையர்.
"என்ன சீதனம் கேட்கிறாங்களாம்..கனக்கவே" தயக்கத்துடன் கேட்டாள் சரஸ்வதி.

"ம்ம்.ம். பதில் சொல்லாமலே புட்டை மென்றுகொண்டு இருந்தார் கந்தவனம். சாப்பிட்டுவிட்டு எழுந்த கந்தவனம், மீண்டும் தன் சாய்மனைக் கதிரைக்கு வந்து சாய்ந்து கொண்டார்.
சரஸ்வதி சமையல் அறைக்குச் சென்று தான் நறுக்கிய காய்கறிகளை எடுத்துக்கொண்டு மண்டபத்துக்குள் வந்து கந்தவனத்தாரின் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள்.

கந்தவனத்தாரின் முகத்தில் எந்த சலனமும் இல்லை. ஆனால் அவர் சரஸ்வதியின்நடவடிக்கைகளை கவனிக்கத் தவறவில்லை. அவளின் மனசு அவருக்கு தெரியாதா என்ன?. காய்களை நறுக்கிக்கொண்டே சரஸ்வதி கேட்டாள்.

"என்னங்க எவ்வளவு சீதனம்.என்னென்ன கேட்கிறாங்களாம்" கந்தவனத்தார் ஒரு செருமலுடன் சொன்னார்,

"காசாக ஐம்பது லட்சம் தரணுமாம். மட்டக்களப்பில புது வீடு தரணுமாம். பொண்ணுக்கு நகைகள்,குறைஞ்சது முப்பது பவுண்கள் போடணுமாம். இனி மாப்பிளைக்கு புதிதாக வந்திருக்கிற கார் வாங்கி கொடுக்கணுமாம். கல்யாணத்தை கோவிலில செய்யாமல் மண்டபத்தில மணவறை போட்டுப் பெரிய அளவில செய்யணுமாம்" என்று சொல்லி முடித்ததும் அவருக்கு மூச்சு வாங்கியது.

"அப்பாடா இவ்வளவு கேட்கிறாங்களா போன கிழமையும் ஒரு கல்யாணம் நடந்ததாம். நமது கடைக்கார, ராசலிங்கதின் தம்பி பொண்ணுக்கு. இப்படிதான் சீதனம் கொடுத்து தடபுடலாக

செய்தாங்களாம். தம்பி தங்கராசு சொன்னான். என்னங்க நீங்க என்ன சொல்லிட்டு வந்திருக்கீங்க"

"நான் என்னத்த சொல்ல. வீட்ல பேசிட்டு முடிவு சொல்லுறன் என்று வந்தன்"

"என்னங்க நாம டவுன்ல கட்டின வீடும் முடிஞ்சுதானே.. பிறகு, என்ர நகைகளை அழிச்சு புதிய நகைகள் செய்யலாம். காசி ஐம்பது லட்சத்தையும், எப்படியும் கொடுத்திடலாம்.

கல்யாணத்தையும் மண்டபத்தில சிறப்பா செய்திடலாம் என்னங்க.."
"ம்ம் ..ம்..."

"அந்தக் காருக்கு எவ்வளவுங்க முடியும்"

"ஆ, அதற்கு தொண்ணூறு லட்சம் முடியும். அதையும் உங்கட பதினைந்து ஏக்கர் நெற் காணியை விற்றுப் போட்டு வாங்கி கொடுத்திடலாம் இல்லையா.."

அறைக்குள் இருந்து வெளியே வந்துகொண்டே சற்று உரத்த குரலில் சொன்னாள் தமிழரசி சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த கந்தவனத்தார் எழும்பி இருந்துகொண்டே,

"தமிழ், நாங்க பேசினதெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தியா மகள்"

"ஓமோம் நான் கேட்டனான்.நான் குளித்து வெளிக்கிடும்போது உங்க பேச்சு எனக்கு கேட்டது.

நான் ஒட்டுக் கேட்கவில்ல" சற்று எரிச்சலுடன் சொன்னாள்.

"பிள்ள, அம்மாவின் விருப்பம்தான் இது. உனக்கு தெரியும்தானே அவ எப்படியும் உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து கட்டி வைக்க வேணும் என்ற குறியாக இருக்கிறா. என் விருப்பமும் அதுதான். அது தான் நான்

கலையில் தரகர் வீட்டுக்கு போய் வந்தனான்" கனகசபையின் குரல் தளுதளுத்தது.

"அப்பா நான் உங்களுக்கு பல தடவைகள் சொல்லி விட்டேன். எனக்கு டாக்டரோ,எஞ்சினியரோ தேடத் தேவையில்லை என்று.நானும் படித்து பட்டம் வாங்கி அரசாங்கத்தில் ஒரு நல்ல பதவியில இருக்கிறன். எனக்கு என்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இருக்கு. முன் பின் தெரியாத ஒருவரை நான் கல்யாணம் கட்டிப்போட்டு என்னால அவஸ்தைபட்ட முடியாது. கஷ்டப்பட்டு மனசு பாதிக்கப்பட்டு பின் பிரியும் நிலை எனக்கு வேண்டாம் அப்பா" உறுதியாக சொன்னாள்.தமிழரசி. "தமிழ் நமது சொந்தங்கள் எல்லோரும் அவர்கள் பொண்ணுகளுக்கு இப்படி நல்ல மாப்பிள்ளை தானே மகள் பார்த்து செய்து வைக்கிறாங்க. நாங்களும் உனக்கு அப்படி செய்ய வேணாமா" சரஸ்வதி கண்கலங்க கேட்டாள்.

"எதம்மா நல்ல மாப்பிள்ளை. நீங்க பேசினமாதிரி, ரொக்கமும், காரும், வீடும், நகையும் வாங்கிக்கொண்டு தனது சுகத்துக்காக ஒரு பெண்ணையும் வாங்க ஆசைப்படுபவன் நல்ல மாப்பிள்ளையா? சொந்தக்காலில் நிற்பவன், சுயமரியாதை கொண்டவன், பேரம் பேசாமல் நல்ல வாழ்க்கை துணை கிடைத்தால் அதை வரமாக நினைத்து பேணுபவன். திருமணதிற்குப் பின் தன் மனைவியுடன் கருத்துகளைப் பகிர்ந்து, கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொண்டு பின்னர் வாழ்க்கையை இருவரும் சேர்ந்து கட்டி எழுப்பவேண்டும் என்று நினைப்பவன் தான் என்னைப் பொறுத்தவரையில் நல்ல மாப்பிள்ளை. வெறுமனே காசுக்கும்,காருக்கும்,வீடுக்கும் கட்டிலில் படுப்பதற்கும் காத்துக் கிடப்பவன் நல்ல மாப்பிள்ளை இல்லை. புரிஞ்சு கொள்ளுங்கள். மற்றவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக நீங்கள் ஏன் செய்ய வேண்டும். டவுன்ல அப்பா கஷ்டப்பட்டு வீடு கட்டி இருப்பது, நாம் எல்லோரும் சந்தோசமாக வாழத்தான். அதில வந்து இன்னொருத்தர் ராஜ வாழ்க்கை வாழவோ, அதிகாரம் செய்வதற்கோ அல்ல.

அந்த வீட்டில உள்ள ஒவ்வொரு கல்லும், தூணும், கதவும், யன்னலும் அப்பாவின் இரத்தத்தில, வியர்வையில உருவானது. அவர் ரசித்து ரசித்து கட்டிய வீட்டில என்னோடு நீங்களும் அப்பாவும் கடைசி வரை வாழணும். எனக்கு முன்பின் தெரியாதவனுக்கு, என்னைக் கொடுத்துவிட்டு நீங்கள் போவதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். எனக்கு கல்யாண வயசு வந்து விட்டது என்பதை நான் உணர்கிறேன். பெற்றவர்களுக்கும் தன் மகளை ஒரு நல்ல மனிதரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதும் இயல்புதான். ஆனால் அந்த நல்ல மனிதர் தங்கள் மகளுக்கு பிடிக்குதா என்று பார்க்கவேண்டும். வெறுமனே வரட்டுக் கௌரவத்துக்கும், மற்றவர்களுக்காகவும்,சொந்தங்கள் சுற்றங்கள் செய்கிறார்களே என்பதற்காக செய்வது என்னை கல்லைக் கட்டி கிணத்தில்

தள்ளுவதற்கு சமன். அம்மா எனக்கு பிடித்தமான துணையை நானே சொல்லுறன். அவரை எனக்கு கட்டி வையுங்க. அங்கே பேரம் பேசவோ சீதனம் கேட்கவோ ஆட்கள் இல்லை. ஆனால் உங்க மகளின் விருப்பும், சந்தோசமும் அங்கு இருக்கும்.

அம்மா டாக்டர், எஞ்சினியர் என்று தேடி உங்க நேரத்தை வீணாக்கி அப்பாவையும் அலைய வைக்க வேண்டாம். நான் சொல்வது உங்களுக்கு புரிஞ்சிருக்கும் என்று நினைக்கிறன். ஒன்றும் யோசிக்க வேண்டாம்.உங்க பொண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைப்பான்.நான் ஒரு அலுவலா வெளியில்போகிறேன். மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்திடுவன்" என்ற தமிழரசி தன் ஸ்கூட்டியை ஸ்டாட் செய்து கொண்டு கிளம்பினாள். அவள் போவதையே இருவரும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

சரஸ்வதியின் முகத்தில் ஒருவித சோகம் இருந்தது.

கந்தவனத்தாரின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

# எல்லைக் கிராமங்களின் தொல்லைகள்

அடைமழை பெய்து அந்த கிராமங்களின் இயல்பு வாழ்க்கையை இல்லாமல் செய்துவிட்டது.பார்த்த பக்கமெல்லாம் வெள்ளம். பாதைகளில் வீதிகளில் கூட தண்ணீர் மேவி நிற்கிறது. அந்த மக்களின் அன்றாட வேலைகள் எல்லாம் முடக்கப்பட்டுவிட்டன. நாடு முழுவதும் பெய்த மழை கொஞ்சம் அதிகமாகவே கிழக்கில் கொட்டித் தீர்த்திருக்கிறது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் மழையின் அழிச்சாட்டினம் அதிகமாக இருக்கிறது... தொடர்ந்து பெய்து கொண்டுதான் இருக்கிறது.

சிவரூபன் எடுத்துக் கொண்டிருக்கும் "எல்லைக் கிராமங்களின் தொல்லைகள்" என்ற ஆவணப் படத்துக்கான படப்பிடிப்பு இன்று மிக தொலைவில் இடம்பெற இருப்பதால் அவன் மிகவும் பதட்டமாக இருக்கிறான். விடாமல் பெய்து கொண்டிருக்கும் மழையினால் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.
மனச் சோர்வுடன் வீட்டின் வரவேற்பு கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டு இருந்தான்.
அவனின் அலைபேசி அலறியது..எடுத்து பேசினான்.

"வணக்கம் சிவா கதைக்கிறன்.. .ஆ சொல்லுங்க ரமேஸ்,எல்லாம் ரெடி பண்ணி முடிச்சிட்டன்.மழை கொஞ்சம் விட்டிட்டால் கிளம்பிடுவேன்.
அவங்க வந்திட மாட்டாங்கதானே... அப்படியா சரி,,சரி அவர்கள் காரில் வருவதால் சீக்கரம் வந்திடுவாங்க..நான் இதோ ஆட்டோவில் புறப்படுகிறேன். ஒகே... இந்தா புறப்படுறன்"
அலைபேசியில் ரமேசுடன் கதைத்து முடித்துக்கொண்டான் சிவா.

மழை பெய்து கொண்டு இருந்தாலும் பரவாயில்லை தான் நேரத்துக்கு அங்கு நிற்கவேண்டும் என்ற உணர்வோடு பாணமை நோக்கி புறப்பட்டு விட்டான் சிவரூபன்.

பாணமை...என்ற பழம்பெரும் கிராமம் அம்பாறை மாவட்டத்தின் தென்கோடியில் எல்லைக் கிராமமாக தற்போது இருந்தாலும் அது முன்னர் தமிழர்களின் கிராமமாக இருந்திருக்கிறது. இராவணன் ஊழிக்காலத்திலிருந்து கண்டிக்கால வரலாறு வரைக்கும் அது தமிழ் கிராமமாகவே இருந்திருக்கிறது. காலப் போக்கில் அது சிங்கள மக்களின் குடியேற்றத்தால் இரு இனங்கள் சேர்ந்து வாழும் கிராமமாக மாறியது. பல தமிழ் குடும்பங்கள் படிப்படியாக

பாணமை கிராமத்தைவிட்டு வேறு இடங்களுக்கு சென்றபடியால் அது இப்போது சிங்களப் பெரும்பான்மைக் கிராமமாக மாறி இருக்கிறது. இன்று சுமார் முன்னூறு தமிழ் குடும்பங்கள் இங்கு வாழ்கிறார்கள் என்ற தகவல் சிவரூபனுக்கு கிடைத்திருக்கிறது. அதைவிட அதிர்ச்சி தரும் ஒரு செய்தியும் அவனுக்கு கிடைத்தது.அது. இருக்கும் தமிழர்களும் சிங்களமயமாக்கப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். என்ற செய்தியும், அங்குள்ள தமிழ் முன் பள்ளிகள் மூடப்பட்டு தமிழ் சிறுவர்கள் சிங்களப் பாடசாலையில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு சிங்களமொழி கற்பிக்கப்படுகிறது..இன்னும் மிக கொடுமை அவர்களின் பெயர்கள்கூட சிங்களப் பெயர்களாக மாற்றப்படுகிறது. என்ற செய்தியும் சிவாவை வந்து எட்டியது.

மேலும் அங்குள்ள தமிழ் பாடசாலையின் மாணவர் வருகை குறைவாக இருக்கிறது. க.பொ.த சாதாரண தரம் வரை உள்ள அந்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் வீதம் குறைவாக இருக்கிறது.என்ன காரணம் என்றால் அவர்கள் சிறுவயதிலே திருமணம் செய்து கொள்கிறார்கள் என்ற அதிர்ச்சி தகவலும் சிவரூபனுக்கு கிடைத்திருக்கிறது.

இந்த கிராமத்தின் நலனில் அக்கறை கொண்ட சிலர் எடுத்த நடவடிக்கையினால் நோர்வே நாட்டிலுள்ள ஒரு தன்னார்வ அமைப்பின் உதவியுடன் ஒரு முன்பள்ளி தொடங்கப்பட்டு,அதற்கான ஒரு ஆசிரியையும் நியமிக்கப்பட்டுள்ளார். இப்போது பாணமை தமிழ் பாடசாலையின் ஒரு பகுதியில் அந்த முன்பள்ளி நடத்தப்படுகிறது. இது எப்படி இயங்குகிறது என்பதை அறிந்துகொள்ள நோர்வேயிலிருந்து அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் வந்திருக்கிறார்.அவர் இன்று அங்கு வருகை தருகிறார்.என்ற செய்தியை ரமேஸ் முன்னரே சிவரூபனுக்கு தெரிவித்து இருந்ததால்தான் அவன் இன்று தன் ஆவணப் படத்துக்கு அங்கு நடக்கும் நிகழ்வுகள் உதவக் கூடும் என்று புறப்பட்டு சென்றுகொண்டிருக்கிறான்.

மழை இன்னும் விட்டபாடில்லை. ஏறக்குறைய முப்பது மைல்கள் செல்லவேண்டும். ஆட்டோவும் தன்னால் முடிந்தவரை விரைவாக செல்லத்தான் பார்க்கிறது. மழை, அதன் வேகத்தைக் குறைக்கிறது. "உச்சி வெட்டாப்பு" என்று சொல்லுவார்களே. அது உண்மையென்றால் மழை நின்றுவிடும். ஆனால் அதுதான் நடக்கவே இல்லை.

எப்படியோ தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்துவிட்டான் சிவரூபன். அவர்கள் வருவதற்கு முன்னரே அவன் வந்தது, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரமேஸ்,பாடசாலை அதிபர் ஆகியோருக்கு மகிழ்ச்சியே.

சிவரூபனுக்கு பாணமை கிராமம் புதிதல்ல. உகந்தை மலைமுருகன் உற்சவ காலங்களில் அவன் அந்தக் கோவிலுக்கு செல்வதுண்டு. அதற்கு பாணமைக் கிராமத்தைக் கடந்துதான் செல்லவேண்டும். உகந்தை முருகன் தரிசனம் மிக அபூர்வமாக கிடைப்பதொன்று. ,மலையும் மலைசார்ந்த இடமும், காடும் காடுசார்ந்த இடமும்,வயலும் வயல்சார்ந்த இடமும், கடலும்,கடல்சார்ந்த இடமுமாக நானிலங்களுக்கு மத்தியில் அல்லவா உகந்தை முருகன் இருக்கிறார். இந்த வேல்பெருமானின் புகழ் கிழக்கு மாகாண மக்களுக்கு நன்கு தெரியும். பாணமை மக்களுக்கும் உகந்தை முருகன் கோவிலில் பங்களிப்பு உண்டு.

பள்ளிக்கூட வாசலில் கார் ஒன்று வந்து நிற்கிறது. அந்தக் கார் எம்.பி யின் கார். ஆம் எம்.பி அவர்களுடன் தான் நோர்வே பிரதிநிதியும் வந்திருக்கிறார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள். ரமேஸ் ஆகியோர் அவர்களை வரவேற்றுக் கொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வந்தது அவர்களுக்கு கூடுதல் மகிழ்ச்சி.

பாடசாலை மண்டபத்தில் எல்லோரும் ஒன்றுகூட, மாணவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். விளகேற்றுதல்,அகவணக்கம் என்ற நிகழ்வுகளுக்குப் பின், அதிபர் பேசினார்.

"எல்லோருக்கும் வணக்கம். நாங்கள் எதிர்பாராமல் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வந்தது, எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இந்த பாடசாலையில் நிறைய குறைகள் இருக்கின்றன, அவற்றை எம்.பி ஐயா தீர்த்து வைப்பார் என்று நம்புகிறோம், மாணவர் வரவு குறைவாக இருபதற்கு, பெற்றோரும் ஒருவகையில் உடந்தையாக இருக்கிறார்கள். பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாமால் தங்களோடு வயலுக்கு கூட்டி செல்கிறார்கள். சிலர் வேறு தொழில்களுக்கு அனுப்புகிறார்கள். சிலர் இவர்களை திருமண பந்தத்தில் சின்ன வயசிலே இணைத்து விடுகிறார்கள். இதனால் மாணவர்களின் வரவு குறைவாக இருக்கிறது. மற்றது ஆசிரியர்கள் இந்த பாடசாலைக்கு வருவதற்கு போக்குவரத்து ஒழுங்கு சரியாக இல்லை. பொத்துவிலில் இருந்து பத்து மணிக்கு முதல், ஒரு பஸ் கூட இங்கு வருவதில்லை.
இதனால் ஆசிரியர்கள் நேரத்துக்கு பாடசாலை வர முடியாமல் இருக்கிறது. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்." என்று கேட்டுக்கொண்டு , நோர்வே பிரதிநிதி பரத்ராஜ் அவர்களை பேச அழைத்தார்.

பரத்ராஜ் தனது உரையில், தங்கள் அமைப்பால் முன்னெடுக்கப்படும் முன்பள்ளி கண்டிப்பாக மேலும் பல வசதிகளையும்,நன்மைகளையும்

பெற இருக்கிறது. இந்த எல்லைக் கிராமத்தில் தமிழர்கள் படும் நெருக்குவாரங்கள் ஒழிக்கப்படவேண்டும். தமிழ் பிள்ளைகளை சிங்களப் பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் அதை மாற்றி தற்பொழுது தொடங்கப்பட்டுள்ள சிறுவர் முன்பள்ளிக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பவேண்டும்.அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுக்க பெற்றோர்கள் ஆர்வம் காட்டவேண்டும். தமிழ் குடும்பங்களில் பிறக்கும் பிள்ளைகளுக்கு தமிழ் பெயர்களை சூட்டவேண்டும். ஆசிரியர்களும் உணர்வு பூர்வமாக தங்களுக்கு ஒரு தார்மிக கடமை இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு சிறுவர்களுக்கு போதிக்க வேண்டும். மாணவர்களும் பிரச்சினைகளை புரிந்துகொண்டு,எதிர்காலத்தில்
கிராமத்துக்காக,இங்கு வாழும் மக்களுக்காக மாணவ சமூகத்துக்காக உதவ முன்வரவேண்டும்.அதற்கு நீங்கள் கண்டிப்பாக அக்கறையுடன் படிக்கவேண்டும்.உயர்படிப்பு படித்து,பட்டதாரிகளா வரவேண்டும். நல்லாட்சி நடப்பதாக சொல்லும் நாட்டிலே கடந்தகால கசப்பான அனுபவங்களை புறந்தள்ளி புத்துணர்ச்சியுடன் செயல்பட எல்லோரும் துணிய வேண்டும். தொடர்ந்தும் நோர்வே அமைப்பு தன்னாலான உதவிகளை செய்யும். இந்த மாவட்டத்துக்கு நல்ல நாடாளுமன்ற உறுப்பினர் கிடைத்திருக்கிறார். இவர் ஒரு பொதுத் தொண்டர். கொடைவள்ளல், மக்கள் நலன் விரும்பி, என்று மக்களால் அடையாளம் காணப்பட்டவர். இவர் உங்களின் அனைத்து விடயங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் உறுதுணையாக இருப்பார். உங்கள் எல்லோரையும் சந்தித்தில் மகிழ்ச்சி "என்று முடித்துக்கொண்டார் பரத்ராஜ்.

அடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் உரையாற்றினார். அதில் அவர், "நான் இந்த மாவட்டம் முழுதும் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதி. எமது தொகுதியில் ஏழு எல்லைக் கிராமங்கள் இருக்கின்றன. முன்பு நான்கு தமிழ் கிராமங்கள் காணாமல் போயுள்ளன. எல்லைக் கிராமங்களில் சகோதர இனத்தை சேர்ந்தவர்களால் எமது மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாக அறியமுடிகிறது. எமது மக்களின் கல்வி வளர்ச்சி அடையாமல் மிக பின்தள்ளப்பட்டு இருக்கிறது.முப்பது வருட போர்ச் சூழலும் இந்த பின்னடைவுக்கு ஒரு காரணியாகும். முன்பு எமது மக்களின் கல்வியை, அவர்களின் உயர்ச்சியை பார்த்து பெருமூச்சு விட்டவர்கள் இன்று எங்கேயோ எட்டாத உயரத்துக்கு போய்விட்டார்கள். அது அவர்களின் திறமை, அல்லது தந்திரோபாயம் அல்லது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் என்றும் சொல்லலாம். எது எப்படியோ இனி இந்த எல்லைக் கிராமங்களில் இருக்கும் தமிழர்கள் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். இங்கு இருக்கும் மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாட்டுக்காக நான் கூடிய உதவிகளை,வசதி வாய்ப்புகளை வழங்க இருக்கிறேன். என் சொந்த நிதியிலிருந்து பெருந்தொகைப் பணம்

கல்விக்காக வழங்குகிறேன்.புலம்பெயர் சமூகத்தின் உதவியும் இதற்கு கிடைக்க இருக்கிறது. குறிப்பாக நண்பர் பரத்ராஜ் போன்ற பலர் எமது கலை கலாசார கல்வி மேம்பாட்டிற்கு உதவ முன்வந்திருக்கிறார்கள். மேலும் இந்த பாடசாலை அதிபர் அவர்கள் குறிப்பிட்ட குறைபாடுகளை நிறைவேற்ற ஆவன செய்வேன்.போக்குவரத்து வசதிக்கான ஏற்பாட்டை உடனடியாக கவனிக்கிறேன்.முன் பள்ளி ஒன்றை இங்கு நிறுவி அதனை நிர்வகிக்கும் நோர்வே கல்வி,தொழில் மேம்பாட்டு பொதுமன்றதுக்கு என் நன்றிகள். நண்பர் பரத்ராஜ் அவர்கள் இங்கு வருவதாக இருந்தபடியால் அவருடன் நானும் வந்தேன். உங்கள் எல்லோரையும் சந்தித்ததில் எனக்கு கொள்ளை மகிழ்ச்சி."என்று முடித்தார்.
மேலும் அங்கு வாழும் தமிழ் மக்களின் அக்கறையில் கூடிய கவனம் எடுக்கும் பாதர் பெஞ்சமின், ஆன்மிக பேச்சாளர் ராஜகுரு அவர்களும் உரையாற்றினார்கள்.
அங்கு நடந்த அத்தனை நிகழ்வுகளையும் தன் ஆவணப் படுதுக்காக பதிவு செய்துகொண்டான் சிவரூபன் முடிவில் எல்லோரும் முன்பள்ளி சென்றார்கள். சிறுவர்களைப் பார்த்தார்கள். பரத்ராஜ் மிகவும் ஆர்வமாக இருந்தார். எம்.பியும் அவரும் முன்பள்ளி ஆசிரியையுடன் பேசினார்கள்.

"எப்படி டீச்சர் பிள்ளைகள் ஒழுங்காக வருகிறார்களா?" எம்பி கேட்டார்.

"கொஞ்சம் கஷ்டம்தான் சார். அதுவும் இன்று மழை,வெள்ளம் என்றவுடன் வரவு மிக குறைவாக இருக்கிறது. நானும் பெற்றோரிடம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். கண்டிப்பாக உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். அவர்கள் எதிர்காலம் நல்லா இருக்கும்.நாங்க நல்லமாதிரி சொல்லிக் கொடுக்கிறோம் என்று. ஆனால் சில பெற்றோகள் இன்னும் உணர்வதாக தெரியல்ல. போகப்போக சரிசெய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கு சார்"

"நிச்சயமாக டீச்சர் உங்கள் அக்கறையும்,அர்ப்பணிப்பும்தான் இவர்களுக்கு அவசியம்.அதீத சிரத்தை எடுத்து இந்த முன்பள்ளியின் மாணவர்களின் வரவை கூட்டுங்க. உங்களுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்தித்தர எங்கள் அமைப்பு தயாராக இருக்கிறது." என்று பரத்ராஜ் சொன்னார்.

"கண்டிப்பாக டீச்சர் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க உங்களின் சம்பளமும் அதிகரிக்கும்." என்றார் எம்.பி சிரித்துக்கொண்டே.

குழந்தைகள் பாடல்கள்,திருக்குறள், எல்லாம் பாடியும் சொல்லியும் காட்டினார்கள்.

சிவரூபனின் கமரா அந்த அழகிய சிட்டுக்களை படம்பிடித்துக்கொண்டது.

அவனின் "எல்லைக் கிராமங்களின் தொல்லைகள்" என்ற ஆவணப் படம் நன்றாக அமைய வாழ்த்துகள் சொல்லி அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

மழை இன்னும் தூறிக் கொண்டுதான் இருந்தது.

---

# கண்ணைத் திறக்கணும் சாமி

"இந்த பிரச்சினையை இனி இப்படியே விடமுடியாது மச்சான். கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று சொல்வார்கள். நமக்கு வரலாற்று சிறப்பு மிக்க ஒரு கோவில் இருந்தும் அதை முறையாக நிர்வகிக்க தெரியாமல் பாழடிச்சுப்போட்டானுகள். குடியும், கோத்திரமும் என்றும் தேசத்துக் கோவில் என்றும் காரணம் காட்டி, மட்டக்களப்பு பிரதேசத்திலே அமைந்த முதலாவது திருப்படைக்கோவிலை ஆளாளுக்கு திண்டு கைகளுவிட்டானுகள்.

போதாக்குறைக்கு இன்று கோட்டுக்கும் இழுத்துவிட்டானுகள். இதையெல்லாம் ஊரில் இருந்த நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறீங்க இல்லையா மச்சான்"

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எப்பொழுதும் ஊர்பற்றிய உணர்வோடும், தாய்மொழி பற்றிய தவிப்போடும் இருக்கும் தருண்குமார் இம்முறை ஊர் சென்றபோது கோவில் இருந்த நிலவரத்தைப் பார்த்ததும் ஊர்போடியாராகிய தன் மைத்துனர் பரமானந்தரிடம் சொல்லி ஆவேசப்பட்டான்.

"நாங்க என்ன மச்சான் செய்யமுடியும். இது தேசத்துக் கோவில் என்றபடியால் ஒவ்வொரு ஊரிலிருந்தும் தலைவர், செயலாளர், பொருளாளர், வண்ணக்கர், கோவில் ஊழியக்காரர் என்று இந்த கோவிலின் யாப்புப்படி மகாசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யிறாங்க. இப்ப என்னடா என்றால் தலைவர் தெரிவு சரியான குடியில் தெரிவுசெய்யப்படலியாம் என்று பழைய தலைவர் கோட்டில வழக்கு போட்டு இருக்கார். இப்ப கோட் அனுமதி இல்லாம கோவிலில் ஒன்றும் செய்யமுடியாது. ஊரில் உள்ள நாங்களும் மனவேதனையில்தான் இருக்கிறோம். என்ன செய்ய" தன்னாலான விளக்கத்தைக் கொடுத்தார் -ஊர்ப் போடியார் பரமானந்தனார்.

"தேசத்துக்கோவிலாக இருந்துவிட்டுப்போகட்டும். எந்தக் குடியை சேர்ந்தவன் என்றாலும் பதவி வகிக்கட்டும். இந்த பெருமை வாய்ந்த கோவிலை, சரியான முறையில் நிர்வகிக்கவேணும் தங்கட சுயநலத்திற்காகவும், பதவியாசைக்காகவும் நமது ஊரில் இருக்கின்ற கோவிலை அயலூரில் இருக்கின்ற தலைவனோ, வண்ணக்கனோ ஆரெண்டாலும் சீரழிக்க முடியாது. கோவில் இருப்பது நமது ஊரில். இந்தக் கோவிலின் சிறப்பை கேள்விப்பட்டு வருகின்ற மற்ற மாகாணங்களை சேர்ந்த அடியார்கள் இந்தக் கோவில் இருக்கிற சீர்கேட்டை பார்த்து என்ன நினைப்பாங்க.... நம்ம ஊரைபற்றித்தானே குறை சொல்லுவாங்க.

அயலூரில் இருக்கின்ற கோவில் தலைவனையா? அல்லது வண்ணக்கனையா? இது ஏன் புரியாம இருக்குறீங்க?"

"புரியுது மச்சான் எங்களுக்கு எல்லாம் புரியுது.ஆனா.."

"என்ன ஆனா" குரலை உயர்த்தினான் தருண்

"இந்தக் கோவிலின் யாப்புகுடி, கோத்திரம் என்று இருக்குதல்ல.. அதை வச்சுக்கிட்டுதான் இவ்வளவு பிரச்சினையும் பண்ணுறானுக"

"அவனுகள் என்ன பிரச்சினை பண்ணுறது? இந்த கோவில் இருக்கிற ஊர்க்காரரும், பக்கத்து ஊர்க்காரரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்தால் அயலூரில் இருந்து ஆண்டுக்கு ஒருதடவை வந்துவிட்டு போகிற தலைவரும், மற்றவர்களும் ஆடிப்போயிடுவாங்க" என்று சொன்ன தருண்குமார் சற்று சிந்தித்த பின் சொன்னான். "இதற்கு ஒரு வழிதான் இருக்கு இனி அதைதான் செய்யவேணும்" என்று

தருண்குமாரின் சிந்தனையும், செயல்பாடும் எப்பொழுதும் ஒரு திட்டமிட்ட கட்டமைப்புக்குள் இருக்கும். அவன் சிந்தனையாளன் மட்டுமல்ல. இந்த ஊர் மண் தந்த ஒரு கலைஞன், எழுத்தாளன், பத்திரிகையாளன், ஒலிபரப்பாளன்,கவிஞன்,பாடலாசிரியன், இசையமைப்பாளன், பாடகன், நடிகன் என்று தன்னை பல்கலை பரிமாணங்களுக்குள்ளும் உட்படுத்தியவன். இன்று புலத்தில் அவன் வாழ்ந்தாலும் தன் கலை,கலாசார,விழுமியங்களுக்கு தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்துக் கொண்டு வாழ்பவன் தனது பிரதேசத்தில் இருக்கின்ற கோவில்களுக்கு தனித்தனியாக பக்திப் பாடல்களை தன் மைத்துனர் சகிதம் இயற்றி, இசையமைத்து, பாடி அவற்றை குறும் இசைத் தட்டுகளாக வெளியிட்டவன். இன்று பிரச்சினையில் இருக்கின்ற முருகன் கோவிலுக்கு பல இசைத்தட்டுகளை பாடி வெளியிட்டவன். இந்தக் கோவிலின் வரலாற்றை, முருகப் பெருமானின் புகழை, அருளை, அழகை எதிரேயிருக்கும் கடலை, சுற்று சூழலை, கோவிலின் மூர்த்தியை, தலத்தை, தீர்த்தத்தை தன் பாடல் வரிகளுக்குள் கொண்டுவந்தவன். இந்த கோவிலின் கீர்த்தியை பல நாடுகளிலும் தன் பாடல்கள் மூலம் எடுத்து சொன்னவன்.

........

ஊர்போடியார் பரமானந்தரின் உள்ளத்தில் தருண்குமார் பற்றிய பின்புல தெறிப்பு ஒருகணம் தெறித்து மறைந்தது. இவன் ஏதாவது கண்டிப்பாக செய்வான்.நாமும் அதற்கு பக்க பலமாக இருப்போம் என்று மனதுக்குள் நினைத்தப்படி நிமிர்ந்து அவனிடம் பேசினார்.

"சொல்லு மச்சான் இதற்கு என்ன செய்யலாம்.ஏதாவது திட்டம் வச்சிருக்கிறியா"

"கண்டிப்பா இருக்கு மச்சான். நம்மட கோவில் மேன்மையும், சிறப்பும் பெற்று விளங்க ஒரேயொருவழி கோவிலை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதுதான் சரியான வழியாக எனக்கு தோணுது.

மாமாங்கேஸ்வரர் கோவிலைப் பாருங்க இன்று அதை அரசு பொறுப்பேற்று அந்தமாதிரி நடத்திக்கொண்டு வருகிறது.சிறப்பாக இயங்குகிறது. அதேபோல் நமது கோவிலையும் ஒப்படைத்துவிட்டால் அரசு அதை திறம்பட நிர்வகிக்கும். நமது ஊரில் வந்தான் வரத்தான் எல்லாம் கோலோச்சி இந்தக் கோவிலையும், இதன் வருமானங்களையும் கையாடி இருக்கிறான்கள். இத பலர் சொல்கிறார்கள்.

இந்த பாவ காரியத்துக்கு ஊரில் உள்ள ஒருசிலரும் உடந்தையாம். இதெல்லாம் உனக்கு தெரியாதா மச்சான் வரலாற்று சிறப்பு மிக்க இந்தக் கோவிலுக்கு இன்றுவரை ஒரு இராஜகோபுரம் இல்லை. அதை கட்டிமுடிக்க பல வழிகள் இருந்தும் அதைக் கூட அந்த நிர்வாகம் செய்யல்ல. செய்யவும் மாட்டாது. இதற்கெல்லாம் ஒரே வழி கோவிலை அரசிடம் ஒப்படைப்பதுதான்."பரமானந்தரின் முகத்தில் ஒருகணம் மகிழ்ச்சியின் சாயல் மின்னி மறைந்தது. அவர் கேட்டார்"அதற்கு வழி இருக்கா தருண்.அப்படி செய்தா எவ்வளவு நல்லது.நமதுகோவிலுக்கு பல நன்மைகள் கிடைக்கும். இந்தக் குடிவழி தொல்லைகள் எல்லாம் முடிவுக்கு வரும் இல்லையா" "நிச்சயமாக இது பற்றி நமது நாடாளுமன்ற உறுப்பினருடன் பேசுவோம். அவர் மூலமாக கோவிலை அரசிடம் ஒப்படைப்பது பற்றியும்,அதற்கான வழிவகைகளை செய்யுமாறும் கேட்போம். அவர் ஊர்ப் பிறந்தவர் என்றாலும் நியாய தர்மங்களின்படி நடப்பவர்.

இந்த பிரதேச கோவில்கள், தேவாலயங்கள் பலவற்றுக்கு பல உதவிகளை செய்தவர். அவர் கண்டிப்பாக நமது கோவில் பிரச்சினையைப்பற்றி ஆராய்வார். ஆவன செய்வார்.அதற்குமுன் ஊரில் உள்ள பலரிடம் இதுபற்றிப் பேசி முடிவெடுக்க வேணும்."

"அதை நான் செய்யிறன் நீ நாடாளுமன்ற உறுப்பினர் பேசி முடிவெடு மச்சான் " என்று சந்தோஷத்தில் குதூகலித்தார் போடியார். தருண்குமார் நாடாளுமன்ற உறுப்பினர் கவீஸ்வரனுடன் இந்த விவகாரம் பற்றிபேசியபோது, 'இது கண்டிப்பாக செய்ய வேண்டிய காரியம்தான் ஆனால் அதற்குமுன் இந்தக் கோவிலின் யாப்பின்படி குடிவழிதான் காலம்காலமாக நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு முன்னுரிமை கொடுத்து நாம் வழக்கு தொடர்ந்து இருக்கும் முன்னாள் தலைவரிடம் சென்று பேசுவோம். வழக்கை வாபஸ் வாங்கி கோவிலை பழையபடி நிர்வகிக்க வழி விடுமாறு கேட்போம்.

அதற்கு அவர் இணங்காத பட்சத்தில் நீங்கள் சொல்வதுபோல் கோவிலை அரசிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையை நான் கண்டிப்பாக எடுப்பேன்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார்.

போடியாரின் ஏற்பாட்டில் கோவில் மேம்பாட்டுக்கு துணை நிற்கும் சிலருடனும், ஆலயத்தின் செயலாளர், முன்னாள் வண்ணக்கர் ஆகியோருடன் கவீஸ்வரன் வீட்டுக்கு சென்றான் தருண்.அங்கிருந்து வாகனங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சகிதம் முப்பது மைல்கள் பிரயாணம் செய்து வழக்கு நடத்தும் முன்னாள் தலைவர் சாந்தன் வீட்டுக்கு எல்லோரும் சென்றார்கள்.

பேச்சுவார்த்தை தொடங்கியது. பலருக்கு சாந்தனை தெரிந்திருந்தது. தருணுக்கு தெரியாது. பல கோரிக்கைகளை வைத்தபின், சாந்தன் பேசினார்.

"இது எங்கள் உரிமை பிரச்சினை. கோவில் யாப்பின்படி எங்கள் குடி சார்ந்தவர்தான் அந்தக் கோவிலுக்கு தலைவராக வரவேண்டும். நான் தலைவராக இருந்த காலத்தில் கோவிலில் பல தில்லுமுல்லுகள், களவுகள், கையாடல்கள் எல்லாம் நடந்தன. இதை நான் தட்டிக் கேட்டபொழுது சம்பந்தப்பட்டவர்கள் என்னை அவமதித்தார்கள். மகாசபைக் கூட்டத்தில் என்னை நீக்கிவிட்டு தங்களுக்கு சார்பான ஒருவரை தலைவராக நியமித்தார்கள். அவர் எங்கள் குடி சார்ந்தவர் அல்ல.

அது எங்கள் குடிக்காரருக்கு அவமதிப்பையும், ஏமாற்றத்தையும் தந்தது. எங்கள் உரிமையை நாங்கள் விட்டுகொடுக்க முடியாது, அதனால்தான் நான் வழக்கு தொடர்ந்திருக்கிறேன்.கோவிலில் பல களவுகள் நடந்தமைக்கு நீங்கள் கூட்டி வந்திருக்கின்ற இந்த பழைய வண்ணக்கரும் சாட்சி. அவருக்கு தெரியாமல் அன்று ஒன்றும் நடக்கவில்லை" என்று அடித்து சொன்னார் சாந்தன்.

"சரி மிஸ்டர் சாந்தன், உங்கள் ஆதங்கம் எங்களுக்கு புரிகிறது. உங்கள் உரிமை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதுதான். அதற்காக கோட்டில் வழக்குப் பேசி, தீர்ப்பு வருவதென்பது இப்போதைக்கு முடியாத காரியம். சிவில் வழக்குகள் பல வருடங்களுக்கு இழுக்கும். ஆகவே நீங்கள் உங்கள் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு, உங்கள் மகாசபையை கூட்டி உங்கள்குடி பிறந்தோரை தலைவராக நியமித்து கோவில் திருப்பணியை தொடர்ந்து செய்ய வழி கொடுங்கள். அந்தக் கோவில் இன்னும் சில மாதங்களில் கும்பாபிஷேகம் காண இருக்கிறது என்று அறிகிறோம். உங்களுக்கு பக்க பலமாக நான் இருக்கிறேன். உங்கள் குடியை சேர்ந்த ஒருவரை தலைவராக நியமிப்பதற்கு நான் பொறுப்பாக

இருக்கிறேன் மிஸ்டர் சாந்தன். இவ்வளவு தூரம் நாங்க இறங்கி வந்து பேசுவது அந்த கோவிலின் யாப்பை மதிச்சுத்தான் புரிஞ்சு கொள்ளுங்கோ..

நீங்க எங்க கோரிக்கையை ஏற்காத பட்சத்தில் ஊர்க்காரரர் ஒப்புத-லுடன் கோவிலை நான் அரசாங்கத்திடம் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். அது செய்வது எனக்கு பெரிய விஷயமில்லை. இனி உங்கள் முடிவை பொறுத்தது." என்று தெளிவாகவும், சற்றுகாட்டமாகவும் பேசிமுடித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கவீஸ்வரன்

மற்றவர்களும், தங்கள் பங்கிற்கு அந்த முன்னாள் தலைவரிடம் பேசினார்கள். 'கோவில் யாப்பு, தேசத்துக்கோவில் என்ற பெருமை இதெல்லாம் கருத்தில் கொண்டுதான் இவ்வளவுதூரம் இறங்கி வந்திருக்கிறோம். ஆகவே உங்கள் வழக்கை மீளப் பெற்றுக்கொண்டு கோவிலை மேம்படுத்த வழிவிடுங்கள்' என்ற கருத்தை சொன்னார்கள்.

சாந்தன் மற்றும் அவர் வீட்டில் உள்ளவர்களும் சற்று சிந்தித்தார்கள்.

தருண்குமாரின் ஆதங்கம், அவன் கூட்டிச் சென்ற ஏனையோரின் நியாயமான கருத்துகள், நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தரவாதம் எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு தங்களுக்கு ஒரு தவணை கேட்டுக்கொண்டார் சாந்தன். தங்கள் குடி மக்களிடமும், தங்கள் குடுப்ப உறுப்பினர்களிடமும் பேசி ஒரு முடிவு எடுப்பதாகவும் அவர் சொன்னார்.

"கூடிய விரைவில் உங்கள் பதில் எங்களுக்கு வேண்டும். அல்லது கோவிலையும் அதன் நிர்வாகத்தையும் அரசிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையில் நான் இறங்க நேரிடும்.கோவில் அமைந் திருக்கும் ஊரவரின் ஒப்புதல் இதற்கு பெற்றுக்கொள்ளப்படும்" என்று பேசிமுடித்தார் நாடாளுமன்ற உறுப்பினர்.

தருண்குமார் உட்பட மற்றவர்களும் புறப்படும்போது ஒரு நல்ல பதிலை அந்த முன்னாள் தலைவரிடம் இருந்து எதிர்பார்ப்பதாக சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். கோவில் குடி கோத்திரங்கள் பிடிக்குள் சிக்கி சீரழியுமா? அல்லது அரசின் அரவணைப்பில் மேன்மைபெறுமா? என்று அந்தக் கோவிலில் குடியிருக்கும் முருகப்பெருமானுக்குதான் தெரியும். அந்த சாமி கண்ணை திறந்தால் அவருக்கும் நல்லது. அந்தக் கோவிலுக்கும் நல்லது.. கண்ணைத் திறக்குமா சாமி?

---

# கைவிட்டுப் போன கார்

வீட்டினுள் இருந்து கூப்பிடும் சத்தம் கேட்டதும், வெளியில் டிரைவேயில் தனது காருக்குக் கிட்ட நின்று புலம்பிக்கொண்டிருந்த நந்தகுமாருக்கு பிரக்ஞை வந்தது."இல்ல அது வந்து ...போஸ்ட்மன் வந்தான் ..அவனோடு பேசினேன்" தடுமாற்றத்துடன் பதில் சொன்னான் நந்தகுமார். அவனுக்கு வீட்டுக்குள் செல்வதற்கு மனமே இல்லை. தனது கார் தரித்து நின்ற டிரைவேயில் நின்றுகொண்டு அதைச்சுற்றிச் சுற்றி வந்து கொண்டும், தொட்டுப்பார்த்துப் பெருமூச்சு விட்டும், காரின் கதவைத் திறந்து அதனுள் ஏறி இருந்ததும் தன்நிலை மறந்தான்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஜெர்மனியிலிருந்து லண்டனுக்கு வந்தவன். இலங்கையில் தொண்ணூறுகளில் போர் அச்சுறுத்தல் அதிகரிக்க ஜெர்மனி சென்றவன் பின்னர் தன் குடும்பத்தை அங்கு அழைத்துக்கொண்டவன். பதின்ம வயதுப் பிள்ளைகள்..ஓர் ஆண், ஒரு பெண். தன் மனைவிக்கு அங்கு இருக்கப் பிடிக்காததாலும், பிள்ளைகளை ஆங்கிலக் கல்வியில் படிப்பிக்க வேண்டும் என்பதற்காகவும், குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு லண்டனுக்கு வந்தவன் தன் நண்பர் ஒருவரின் உதவியுடன் வாடகைக்கு ஒரு வீடுஎடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு நல்ல ஸ்கூல்கள் எடுப்பதற்காக பஸ்களில் ஏறி இறங்கித்திரிந்தவன், அவ்வப்போது லண்டனில் இருந்த நண்பர்களும் அவனுக்கு உதவி இருக்கிறார்கள்.தங்கள் கார்களில் கூட்டிச் சென்று பள்ளிக்கூடங்கள் பார்த்து இருக்கிறார்கள். இப்படி அலைந்து தனது பிள்ளைகளுக்கு நல்ல ஸ்கூல்கள் எடுத்துக்கொண்டவன் நந்தகுமார். தன் முயற்சியாலும், நண்பர்களின் வழிகாட்டல் மூலமாகவும் ஒரு வேலையும் எடுத்துக்கொண்டான்.

மகன் ஸ்கூலுக்கு பஸ்ஸில் போய் வருகிறான். மகளின் பள்ளிக்கூடம் வீட்டிலிருந்து நடந்துபோகிற தூரம்தான். கொஞ்ச நாட்களின் பின்னர் தன் மனைவிக்கும் ஒரு வேலை கிடைக்க வாழ்க்கை இயந்திர மயமாக மாறியது. வீடு,வேலை என்று இருந்தபொழுது..பிள்ளைகளுக்கு டியூசன் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. டியூசன் மாஸ்டரின் வீடு தொலைவில் இருந்தபடியால் பிள்ளைகளை பஸ்ஸில் அனுப்புவது சிரமமாக இருந்தது.

நந்தகுமாரின் மனைவி சுசிலாவுக்கும் பிள்ளைகளை அவ்வளவு தூரம் தனிமையில் அனுப்ப பிடிக்கவில்லை.

ஒருநாள் சனிக்கிழமை பிள்ளைகள் இருவரையும் டியூசனுக்கு கொண்டுவிட்டுவிட்டு வந்த நந்த குமாரை கேட்டாள் சுசிலா.

"என்னப்பா உங்களுக்கு கஸ்டமாக இல்லையே..வேலைக்கு, கடைகளுக்கு, பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு டியூசனுக்கு எண்டு பஸ்ஸில் அலைகிறியள். கார் ஒன்றைப் பார்த்து செக்கண்ட் ஹான்டாகவாவது வாங்குங்கோவன்"

"சுசி, நான் நினைப்பதைத்தான் நீ சொல்லுகிறாய். நமக்கு தெரிந்த ஒருவர் தன்ர காரை கொடுத்துவிட்டு வேற கார் வாங்கப் போறாராம். நமக்கு வேணுமென்றால் வந்து பார்த்து வாங்கிக் கொள்ளட்டாம். நீ என்ன சொல்லுறாய்..போய் பார்ப்பமே"

"நான் என்னத்தை சொல்ல...போய் பார்த்து நல்லதாக இருந்தால் வாங்கிடுவம்" பரபரத்தாள் சுசிலா. "பொறு பொறு. நான் முதல்ல அவருக்கு போன் பண்ணுறன். அவர் வரச் சொன்னால் போய்ப் பார்ப்போம்" என்றவன், தன் மொபைல் போனிலிருந்து தன் நண்பனுடன் பேசினான். அவரும் வரும்படி சொல்ல, இருவரும் அவர் வீட்டுக்குச் சென்றார்கள்.

அவரும் அவர்களை வரவேற்றுக் கொண்டு, தன் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி இருந்த கருப்பு நிற "நிசான் சன்னி" காரைக் காண்பித்து. "இதுதான் கார் நந்தன். நல்ல கொண்டிசன். ஒரு பிரச்சினையும் இல்லை. 'எம்.ஓ.டி',

'ரோட் டக்ஸ்', எல்லாம் போன மாதம்தான் எடுத்த நான். ஒரு வருசத்துக்கு பிரச்சினை இல்லை. நீ ஓட்டிப் பார்த்துகொள். இந்த கீ " என்று கார் திறப்பை நீட்டினார். நந்தன் வாங்கிக் கொண்டு காரில் ஏறிவிட்டு பின்னர் சுசீலாவையும் ஏற்றிக் கொண்டான்.

காரை அந்தச் சுற்று வட்டாரத்தில் பல ரோட்டுகளில் ஓட்டிச் சென்றான் நந்தகுமார்.

"என்னப்பா கார் நல்லாத்தான் இருக்கு இல்லையா" "ம்..ம் நல்லாத்தான் இருக்கு. அவர் தனிய, அவர் மட்டும் ஓடிய கார்தனே.அதுவும் அவர் தூர இடங்களுக்கு போனதில்லை. நமக்கு இப்போதைக்கு இது போதும்."

என்றவன் காரைக் கொண்டு நண்பரின் வீட்டுக்கு முன் நிறுத்தினான். நண்பர்

சத்தம் கேட்டு வெளியே வந்து கேட்டார்

"என்ன நந்தன் கார் ஓக்கேயா,பிடிச்சிருக்கா"

"ஆ.ஓக்கேதான் ..நல்லா இருக்கு,"

"அப்ப,பிறகென்ன 'லோக் புக்'க நிரப்பி சைன் பண்ணித்தாறன்.பணத்தை தந்துவிட்டு

இப்போதே எடுத்துக்கொண்டு போங்கோவன்" என்றார்.

" சரி. பத்திரத்தை நிரப்புங்க ..சொன்ன விலையில இருந்து கொஞ்சம் குறைச்சுக் கொள்ளுங்க"

"நந்தன் உள்ள வாங்க. அதப்பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர்களை வீட்டுக்கு உள்ளே அழைத்து அமரச் செய்தார்.

பத்திரம் பூர்த்தியானதும், அவர் சற்று குறைத்துக் கொண்டு கூறிய பணத்தைக்

கொடுத்துவிட்டு, காரை எடுத்துக்கொண்டு அவசரமாக கிளம்பினான் நந்தகுமார் பிள்ளைகளின் டியூசன் கிளாஸ் முடிகிற நேரம் நெருங்கியது. ஏதோ ஆறுமாதங்களாக பஸ்ஸில் பிரயாணம் செய்தவனுக்கு இந்தக் கார் பிரயாணம் மிக சந்தோசத்தைக் கொடுத்தது. அவனைவிட சுசிலாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது. பிள்ளைகளை இனி கூட்டிக்கொண்டு பல இடங்களுக்குப் போகலாம். சாறி கட்டிகொண்டு கோவிலுக்கு பஸ்ஸில் போவது அவளுக்கு பல சமயங்களில் அசௌகரியமாக இருந்திருக்கிறது. இனி காரிலே கோவிலுக்கு போகலாம். இப்போது இந்தக் கார் வாங்கியது, அவள் சிரமங்களில் இருந்து விடுபடுவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

நந்தகுமார் சற்று வேகமாக ஓட்டி டியூசன் மாஸ்டர் வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் நிறுத்தி விட்டுப் பிள்ளைகளுக்காகக் காத்து நின்றான். அவர்கள் வெளியில் வரும் நேரம் வருவதற்கு சற்று முன்னர் காரிலிருந்து இறங்கி அவர்களை எதிர் கொள்ள மாஸ்டர் வீட்டடியில காத்து நின்றான். அவர்கள் இருவரும் வெளியில் வந்தார்கள்..

"என்ன பிள்ளைகள் நன்றாக படிச்சீங்களா?"

"அப்பா எனக்கு கெமிஸ்ட்ரி பாடத்தில் உள்ள பல கேள்விகளுக்கு இப்போ விடைகள்

தெரியும். நல்ல சொல்லித்தாறார் மாஸ்டர்." மகள் சொன்னாள்.

"எனக்கும் பிசிஸ்க் பாடம் ஸ்கூலில் கஷ்டமாக இருந்தது. டியூசன் மாஸ்டரிடம்

வந்தபின்பு நல்லா விளங்குது. கண்டிப்பா எக்சாமில ஏ எடுப்பேன்" மகன் உறுதியுடன்

சொன்னான். சொன்னதோடு மட்டும் இல்ல... தொடர்ந்து அவசரப்பட்டான்

"அப்பா, வாங்க பஸ் வந்திடும். இந்த பஸ் போனால் அடுத்த பஸ் இனி அரைமணி சென்றுதான் வரும். எனக்கு நல்லா பசிக்குது. கெதியா வாங்க" "மகேஷ் அவசரப் படாதே..போகலாம்" மகனைப் பார்த்து சொன்னார் நந்தகுமார். "ஏனப்பா எனக்கும் பசிக்குது. போவோம் பஸ் வர த்ரீ மினிட்ஸ்தான் இருக்கு" மகள் அனுஜா அழைத்தாள்.

"போகலாம்.. போய் காரில் ஏறுங்க. அம்மாவும் காரில் இருக்கிறார்" என்று சர்வ சாதாரணமா சொன்னான் நந்தகுமார்.

"காரா...காருக்குள்ள அம்மாவா" ஆச்சரியமாக கேட்டான் மகேஷ்.

"எங்கப்பா கார்...அம்மா எங்கே" ஆவலோடு கேட்டாள் அனுஜா.

"அதோ நிற்குதே கறுத்த கார். அதுதான்" நந்தகுமார் கார் நின்ற இடத்தைக் காட்டினான்.

"ஆ..! அதுவா" என்றவர்கள் ஓடிச் சென்று அந்தக் காரை அடைந்தார்கள். காரினுள் அம்மா சுசிலாவைக் கண்டதும் இருவரும் சந்தோசப்பட்டார்கள்.

காரின் முன் கதவை திறந்து மகன் மகேஷ் ஏறிக்கொண்டான். பின் கதவை திறந்து தனது அம்மாவுக்கு பக்கத்தில் இருந்துகொண்டாள் மகள் அனுஜா.

"என்னம்மா எங்களுக்குச் சொல்லவே இல்ல. கார் வாங்கின விசயத்தை" மகேஷ் கேட்டான்.

"இல்ல மகன், இது திடீர் என்று நீங்க டியூசனுக்கு வந்த பின் அப்பா எடுத்த முடிவு.

அதுதான் உங்களுக்குச் சொல்ல முடியாமல் போனது" "சரி பரவாயில்லம்மா நமக்கு இனி கார்ல எல்லா இடமும் போகலாம் என்னம்மா" தன் மகிழ்ச்சியை பேச்சின் மூலம் வெளிப்படுத்தினான் மகேஷ். ஆனால் அனுஜா பேசாமல் இருந்தாள்.

"என்ன பிள்ளைகள் உங்களுக்கு கார் பிடித்திருக்கிறதா" என்று கேட்டுகொண்டே

வந்து முன்னால் ட்ரைவிங் சீட்டில் அமர்ந்தான் நந்தகுமார். "எனக்கு ஓக்கே அப்பா. கார் இல்லாம இருந்த நமக்கு இப்போதைக்கு இது ஓக்கே" மகேஷ் சொன்னான்.

"என்ன அனுஜா ஒன்றும் பேசாமல் இருக்கிறாய். உனக்கு பிடிச்சிருக்கா மகள்"

"எனக்குப் பெரிசா பிடிக்கயில்ல. இதவிட நல்ல கார் வாங்கி இருக்கலாம்"

"அனுஜா காரே இல்லாமல் நாம பஸ்ஸில் கஷ்டபட்டு போனதற்கு இது எவ்வளவோ மேல். இல்லையா அப்பா" மகேஷ் சொன்னான்.

"கொஞ்ச நாட்கள் போனபின் வேற நல்ல கார் வாங்கலாம் பிள்ளையள், இப்போதைக்கு இது இருக்கட்டும்" சுசிலா சொன்னாள். அம்மாவும் பிள்ளைகளும் பலதையும் பேசிக்கொண்டே வர, நந்தகுமார் காரை ஓட்டிக்கொண்டு வந்து ஒரு 'மக் டொனால்ட்' உணவகத்தில் நிற்பாட்டினான்.

"என்னங்க இங்கே நிற்பாட்டுறியள். வீட்டில சாப்பாடு இருக்கு" சுசிலா சொன்னாள்.

"அம்மா, எனக்குப் பசிக்குதம்மா இங்கே" சிக்கின்பெர்கரும், சிப்சும் வாங்கி சாப்பிடுவம், என்ற மகேஷ் காரைவிட்டு இறங்கிக் கொண்டான்.

அவனைத் தொடர்ந்து அனுஜாவும் இறங்கினாள். பின்னர் நந்தகுமார்,சுசிலா இருவரும் இறங்கிப் போனார்கள்.

"ஜங் பூட்" எப்போதாவது இருந்துவிட்டுத்தான் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பான் நந்தகுமார். அது சுவையாக இருக்கும் என்பதையும் தாண்டி, அதில் இருக்கும் தீமைகளும் ஓரளவு அவனுக்கும்,

மனைவி சுசிலாவுக்கும் தெரியும்.

சாப்பிட்டு முடித்து வீடு வந்து சேர்ந்தார்கள். அன்று முழுவதும் கார் வாங்கியது, அதில் பிரயாணம் செய்தது, என்பது பற்றியே பேச்சுகள் நடந்து முடிந்தன . அனுஜா மட்டும் இவர்கள் பேச்சில் இருந்து ஒதுங்கியே இருந்தாள். நாட்கள் நகர்ந்தன. நந்தகுமாரும் வேலை,வீடு, அனுஜாவை கொண்டு பள்ளிக்கூடத்துக்கு விடுவது என்று இயந்திரமாக இயங்கினான்.

ஒரு நாள் தன் மகளை ஏற்றிக் கொண்டு அவளின் பள்ளிக்கூடம் செல்லும் வழியில் அவள் பேசினாள்.

"அப்பா நாளையிலிருந்து நான் பழையபடி நடந்தே ஸ்கூலுக்கு வாறன். நீங்க கூட்டி கொண்டு விடவேணாம்"

"ஏன் மகள். எனக்கு கஷ்டம் ஒன்றுமில்லையே... உன்னை ட்ரோப் பண்ணிட்டு நான் வேலைக்கு போவதில் எனக்கு சிரமம் இல்லையே"

"அது வந்துப்பா .." தயங்கினாள் அனுஜா .

"சொல்லு ..என்ன விசயம்" அமைதியாக கேட்டான் நந்தகுமார்.

"என் பிரெண்ட்ஸ் எல்லாம் என்னை கிண்டல் பண்ணுறாங்க. நான் பழைய காரில் வருகிறேனாம்" சற்று வருத்தப் பட்டுச் சொன்னாள் மகள் அனுஜா.

"அப்படியா மகள் நீ ஒன்றும் யோசிக்காதே.. நாம் ஒரு நல்ல கார் வாங்குவோம். உன் படிப்பை கவனமாகப் பார்த்துக்கொள் என்ன" சாந்தமாக பதில் சொன்னான்

"சரிப்பா ..பாய்" இறங்கி போனாள் அனுஜா. அவள் போவதையே பார்த்துக் கொண்டு சற்று நேரம் இருந்தான் நந்தகுமார். அவன் மனதில் பல சிந்தனைகள் ஓடிக்கொண்டு இருந்தன.

வேலைக்குச் சென்ற நந்தகுமார் மனசு ஒரு நிலையில் இல்லாமல் உழன்றான். சற்று நேரத்துக்குபின் அரைநாள் லீவு போட்டுவிட்டு..நேரே அவனது வங்கிக்குச் சென்றான். மனேஜரைச் சந்தித்துத் தனக்கு ஒரு லோன்

தர முடியுமா? என்று கேட்க, அவரும் அவனது கிரெடிட் ஸ்கோர் பார்த்துவிட்டு,

இப்போது ஐயாயிரம் பவுண்ட்ஸ் உடனே உங்கள் கணக்கில் போட முடியும் நீங்கள் விரும்பினால் என்றுசொன்னதும் நந்தகுமாருக்கு பெரும் மகிழ்ச்சி. தன் சம்மதத்தைச் சொல்லி விட்டான். பணமும் அவன் வங்கிக் கணக்கில் இடப்பட்டது. பின் நேரே டொயோட்டா கார் டீலரிடம் சென்றான். அங்கு அவனுக்கு பல கார்கள் காண்பிக்கப்பட்டன.

அதில் நீலநிற "டொயோடா கரீனா" கார் அம்சமாக இருந்தது. ஆட்டோமெற்றிக் கியர்.

மெற்றாளிக் பெய்ன்ட்.. உள்ளுக்குள் லெதர் சீட், இண்டேரியர் பிட்டிங்க்ஸ் எல்லாம் பக்காவா இருந்தது.

கண்டிப்பாக மகள் அனுஜாவுக்கு இது பிடிக்கும் என்று நினைத்தவன், தன் டீலரிடம் தனக்கு அது பிடித்திருக்கு, ஆனால் ஒரு சிக்கல், என்று சொன்னான். அவர் என்ன என்று கேட்டார். தனது பழைய காரை கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர். அது ஒன்றும் ப்ரோப்ளம் இல்லை. நாங்களே ஒரு விலைபோட்டு எடுத்துக்கொள்வோம் என்றதும் நந்தகுமார் உடனே சம்மதித்தான். அடுத்த ஒரு மணி நேரத்தில் எல்லா பேப்பர் வேர்க்குகளும் முடிந்தன. சகல டோக்குமென்டுகளும் பூர்த்தி செய்து கார் கீ களும் கொடுக்கப்பட்டன.

நந்தகுமார் நேரத்தைப் பார்த்தான் இன்னும் கால் மணி நேரத்தில் அனுஜாவின் ஸ்கூல் முடிந்திடும்.

டீலருக்கு நன்றி சொல்லிவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு ஸ்கூலுக்குப் புறப்பட்டான். அவனுக்கே ஓட்டுவதற்கு அலாதிப் பிரியமாக இருந்தது. சிடி பிளையர், ரேடியோ, என்று எல்லாம்

சிறப்பாக இருந்தன. ஸ்கூல் வந்ததும் ஒரு ஓரமாய் காரை நிறுத்தி விட்டுத் தன் மகளுக்காக காத்திருந்தான். எல்லாப் பிள்ளைகளையும் ஏற்றிச் செல்வதற்காகப் புதுப் புது கார்கள் வந்தவண்ணம் இருந்தன. அவனுக்கு மனசு சங்கடப் பட்டது. இவ்வளவு நாளும் அந்தப் பழைய காரில் வந்து போனது என்னவோபோல் இருந்தாலும் எல்லாவற்றிக்கும் ஒரு நேரம் வரவேண்டுமல்லவா? என்று சமாதானம் அடைந்தான்.

கார் உள் கண்ணாடியில் பார்த்தான் தன் மகள் அனுஜா புத்தகப் பையை தூக்கிக் கொண்டு அமைதியாக, ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்தாள். அவனுக்கு மனசு கேட்கல்ல..காரிலிருந்து இறங்கி..எதிர்சென்றான். அனுஜா பார்த்துவிட்டாள்.

"அப்பா நான் சொன்னந்தானே வரவேண்டாம் என்று..ஏனப்பா" கேட்டாள்.

"தா மகள், புத்தக பையத் தா நான் கொண்டுவாரன்" என்றவன் அவள் கழுத்தில் தொங்கிய

பையை எடுத்துகொண்டான்.

"எங்கப்பா உங்க கார்" என்றாள்

"அதோ நிக்குதே" என்று முன்னால் காட்டினான். "அப்பா அது டொயோட்ட கார் அப்பா. எனக்குப் பிடிச்ச கலர். யாருடையதோ தெரியாது நம்மட கார் எங்கப்பா"

"அதுதான் நம்மட கார். உனக்கு பிடிச்சிருக்குத்தானே மகள்" பவ்மியமாகக் கேட்டான் நந்தகுமார். "அப்பா பகிடி விடுறீயளா"

"இல்லமகள் நான் உண்மையத்தான் சொன்னனான். அதுதான் நம்மட கார். நீ நம்பல்லத்தானே ஓகே பரவாயில்ல..இப்பபார்" என்றவன் தன் கையில் இருந்த ரிமோட் கீயை அழுத்தினான். கார் 'கிக் ' என்ற சத்தத்துடன் லைற்றும் மின்னி நின்றது.

"அப்பா..ஐ லவ் யூ அப்பா" என்று அவனைக் கட்டி அணைத்துவிட்டு ஓடிச் சென்று முன் கதவை திறத்து ஏறிகொண்டாள்.

நந்தகுமார் ஒரு மன நிறைவுடன், தன் மகளின் புத்தகப்பையைத் தோளில் போட்டுக்கொண்டு காரின் பக்கம் சென்று பின் சீட்டில் பையைப் போட்டு விட்டு முன்னால் அமர்ந்து கொண்டான். அனுஜா சந்தோஷத்தில் திக்குமுக்காடி திணறிப் போனாள்.

"அப்பா எப்படி உடனே எனக்கு பிடித்தமான கலரில் இந்த நல்ல கார் வாங்கமுடிந்தது" என்று கேட்ட அனுஜாவுக்கு, அந்த சில மணி நேரங்களில் நடந்த விடயங்களை விளக்கமாக சொன்னான்.

அனுஜாவிற்கு அவளின் அப்பா மீது அளவு கடந்த அன்பு பெருகியது. இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டபின், நந்தகுமார் காரை செலுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான். அனுஜாவுக்குத் தன் அண்ணனிடம் சொல்லவேண்டும் என்ற ஆசை உந்தித் தள்ள தன் கைபேசியில்,அவன் நம்பரை அழுத்தி பேசினாள்.

"அண்ணா பஸ் எடுத்திட்டீரா...அப்படியா ..கெதியா வா அண்ணா..அப்பா புது கார் வங்கி இருக்கார்"

அவன் மறுமுனையில் என்ன சொன்னானோ தெரியாது,,அவள் போனை கட் பண்ணிட்டாள்.

வீடு வந்ததும் அம்மாவுக்கு அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மகேசும் வந்துவிட்டான்.

பிறகு என்ன, எல்லோருக்கும் நந்தகுமார் நடந்த விடயங்களைச் சொன்னதும், சகலருக்கும் சந்தோசம். பின்னேரம் பிள்ளையார் கோவிலுக்கு காரை எடுத்துச் சென்று அதற்குப் பரிகாரம்

எல்லாம் செய்து, எலுமிச்சம்பழம் நசுக்கப் பண்ணி, விபூதி, சந்தனம் எல்லாம் பூசி மிக சந்தோசத்துடன் வீடு திரும்பினார்கள்.

அடுத்த கிழமையே வேல்ஸ் முருகன் கோவிலுக்கு ஐநூறு கிலோமீற்றர் தூரம் பயணித்து போய்வந்தார்கள். எல்லாம் நல்ல படியாக போய்க்கொண்டு இருந்தது." மனைவி, வாகனம்

பிள்ளைகள், எல்லாம் ஒரு மனிதனுக்கு வந்து அமையவேணும்" என்று சொல்வதுபோல் நந்தகுமாருக்கு எல்லாம் அமைந்தது. பிள்ளைகள் இருவருக்கும் தானே ட்ரைவிங் பழக்கினான்.

அவர்களும் நன்றாக கற்றுக் கொண்டு யூ.கே. லைசென்ஸ் எடுத்துக் கொண்டார்கள்.

காலச் சக்கரம் சுழன்றது. அவன் சொந்தமாக ஒரு வீடு நல்ல இடத்தில வாங்கிக் கொண்டான்.

பிள்ளைகள் நன்றாகப் படித்து பாஸ் பண்ணி பல்கலைக் கழகம் சென்றார்கள். இரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் பிள்ளைகளை அவனது காரில் கொண்டு விடுவதும், பின்னர் சாப்பாடு கொண்டு

கொடுப்பதும் இப்படியாக நாட்கள் நகர்ந்தன. தனது மற்றுமொரு பிள்ளைபோல்தான் தன் காரை பார்த்துக்கொண்டான் நந்தகுமார். அவனது நண்பர்கள் அதற்குப் பின்னர் பல கார்கள்

மாற்றியபோதும் இவன் மாற்றவில்லை. காரணம் அவன் கார் எந்த பிரச்சினையும் கொடுக்கவில்லை.

காலம் உருண்டோடியது. ...

மகேசும், அனுஜாவும் முதல் தரத்தில் பாஸ் செய்தார்கள். வேலையும் இருவருக்கும் கிடைத்தன.

அவர்கள் தனித் தனி புதுக் கார் வாங்கிக்கொண்டார்கள். நந்தகுமாருக்கு சந்தோசம். ஆனால் தன் காரை அவன் இன்னும் நேசித்தான். சில வருடங்கள் போக பிள்ளைகள் திருமணம் முடித்து

செல்ல வேண்டிய நேரமும் வந்து முடிந்தது. அவர்கள் தங்கள் வீடுகளில் இருக்க நந்தகுமாரும்,
சுசிலாவும் ஓர் அப்பார்மென்ட் பார்த்து வாங்கிகொண்டு தனியே சென்றுவிட்டார்கள். பிள்ளைகளின் வீட்டுக்குச் சென்று வரும்போதெல்லாம் அவர்கள், அப்பா காரை மாற்றுங்கோ பத்து வருசமாக

வைத்து இருக்கிறீங்க.. சத்தங்கள் கேட்குது ...என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

சுசிலாவும் சொல்வதுண்டு..இந்த கார் நமக்கு பெரிசுங்க...நமக்கு ஒரு சின்னக் கார் வாங்கினால் போதும்..என்று..

இப்படி எல்லோரும் தன் காரை கரிச்சிக் கொட்டுகிறார்களே என்ற வருத்தம் அவனுக்கு இருந்தது.எவ்வளவு வேலைகளை அந்தக் கார் அவனுக்கு செய்திருக்கும். வீடு வாங்கி, அதன் திருத்த வேலைகள் செய்தபொழுது முழு சிலும்பல்கள், உடைஞ்சதுகள், குப்பை கூளங்கள் எல்லாம் ஏற்றி கொண்டு றிசைகிளிங் சென்றறில் கொண்டு போட உதவி இருக்கிறது. கடைகளில் பில்டிங் சாமான்கள் ஏற்றி இறக்கி இருக்கிறது. பெரிய டிக்கி என்றபடியால் நிறை சாமான்கள் எல்லாம் போட்டுகொண்டு செல்லமுடிந்தது.

எல்லாவற்றிக்கும் தனக்குத் தோள் கொடுத்த கார்,இப்போ சற்று வயசாகிப்போச்சோ என்று எண்ணுமளவிற்கு அது ஸ்ராட்டிங் ட்ரபிள் கொடுக்குது..இதையே எல்லோரும்சாக்காகச் சொல்லி இதை கொடுக்கச் சொல்லி விட்டார்கள். நந்தகுமாரும் பல தடவைகள் யோசித்து, மனமில்லாமல் சரி கொடுப்போம் என்று சொல்லிப்போட்டான்.

மகன் மகேஷ் ஏற்பாடு செய்த கலெக்ட்டிங் கொம்பனி காரை பார்த்துக் கொண்டு வெளியில் நின்ற நந்தகுமார்தான் தன் மனப் போக்கில் தன் காருடன் பேசிக்கொண்டு இருந்தான்.

கார் கொண்டு போகிறவர்கள்தான் வந்து விட்டார்களா என்று சுசிலா உள்ளிருந்து கேட்டாள்.காருக்குள் அமர்ந்திருந்த நந்தகுமாருக்கு ரோட்டில் பெரிய லொறி மாதிரி ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டு காரிலிருந்து இறங்கினான். கார்கள் ஏற்றி செல்லும் வாகனம் அது.

அதிலிருந்து ஒருவன் நந்தகுமாரை நெருங்கி....

"மிஸ்டர் .நந்தகுமார் "

"ஏஸ் ..நந்தகுமார்..."

"யே.யே..தட்ஸ் இட்.. ஐ வில் டேக் யுவர் கார். மிஸ்டர்...நந்தா.."

வெள்ளைக்காரருக்குத் தமிழ் பெயர்கள் சொல்ல கொஞ்சம் கஷ்டம்.

"ஓகே..திஸ் இஸ் மை கார்." என்ற நந்தகுமார். எல்லா டாக்குமெண்டுகளையும்

கொடுத்துக் கீகளையும் கொடுத்தான். வெள்ளக்காரனும் தனது வேலையைச் சீக்கிரம் முடித்து, நந்த குமாரின் காரைத் தனது பாரிய வண்டியில் மேல் தளத்தில் ஏற்றிக்கொண்டு, நந்தகுமாருக்கு நன்றி சொல்லி விடை பெற்றான். தனது நல்லது கெட்டதுகளில் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாகத் தன்னுடன் இருந்த கார், தன் கை விட்டுப் போவதைத் தாங்க முடியாமல் நந்தகுமார் நிலை குலைந்து தன் வீட்டு வாசலில் அமர்ந்து கொண்டான்.

"என்னங்க எங்க இருக்கிறியள்..." என்ற சுசிலாவின் குரல் உள்ளிருந்து மீண்டும் கேட்டது.

---

# ஊருக்கு திரும்பணும்

மாசி மாதத்தின் கடும்குளிர் கனடாவை கதிகலங்கச் செய்துகொண்டு இருந்தது.
மைனஸ் முப்பது பாகை செல்சியசில் இருக்கும் குளிர் காற்று பலமாக வீசும் பொழுது மைனஸ் முப்பத்தியைந்து செல்சியசையும் தாண்டிப் போவதுண்டு. இப்படி கடுமையான குளிர் நேரத்தில்தான் ஜெகதீஸ் தன் தாய்,தந்தையரின் விருப்பப்படி அவர்களைக் கொண்டு சென்று இலங்கைக்கு அனுப்பி விட்டு மனச் சோர்வுடன் வீட்டுக்கு வந்தவன், மனைவி இரவுச் சாப்பாட்டுக்கு கூப்பிட்டும், சாப்பிட போகாமல் கொஞ்சம் வெந்நீரைக் குடித்து விட்டு படுக்கைக்கு சென்றான்.

இரவு மணி பதினொன்றை தாண்டி இருந்தது. ஜெகதீஸ் படுகையில்தான் கிடந்தான். ஆனால் தூக்கம் அவனை தழுவ மறுத்தது.அவன் புரண்டு பிரண்டு படுக்கையில் உளன்றான். அவன் மனசு ஒரு நிலையில் இல்லை. அவனது உள்ளுணர்வுகளும் உறங்க மறுக்கின்றன. இருக்காதா பின்ன. எவ்வளவு கஷ்டப் பட்டு தனது பெற்றோர்களை கனடாவுக்கு கூப்பிட்டவன். அவர்கள் வந்து இருந்த மூன்று வருடங்களிலும் சந்தோசமாகவே இருந்தவனுக்கு கடந்த ஒரு மாதகாலமாக தாயும்,தகப்பனும் தங்களை ஊருக்கு அனுப்பிவிடு என்று ஒரே தன்னை நச்சரித்துக் கொண்டு இருந்ததை அவன் எப்படி மறப்பான். அவர்கள் இப்போது தாயகம் நோக்கி பறந்து கொண்டிருக்க ஜெகதீசின் சிந்தனைகளும் சிறகு விரித்து பறக்க ஆரம்பித்தன.ஜெகதீசுக்கும் அவனது அப்பா,அம்மா ஆகிருக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகள் அவனுக்கு நினைவுக்கு வந்தன.

" அப்பா உங்கட பிள்ளைகள் ஒருத்தர்கூட ஊரில் இல்லை என்பதால்தான் உங்களையும்,அம்மாவையும் நாங்க கனடாவுக்கு கூப்பிட்டம். வயசுபோன காலத்தில தனியாக இருந்து கஷ்டப்படக் கூடாது என்றுதான் நானும், தம்பி, தங்கச்சியும் சேர்ந்து முடிவெடுத்து உங்களை இந்த நாட்டுக்கு வரவழைச்சம்.
இப்ப என்னடா என்றால் நீங்க ஊருக்கு திரும்பணும் என்று அடம்பிடிக்கிறீங்க."

"இஞ்ச பார் தம்பி. நீ சொல்லுறதெல்லாம் சரிதான்.நாங்களும் வயசுபோன காலத்தில பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என்று ஒண்டடிமண்டடியாக இருக்கலாமெண்டுதான் நீங்க எல்லோரும் சொன்னதற்கு இணங்க இங்கு வர விரும்பினோம். வந்தும் விட்டோம். ஆரம்பத்தில் எங்களுக்கு

உங்களை எல்லாம் பார்த்தபோது சந்தோசமாகத்தான் இருந்தது. நீங்கள், அண்ணன்,தம்பி, தங்கச்சி மூன்று பெரும் ஒரே நாட்டில்,ஒரே இடத்தில் அக்கம்,பக்கம் இருப்பதும் மிக சந்தோசமான விசயம்தான்.
ஆனால் இந்த மூன்று வருஷ புலம்பெயர் வாழ்க்கையில் எங்களுக்கு பல சிரமங்கள்,கஷ்டங்கள் ஒவ்வாமைகள் ஏற்பட்டன. அதையெல்லாம் நாங்க உங்க ஒருத்தருக்கும் சொல்லயில்ல. உங்கட இந்த இயந்திரமயமான வாழ்கையில உள்ள ஒவ்வொரு சுமைகளையும் நாங்க பார்த்துக் கொண்டுதான் இருந்தம் இல்லையா ராஜேஸ்வரி" என்று தன் மனைவியை கேட்டார் ஜெகதீசின் அப்பா செபரெத்தினம்.

"ஓம் மகன் அப்பா சொல்லுறது சரிதான். நாங்க கொஞ்சம் சிரமத்துக்கு மத்தியில்தான் இருந்த நாங்க. பழகிபோச்சுதென்றால் சமாளித்து இருந்திடலாம் என்றுதான் பார்த்தோம் முடியல்ல... மற்றது இந்த கடுமையான குளிர் எனக்கும், அப்பாவுக்கும் ஒத்துக் கொள்ளுதில்ல. உங்களை விட்டு போறதென்றாலும் எங்களுக்கு மனக் கஷ்டம்தான். என்ன செய்ய, இனி போறதென்று முடிவெடுத்திட்டம். அப்பாட பென்சன் அங்கு வருகுது. அது எங்களுக்கு காணும். வெள்ளாம பூமி குத்தகையும் வரும். அது எங்களுக்கு செல்லாபத்தியமாக காணும். இனி ஊரில் அக்கம்,பக்கம், கோவில் குளம் என்று நாங்கள் போய்வருவோம். இங்க என்னடா எண்டால், நீங்க வேலைக்கும், பிள்ளைகள் ஸ்கூலுக்கும் போனபின் நாங்க இந்த வீட்டுக்குள்ள இருந்து ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டு எத்தனைகெண்டு இருப்பது.

எத்தனை தரம்தான் டிவி பார்ப்பது. என்னை சமைக்கவும் விடமாட்டீங்க."

"அம்மா இங்க இருக்கிற நிறைய பெற்றோர்கள் அப்படிதான் இருக்கிறாங்க.பிள்ளைகளோடும் பேரப் பிள்ளைகளுடனும் சந்தோசமாக இருக்கிறாங்க. தமிழ் ரி.வி. தமிழ் ரேடியோ என்று இங்கு கனடாவில் எல்லாம் வசதியாக ஊர்போல இருக்குத்தானே.."

"அது சரி மகன் எல்லாம் நல்லபடியாக இருக்குதுதான். வார இறுதியில் பிறந்தநாள் கொண்டாட்டங்கள்,
பூப்பு நீராட்டு விழா, அரங்கேற்றம், இசைநிகழ்ச்சி,ஒன்றுகூடல், புத்தக வெளியீடு என்று நடக்கின்றன இல்லையென்று சொல்லயில்ல.இதையெல்லாம் தாண்டி எங்கள் உணர்வில் ஒரு வெறுமை.இழப்பு இருந்துகொண்டே இருக்கிறது"

"அதோட தம்பி கடைசி காலத்தில எங்கட கட்டை நாங்க பிறந்து,வளர்ந்து, வாழ்ந்த மண்ணில்தான் வேகவேணுமென்று விரும்பிறம். என்னதான் இந்த நாடு பல சௌகரியங்களை தந்தாலும் சொந்த நாடுபோல வருமா?"

" அப்பிடி சொல்லு ராஜேஸ்வரி. இதைத்தான் இங்கே உள்ள சி.பி.சி. வானொலியில அடிக்கடி ஒலிபரப்பு செய்யுறாங்க " சொந்தநாடு என்றாலே சொர்க்கபுரிதான். அதை சொல்லிச்சொல்லி பாடுவதே நம்ம பணிதான்" என்று. இந்தப் பாடலைக் கேட்கும்போதெல்லாம் நான் ஊருக்கே சென்றுவிடுகின்றேன்.அப்படி ஒரு பிரமை எனக்கு"

"அந்தப் பாட்டில ஒரு வரி வரும் "நமது நாட்டில் வாழ்ந்தபோது வசந்தகாலம்தான் நாம் நாடுகடந்து வந்தபோது புதிய வேஷம்தான்" என்று. இந்த நாட்டுக்கு வந்து எல்லோரும் வேஷம் போட்டுக் கொண்டுதான் வாழ்கிறார்கள். அப்படிதான் வாழமுடியும். என்று அழகாக எழுதியிருப்பார் அந்த பாடலாசிரியர்."

"இங்க பாருங்க நான் உங்கட உணர்வுகளை மதிக்கின்றேன். நாங்களும் இந்த நாட்டுக்கு இஷ்டப்பட்டு வரயில்ல. நாட்டில் ஏற்பட்ட போர்சூழல், அதனால் அங்கு இருந்த அசாதாரண நிலை, உயிருக்கு அச்சுறுத்தல் போன்ற காரணிகள்தான் எங்களை இந்த நாட்டுக்கு வர வைத்தது. நீங்களும் அன்று உள்ள சூழ்நிலையில் உங்கள் பிள்ளைகள் உயிர்தப்பினால் போதும் என்று எங்களை அனுப்பி வைத்தீர்கள்."

" அது உண்மைதான் மகன். அந்த நேரத்தில் எங்களுக்கு உங்களை காப்பாற்ற வேறு வழி தெரியல்ல. நீங்க இங்க வந்தும்,ஆரம்பத்தில் எவ்வளவு கஷ்டப் பட்டீங்க என்றெல்லாம் எங்களுக்கு தெரியும். இப்போ கடவுள் கிருபையால் வாழ்கையை நிலை நிறுத்திப் போட்டீங்க. அதப் பார்த்து எங்களுக்கு பெரிய திருப்தி. நாங்க நாளைக்கு கண்ணை மூடினாலும் பிள்ளைகள் நல்ல வாழ்க்கை வாழுறாங்க என்ற நினைப்பில போய் சேர்ந்திடுவம்."

"ஏனப்பா இப்படியெல்லாம் கதைக்கிறீங்க. நீங்கள் நல்ல படியா நோய் நொடி இல்லாமல் இருந்து நீண்டகாலம் வாழவேணும். ஊரில் போய் இருந்தால்தான் உங்களுக்கு நிம்மதி கிடைக்குமென்றால் நான் உங்களை உடனே அனுப்பி வைக்கிறேன். கவலைப் படாதீங்க.
ஒரு மாதமாக எனக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த இந்த பிரச்சினையில் ஏதாவது உங்க மனசு நோகும்படி நான் பேசி இருந்தால் என்னை மன்னிச்சுக்கோங்க"

" சேச் சே  அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தாய் பிள்ளைக்குள்ள இதெல்லாம் சகஜம்தானே. நீ ஒன்றும் யோசிக்காத. நாங்க ஊரில போய் பழையபடி நல்ல வாழ்க்கையை வாழ இப்போ அங்கே வழி இருக்கு. புதிய அரசு. நல்லாட்சி எல்லாம் நடக்குதாம். செய்திகளும் அப்படிதான் வந்து கொண்டு இருக்கின்றன.

" சரி அம்மா.. உங்கள்  ஆசைப்படி நீங்கள் ஊருக்கு திரும்பிறீங்க. நான்  நாளைக்கே உங்களுக்கு டிக்கெட் போட்டுவிடுகிறேன். ஒண்டுக்கும் யோசிக்காதைங்கோ என்ன., சரிதானே "
என்று தன் தாய்,தகப்பனோடு கடந்த ஒருமாதமாக நடந்து வந்த ஊருக்கு திரும்பணும்  என்றபிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்தான் ஜெகதீஸ்.

அவனின்  எண்ணச்சிதறல்கள் அவனது ஊருக்கும் செல்லத் தவறவில்லை. கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்ட ஆலையடி கிராமத்தை சேர்ந்த  செபரெத்தினம் ராஜேஸ்வரி தம்பதியின் மூத்த மகன் ஜெகதீஸ். தகப்பன் ஆசிரியராக இருந்தாலும் அவர் அடிப்படையில் ஒரு விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர். செபரெதினம் அவர்களின் தகப்பனார் கனகரெத்தினம் போடியார் பல ஏக்கர் காணி பூமிகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்.. இரண்டு போகங்கள் செய்கை பண்ணக்கூடிய நெற்காணிகள் அவருக்கு பல ஏக்கர் இருந்தன.

கனகரெத்தினம் போடியார் ஒரு சைவ வேளாளராக இருந்தவர். ஆனால்  அந்தக் காலத்தில் இலங்கையில் மெதடிஸ்த மிசனரி கிறிஸ்தவ மதத்தை வெகுவாக பரப்பிக் கொண்டிருந்தபோது கிழக்கிலும் அதன் செயற்பாடு விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அந்த திருச்சபையினரின் பிரசங்கங்கள் பல ஊர்களிலும் நடந்தன. அதில் பலர் ஈர்க்கப்பட்டதாலும், மிசன் பாடசாலைகளில் ஆசிரியர் உத்தியோகம் கிடைத்ததாலும் பலர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்று சொல்வதுண்டு.

அப்படி மாறியவர்களில் கனகரெத்தினம் அவர்களும் ஒருவர். அவர் மகன் செபரெதினம் அவர்கள் தன் தந்தை வழிவந்த கிறிஸ்தவர்தான். கனகரெத்தினம் அவர்கள் தன் பிள்ளைகளை படிப்பித்து அவர்களை நல்ல உத்தியோகத்தில் அமர்த்த தவறவில்லை. செபரெதினம் மாஸ்டருக்கு இரு சகோதரங்கள் அவர்கள் இப்போது உயிருடன் இல்லை. ஜெகதீசின் பெரியப்பாவும், மாமியுமான அவர்கள் காலமாகி பல வருடங்களாகிவிட்டன. அவர்கள் இருவரும் திருமண பந்தத்தில் இணையாமல் உத்தியோகம் பார்த்தும், ஆண்டவரின் ஊழியத்தில் இணைந்தும் இருந்து மறைந்தவர்கள்.

இவர்கள் மறைவுக்குபின் தனிமையில் ஒற்றையாளாக விடப்பட்ட செபரெதினம் அவர்கள் ஆசிரியத் தொழில் செய்துகொண்டே தங்கள் நிலபுலன்களைப் பார்த்துக்கொண்டும், பிள்ளைகளை படிப்பித்துக் கொண்டும் இருந்த வேளையில்தான் நாட்டில் அசாதாரண நிலை உருவாகத் தொடங்கியது.
இலங்கையில் மாறி மாறிவந்த அரசுகள் தமிழர்களின் உரிமைகளை கொடுக்கவும் இல்லை.நலன்களை பேணவும் இல்லை.

விரக்கதி அடைந்த தமிழர் தரப்பு பல முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் என்று நடத்தினாலும் பேரினவாத அரசுகளிடமிருது எந்த அனுகூலமும் கிடைக்கவில்லை.அதன்பின் பல தமிழர் அமைப்புகள் உருவாகி ஆயுத போராட்டத்தில் இறங்கி அரசுக்கு எதிரான போராட்டத்தில்இறங்கின.

இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட மோதல்களால் நாட்டில் அமைதி குலைந்தது. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத ஒரு சூழல் ஏற்பட்ட போதுதான் செபரத்தினம் மாஸ்டர் தனது மூன்று பிள்ளைகளையும் கனடாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார். தனது காணிகளில் சிலவற்றை விற்று ஏஜென்சிக்காரருக்கு கொடுத்து அவர்களை பாதுகாப்பாக அனுப்பி வைத்தார். அதன்பின் அவர் மனைவி ராஜேஸ்வரியுடன் தனிமையில் ஊரில் இருந்து வந்தார். ஓய்வு பெற்றார்.

பிள்ளைகள் கனேடியப் பிரஜைகள் ஆனபின் ஊர் வந்தபோது அவர்களுக்கு நல்ல இடத்தில திருமணங்கள் செய்து வைத்தார்.
பல வருடங்கள் உருண்டோடினபின்னர் தங்கள் பெற்றோரை தங்களுடன் இணைத்துக்கொள்ள விரும்பித்தான் ஜெகதீஸ் அவர்களை கனடாவுக்கு கூப்பிட்டான். அவர்களும் விரும்பியே வந்தார்கள். அந்நிய நாடு,அந்நிய சூழ்நிலை அவர்களுக்கு. ஆரம்பத்தில் பிள்ளைகளைக் கண்ட சந்தோசம். பேரப்பிள்ளைகள் பார்த்த மகிழ்ச்சி என்று நன்றாகத்தான் இருந்தது.

நாளடைவில் அவர்களுக்கு இந்த புலம்பெயர் வாழ்வு அலுப்புத் தட்டியது என்று சொல்வதைவிட பிடிக்கவில்லை. இருவரும் மகனோடு ஊருக்கு திரும்பணும் புராணம் பாடத் தொடங்கினார்கள். பல வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் அவர்களின் பக்க நியாயம் வெற்றி பெற்று இன்று தாயகம் நோக்கி பறந்து விட்டார்கள்.

என்னதான் அயல்நாட்டில் அனைத்தும் கிடைத்தாலும் அவர்களுக்கு அவர்களின் தாய்நாடுதான் உசத்தி என்பதை நிலைநிறுத்தி ஊருக்கு திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஜெகதீசின் எண்ணங்கள் சிறகடித்து ஓய, மூளை உறக்கநிலை அடைய, உள்ளுணர்வு அமைதியடைய அவன் கண்கள் தூக்கத்தை இப்பொழுது தழுவிக்கொண்டன.

---

# சந்தையும் சந்திப்புகளும்

"மலர்..பிள்ளை ..மலர் "காலை உணவை முடித்து விட்டு ஹாலில் தன் பழைய நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த ஜெயராஜ் அவர்கள் சென்றதும் தன் அக்கா மகள் மலர்விழியை அழைத்தான்.

"இதோ வந்திட்டன் மாமா" சமையலறையில் அலுவலாக இருந்தவள் பரபரத்து ஓடிவந்தாள்.

" மலர் நான் நம்மட சந்தைக்கு போய் சாமானுகள் வாங்கி வாறன். ஒரு வாஸ்கற் தாறீரா.
எத்தனை வருசமாச்சி சந்தையைப் பார்த்து." என்றான் ஜெயராஜ்.

" போயிட்டு வாங்க மாமா. நேற்றே நிறைய காய்கறி, வீட்டுச்சாமான்கள் எல்லாம் இவர் வாங்கிப்போட்டார். பரவாயில்ல உங்களுக்கு என்ன பிடிக்குதோ அதை வாங்குங்க. இதோ கொண்டுவாறன் நல்ல வாஸ்கெட் ஒன்று." என்ற மலர் ஒரு பிளாஸ்டிக் கூடையை கொண்டு வந்து கொடுத்தாள்.

அதை வாங்கிக்கொண்ட ஜெயராஜ், அங்கிருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு சந்தைக்கு கிளம்பினான்.
பல வருடங்களுக்குபின் சைக்கிளில் சந்தைக்கு போவது அவனுக்கு பரவசத்தையும்,மகிழ்ச்சியையும் கொடுத்தது.

ஞாயிற்றுக்கிழமை பொதுச்சந்தை ஜெயராஜ்ஜின் ஊரில் மிக ஆரவாரமாக ஆரம்பமாவது அந்தக்காலம் தொடங்கி நடப்பது ஒன்றுதான். பக்கத்துக்கிராம மக்கள் வந்து கூடுவார்கள். அயலூர்களில் இருந்தும் வியாபாரிகள் தங்கள் கடைகளைக் கொண்டுவந்து விரிப்பார்கள். கிழமைக்கு ஒருதரம் அது கூடுவதால் சனத்திரள் நிறைந்து இருக்கும்.

அந்தப் பிரதேச சேனைகளில் விளைந்த காய்கறிகள், இலைக்கறிகள், கடல்மீன், ஆற்றுமீன், ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, வெங்காயம், மிளகாய்,மற்றும் மலைநாட்டிலிருந்து வரும் கரட்,பீட்ரூட்,பீன்ஸ், லீக்ஸ், உருளைக்கிழங்கு என்று அனைத்து பொருட்களும் வந்து குமியும். இது தவிர அலுமினியப் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள், சட்டி,பானை, தட்டுமுட்டு சாமான்கள் என்று ஏகப்பட்ட வீட்டுக்கு தேவையான பொருட்கள் கிடைக்கும். ஜெயராஜ் தனது ஊரின் பழைய சந்தையை நினைத்துக்கொண்டான். அது காட்டுக் கம்புதடிகள் கொண்டு கட்டப்பட்ட கொட்டில்களாகவே இருந்த சந்தை. ஆனால் இன்று கட்டிடத்

தொகுதியாக அழகாக அமைக்கப் பட்டிருக்கும் மத்திய சந்தையாக அவனை வரவேற்றது.

மேற்கு ஐரோப்பிய நாடான டென்மார்க்கிலிருந்து கால் நூற்றாண்டுக்குப் பின்னர் அவன் ஊருக்கு சென்றிருந்தான். தன் சின்ன வயசிலும், வாலிப வயசிலும் தனது அப்பா,அம்மா, நண்பர்களுடன் ஒவ்வொரு ஞாயிறும் ஜெயராஜ் சந்தைக்கு செல்வதுண்டு. பள்ளியில் படிக்கும் காலத்தில் தன் நண்பன் மணியுடன் வந்து, சந்தையில் தேயிலைக் கடை விரித்திருக்கும் பதுளை செட்டியாரிடம் மஞ்சள் கடலை வாங்கிக் கொண்டு, மாலைநேரம் வந்ததும் கடற்கரைக்கு சென்று அமர்ந்து கடலையை கொறித்துக்கொண்டே ஊர்,உலக நடப்புகளை பேசுவதுண்டு. தமிழ் இலக்கியம் பற்றி கதைப்பதுண்டு.கம்பராமாயணத்தில் மந்தைரை சூழ்ச்சிப் படலம், கைகேகி சூழ்வினைப் படலம் என்று அக்குவேறு ஆணிவேராக அலசுவதுண்டு.பள்ளிக்கூடத்தில் இரத்தினம் ஆசிரியர் இலக்கியம் படிப்பிக்கும் போது அவரை கேள்வி கேட்டு துளைப்பதுண்டு. இப்படிதான் ஒருநாள், இரத்தினத்தார், இராமனின் முடிசூட்டு விழாவிற்கு அயோத்திமானகரை அலங்கரித்த விதம்பற்றி கம்பன் புனைந்த பாடலொன்றை சொல்லிக்கொண்டிருந்தார்.

"மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தென கமுகமார்ந்தன
தங்கெளிர் முறுவலில் ராமனாண்டன.
கொங்கையை நிகர்த்தன கனக கும்பமே"

என்ற பாடலுக்கு இரத்தினம் மாஸ்டர் உரை சொல்லிக் கொண்டு இருந்தார். ஜெயராஜ்ஜின் வகுப்பில் குழப்படியும், துடிப்பும் மிக்க மாணவன் ஜோதி.

அவனும் எதையும் சிந்திக்காமல் எழுந்து, "சார் கொங்கை என்றால் என்ன சார்" என்று கேட்டுவிட்டன்.. மாஸ்டர் தடுமாறிக்கொண்டே

"கொங்கை என்றால்..அது.. அது வந்து இந்த கொங்கையைப் போல வீதி முழுவதும் கும்பம் வைத்து அலங்கரித்தார்களாம்." என்று மழுப்பலாக சொல்ல, அவன் மீண்டும் எழுந்து,

"அதுதான் சார் கொங்கை என்றால் என்ன" என்று கேட்டு வைக்க, மாஸ்டர் கொஞ்சம் சங்கோசப்பட்டு நெளிந்தவுடன், ஜோதியை ,ஜெயராஜ்தான் இருக்கச் சொல்லி அமைதிப் படுத்தினான்.

கொங்கை என்றால் எல்லோருக்கும் பொருள் தெரியும். இருந்தாலும் அதை இரத்தினம் மாஸ்டர் வாயால் வேறு விதமாக கேட்க விரும்பினான் ஜோதி.அப்படி கேட்பதில் அவனுக்கு ஒரு சந்தோசம்.

ஜெயராஜுக்கு இந்த இந்துத்துவ இதிகாசங்களில் உள்ள இடக்கு முடக்குகள் பல இன்றுவரை புரிவதே இல்லை.

அன்றும் அப்படியே.ஞாயிறு வந்தால் சந்தைக்கு வந்து செட்டியாரிடம் வறுத்த மஞ்சள் கடலை வாங்கிக் கொண்டுபோய் கடற்கரையில் இருந்து அவன் தன் நண்பனுடன் விவாதிப்பான். இராமன்,கடவுள் அவதாரம் என்றால் கானகத்தில் மாரீசன் மாயமான் வடிவத்தில் வந்ததை ஏன் அறிந்து கொள்ளவில்லை? தசரதனுக்கு அறுபதினாயிரம் மனைவிமார் என்றால் அவர்களுக்கு என்ன நடந்தது? ஏன் கோசலை,கைகேகி,சுபத்திரை முன்னிலைப் படுத்தப்பட்டார்கள்? இனி, பாரத சுருக்கத்தையும் அவன் விட்டு வைப்பதில்லை. ஆசிரியர் படிப்பித்துக் கொண்டு இருக்கும்போதே "சார் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது" என்பான். "என்ன சந்தேகம்" என்று அவர் கேடால், சொல்லுவான். துரியோதனன் உள்ளிட்ட கௌவர்கள் அந்தகன் திருதராட்டினன் பிள்ளைகள். அவனின் தம்பி பாண்டு. இவருக்கு பிள்ளைகள் இல்லை.ஒரு சந்தர்ப்பத்தில் குந்திதேவிக்கு முனிவர் ஒருவர் கொடுத்த மாத்திரைகளை ஒருத்தருக்கும் தெரியாமல்,அவர் சூரியக் கடவுளை நினைத்து,ஒன்றை சாப்பிட, அவர்முன் சூரியன் தோன்றி ஒரு குழந்தையை கொடுக்கிறார். அந்த குழந்தையை ஆற்றில்விட்டுவிட்டு, பின்னர் எமதர்மன்,,வாயு பகவான்,இந்திரன் முதலானவர்களை நினைத்து குந்தி மாத்திரைகளை உட்கொள்ள பஞ்சபாண்டவர் தோன்றுகிறார்கள்.

ஆக இவர்கள் பாண்டுவின் பிள்ளைகள் இல்லை அல்லவா? அப்படியென்றால் அவர்கள் எப்படி பஞ்ச பாண்டவர்கள் ஆக முடியும். எப்படி நாட்டில் உரிமை கேட்கமுடியும்? இந்த வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் குருசேத்திர யுத்தமே ஒரு அபத்தமல்லவா? இப்படி இரத்தினம் மாஸ்டரை கேள்வி கேட்பான்.மேலும், தருமன், தன்னையும் வைத்து சூதாட்டத்தில் தோர்த்தபின், எப்படி பாஞ்சாலியை சூதாட்டத்தில் வைத்து ஆடலாம். அவர் தோற்றத்தோடு அங்கு ஆட்டமே முடிவுபெறுகிறதே. மற்றும் பொய்யே சொல்லாத தருமன், எப்படி "அசுவத்தாமா இறந்தான்" என்று துரோணர் காதுபட கூவலாம்.

இறந்தது யானையாக இருக்கலாம். ஆனால் துரோணர், தன் மகன் அசுவத்தாமா இறந்து விட்டான் என்று கலங்கி நின்றபோதே வஞ்சகமாக கொல்லப்பட்டாரே. இதெல்லாம் உண்மைக்கு மாறாக இல்லையா? இப்படி லாஜிக் இல்லாத விடயங்களை அவன் கேட்காமல் விடுவதில்லை. மாஸ்டரும் பதில் சொல்ல தடுமாறாமல் விடுவதில்லை. படிக்கும் காலத்தில் பின்னேரங்களில் பக்கத்து ஊர்களுக்கு சைக்கிள் சவாரி தன் நண்பனுடன் செல்வதுண்டு. பத்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஊரில் இருக்கும் திரையரங்கத்துக்கும் படம் பார்க்க செல்வதுண்டு. நண்பர்களோடு கடலில் குளிப்பது, கரப்பந்தாட்டம் ஆடுவது, கால்பந்தாட்டம் ஆடுவது, துடுப்பாட்டம் ஆடுவது என்று ஊரில்

கழித்த பொழுதுகள், நாட்கள் எல்லாம் ஜெயராஜுக்கு ஒருதரம் மனதில் வந்து விரிந்து சுருண்டது.அவன் சந்தைக்கும் வந்து விட்டான். சைக்கிளை கொண்டு சென்று அங்குள்ள ஸ்டாண்டில் வைத்து பூட்டிவிட்டு சந்தையினுள் நுழைந்தான்.

கையில் பையும் கையுமாக சந்தையில் நின்ற ஜெயராஜை பலரும் பார்த்து சிரித்துக் கொண்டு போனார்கள்.தன்னோடு படித்த பலர் சந்தைக்கு வந்திருந்தார்கள்.சிலரை அடையாளம் காண்பது கஷ்டமாக இருந்தது. அவர்கள் உருவத்தில் மாற்றம்.முகத்தில் முதிர்ச்சி, இப்படி சிலர். பலருக்கு தலை முடி உதிர்ந்து தட்டையாக இருந்தது.இன்னும் சிலருக்கு தலை பஞ்சுப் பெட்டிபோல் இருந்தது. ஒரு சிலரை அடையாளம் கண்டு பேசவும் முடிந்தது. ஜெயராஜுடன் படித்த சண்முகம் அடையாளம் கண்டு பேசினான். "என்ன மச்சான் எப்படா வந்த நீ... எப்ப போறாய்... ஒரு தலைமுறை இடைவெளி இல்லையா?' கேட்டான் சண்முகம்.

" நேற்றுத்தான் வந்தனான். மூன்று வாரம் நிற்பதாக உத்தேசம். நீ எப்படி இருக்கிறாய்.. வீட்டில் எல்லோரும் நல்லா இருக்கிறாங்களா?"

"ஆ. எல்லோரும் நல்லா இருக்கிறாங்க.எனக்கு இப்போது பென்சன்தானே.மனிசிக்கும் பென்சன் வந்திட்டுது. பிள்ளைகள் மூன்று.இரண்டுபேர் படிச்சிட்டு வேலையில இருக்கிறாங்க. மூத்தவன் பிரதேச செயலகத்தில். இரண்டாவது மகள் படிப்பிக்கிறாள்.கடைசி மகன் கம்பஸில் இருக்கிறான்."

"அப்ப,பிறகென்ன. பிள்ளைகள் எல்லாம் படிச்சிட்டாங்க.என்று சொல்லு"
"ஓம் மச்சான் ஓரளவுக்கு நல்லா போயிட்டு இருக்கு. மகளுக்குத்தான் ஒன்றும் சரிவருகுதில்ல. அவளுக்கு ஒரு நல்ல சம்பந்தம் வந்திட்டுதென்றால், முடிச்சிடலாம். பிறகு மூத்தவனை கொத்திக்கொண்டு போக பலர் பேசி வாறாங்க"

" ஒன்றும் யோசிக்காத எல்லாம் நல்லபடியாக முடியும்."

"ஏதோ உன் வாக்குப்படி நல்லது நடக்கட்டும். உன்னைக் கண்டதில பெரிய சந்தோசம். எவ்வளவு காலம்டா..
பள்ளில படிக்கும்போது உன் பேச்சு,சிரிப்பு, கலகலப்பு,எல்லாம் நேற்றுபோல இருக்கு மச்சான். நீ அப்படியேதான் இருக்கிறாய். என் பார்வைக்கு அப்படிதான் தெரியுது. வயசின் முதுமை தவிர. எப்படிடா"

"இதில ஒண்டும் சிதம்பர ரகசியம் இல்ல. குளிர்நாடு.வெயில் வரும் ஆனால் இப்படி வெக்கையா இருக்காது. அலைச்சல், உலைச்சல்

கிடையாது.ஏறினா கார், இறங்கினா வீடு. எல்லாவற்றிற்கும் மேலாக மன அமைதி,சந்தோசம். இவைகள்தான் முடி நரைக்காமல்.முகத்தில் சுருக்கம் விழாமல் இருப்பதற்கு காரணங்கள்.
ஆனால் இங்கு நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல், அதனால் வந்த கஷ்டங்கள் எம் மக்களை பல வழிகளிலும்
சீர்குலைத்து சின்னாபின்னமாக்கி இருந்தது. இல்லையா"
"நீ சொல்வது உண்மைதான் மச்சான். மக்கள் மிகவும் கஸ்டப்பட்டு நலிந்து போனார்கள்.. இப்பொழுது ஓரளவு பரவாயில்ல. நல்லது நடக்கட்டும்.
சரி மச்சான் நான் அங்கு மீன் மார்க்கட்டுக்கு ஒரு நடை போகவேணும் வரட்டே"

ஓம் .ஓம்.சரி. போயிட்டு வா மச்சான், நானும் அந்தப் பக்கம் போய் கொஞ்சம் கீரை வாங்கப் போறன்."

என்று சண்முகத்துக்கு விடைகொடுத்த ஜெயராஜ் கீரை விற்கும் பகுதிக்கு வந்தான். பல பெண்கள் வரிசையாக இருந்து
பொன்னாங்கண்ணி,குப்பைக்கீரை,வல்லாரை, குறிஞ்சா இலை,வாழைப் பூ, என்று விற்றுக் கொண்டு இருந்தார்கள்.ஜெயராஜைக் கண்டதும்,
"வாங்க தம்பி, நல்ல முளைக் கீரை இருக்கு வாங்குங்க." என்றா ஒருவர்.

"தம்பி நல்ல பொன்னாங்கண்ணி இருக்கு. கட்டு இருபது ரூபாதான்."
என்றார் மற்றவர்.
அடுத்தவரோ, வல்லாரை, வாழைப்பூ இருக்குத் தம்பி" என்று தன் பங்குக்கும் சொன்னார்.
ஜெயராஜ் எல்லோரிடத்திலும் அவர்கள் சொன்னபடி
வாங்கிக்கொண்டான்.
அவர்களுக்கு பெரிய சந்தோசம். கைபேசிக் கமராவால் அவர்களை படம் எடுத்துகொண்டான்.
அந்த பெண்களுக்கெல்லாம் இனி இல்லையென்ற மகிழ்ச்சி. அவர்களை கடந்து சென்றபோது.
நல்ல பப்பாசிப் பழங்கள் இருந்தன. ஒரு நல்ல பழம் வாங்கிகொண்டான்.
பக்கத்தில் நல்ல
ஒற்றைவேர் மரவள்ளிக் கிழங்கு குமியல் இருந்தது.அதில் இரண்டு கிலோ வாங்கிக்கொண்டு வீட்டுக்கு திரும்ப தயாரானான் ஜெயராஜ்.

இவைகள் எல்லாம் அவன் வாழும் நாட்டிலும் கடைகளுக்கு வருகின்றனதான். ஆனால் இப்படி "பிரஷ்சா" வாங்க முடியுமா? அங்கு மரவள்ளிக் கிழங்கில் மெழுகு பூசி வருகிறது.பொன்னாங்கண்ணி

ரெஜிபோமில் அடைக்கப்பட்டும்,வல்லாரை பொலித்தினில் சுற்றியும் வருகின்றன. இப்படி ஊரில் வாங்குவதுபோல் அங்கு வாங்க முடியுமா? என்று நினைக்க,ஒரு குதூகலமும், துள்ளலும் அவனுக்குள் ஏற்பட்டது. சனங்கள் போவதும், வருவதுமாக இருந்தார்கள்.முப்பது வருடங்களுக்கு முன் இருந்த சந்தை இப்பொழுது முற்றாக மாறி இருந்தது. கார்களும்,மோட்டர் சைக்கிள்களும் ஏராளம். ஒரு நகர் புறம்போல தான் இருந்தது.

ஜெயராஜ் தன் சைக்கிள் இருந்த இடம் வந்து வாஸ்கற்றை சைக்கிள் ஹன்டிலில் கொழுவிக் கொண்டு வீதிக்கு வர கிளம்பினான். ஒரு சில அறிந்த முகங்களைப் பார்க்க முடிந்தது.பலர் பார்த்து சிரித்துக் கொண்டு சென்றார்கள்,பலர் கண்டும் காணாத மாதிரி சென்றார்கள்.அவர்களில் சிலர் முன்பு தன் தந்தையார் வயலில் வேலைசெய்தவர்கள்.ஆனால் அவர்கள் ஜெயராஜை அடையாளம் காணவில்லை என்பது அவனுக்கு மனதை உறுத்தியது.ஒரு கால் நூற்றாண்டுக்குள் காலம் எப்படி மாறி விட்டது என்று எண்ணிக்கொண்டே சைக்களை மிதிக்கத் தொடங்கினான்.

முன்பு வீதியெல்லாம் வீர மரங்கள், நாவல் மரங்கள், புளியை மரங்கள் நின்று இருந்தன.இன்று அப்படி எதுவும் இல்லை.வீதியோரம் எல்லாம் கடைகள், வங்கிகள், ஹார்ட்வேர் ஸ்டோர்கள்,ஐஸ்க்ரீம் கடைகள், பூட் சிட்டி என்ற சுப்பர் மார்கெட் என்று ஊரையே ஒரு புதுக் கோலத்தில் மாற்றிப் போட்டிருந்தது காலம்.

ரோட்டைப் பற்றி சொல்லவே வேண்டாம்.அவ்வளவு நேர்த்தி. சுனாமிக்குப் பின் பல தன்னார்வ தொண்டு நிறுவனமும், அரசும் சேர்ந்து வீடுகளை,வீதிகளை நிர்மானித்திருப்பதை காண முடிந்தது. தன் ஊர் மாவட்ட வைத்திய சாலையை கடந்து செல்ல முற்பட்ட ஜெயராசுக்கு எதிரே தாதிமார் இருவர் தங்கள் சீருடைகளுடன் வீதியில் வந்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் அண்மித்ததும், இருவரில் ஒருவர் தன் பெரியப்பா மகள் சுகன்யா என்று தெரிந்தது. அவளும், ஜெயராஜைக் கண்டுகொண்டு சிரித்தாள். சைக்கிளை ஓரம்கட்டி நிறுத்திவிட்டு இறங்கினான்.

"அண்ணன், எங்களையெல்லாம் மறந்திட்டிங்க என்ன? எப்பண்ணே வந்தீங்க" கேட்டாள் சுகன்யா.

"நேற்று வந்தனான் பிள்ள. மருமகள் மலர் வீட்டில் தங்கிறன். எப்படி வீட்டில் எல்லோரும்?

பெரியம்மா யாரோடு இருக்கிறா? அக்கா எப்படி இருக்கிறா?"

நல்லம் அண்ணன். அம்மா தங்கச்சியோடதான் இருக்கிறா. நாங்க எல்லோரும் போய் பார்துக்கொளுவோம்.
அம்மாவுக்கு கொஞ்சம் முடியாது. வயசும் போயிட்டுதானே.."
"ஆமால்ல...அவவுக்கு இப்ப எண்பதைத் தாண்டி இருக்குமல்ல."
"ஓம் அண்ணன் எண்பத்திரெண்டு"
"ஆ, அதுதானே...அது சரி சுகன்யா. இது.யாரு"
"இவ பக்கத்து ஊர். என்னோடுதான் ட்ரைனிங் இருந்தவ"
"அப்படியா? அது சரி எங்க யூனிபோமுடன் கிளம்பிட்டீங்க"
"பக்கத்தில பூட் சிற்றிக்கு போயிட்டு வரலாம் என்று வந்தோம்."

"யூனிபோமுடனா? திரும்பவும் ஹொஸ்பிடல் போறீங்களா?"

"ஓம், டொக்டர் பதினொருமணிக்கு வாட்ஸ் ரவுண்ட்ஸ் வருவார். அதற்கு இடையில திரும்பவேணும்"

ஜெயராஜ் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.
"என்ன,அப்படி பார்க்கிறீங்க.நான் கல்யாணம் கட்டி குழந்தைகளும் பெற்றதால,கோலமா போயிட்டன். நீங்க
முதல் பார்த்த மாதிரி இருக்க முடியுமா ஆளே மாறிப் போயிட்டன் பார்த்தீங்களா?"

"அதுவும் தான் சுகன்யா.அதைவிட எனக்கு பெரிய ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருப்பது நீங்கள் இந்த யூனிபோமுடன் வெளியில் வந்தது. அதுவும் சுப்பர்மார்கெட் போவதாக சொல்வது. அதன்பின் திரும்பவும் ஹாஸ்பிடல் போய் டாக்டருடன் நோயாளிகளுக்கு சேவை செய்வது என்பதும்"

"என்னண்ணன், என்ன பிரச்சினை" என்றாள் வெள்ளந்தியாக சுகன்யா.
"நோயாளர்களுக்கு சேவை, பணிவிடை செய்பவர்கள்தானே நர்ஸ்கள். அவர்கள் நோய் காவிகளாக இருந்தால் எப்படியம்மா?

ஹாஸ்பிடலைவிட்டு எப்படி நீங்க சீருடையுடன் வரலாம்? அப்படி வருவதாக இருந்தால் உங்கள் பிரத்தியோகமான லொக்கரில் உங்கள் சீருடைகளை வைத்துவிட்டு, சாதாரண உங்கள் ஆடைகளை உடுத்திக் கொண்டு வரவேண்டும். உங்களுக்கான வாடரூப் ஒதுக்கி தந்திருப்பார்கள்தானே."

"அண்ணன் எங்களுக்கு அப்படியான வசதி ஒன்றும் இங்கு கிடையாது. நாங்க வீட்டில் இருந்துதான் தாதிமார்களின் சீருடை அணிந்து செல்கிறோம். வேலைமுடிந்து வரும்போதும் அதே உடையுடன்தான் வீடு திரும்புகிறோம்."

"இதெல்லாம் சரியா சுகன்யா? சுகாதாரம், என்னாவது? வெளியில் இருக்கும் கிருமிகள், பக்டீரியாக்கள் எல்லாம் உங்கள் உடைகளில் தொற்றிக் கொள்ளுமே. அது நோயாளர்களை பாதிக்காது என்பது என்ன நிச்சயம்?

இதை இங்குள்ள சுகாதார அமைச்சோ, அதன் அதிகாரிகளோ, அல்லது வைத்தியசாலை வைத்திய அதிகாரியோ கவனித்து நடவடிக்கை எடுக்க மாட்டாங்களா?"

" ஒருவரும் எங்களுக்குரிய வசதிகள் செய்து தருவதுமில்லை. அதற்கு சம்மந்தப்பட்ட அமைச்சுடனோ, அமைச்சருடனோ, எங்கள் மேலதிகாரிகள் பேசுகிறார்களோ தெரியாது?" என்றாள் சுகன்யாவின் தோழி.

"அண்ணன் உங்க வெளி நாடு மாதிரி, வசதிகள்,வாய்ப்புகள் நமது நாட்டில் வருவதற்கு இன்னும் பல தலைமுறைகள் மாறவேண்டும் என்று தோணுது."

ஜெயராஜுக்கு ஒரு நொடி என்ன பேசுவதென்றே தெரியவில்லை. பின் தன்னை சுதாகரித்துக்கொண்டு "சரி சுகன்யா,நீங்க புறப்படுங்க. உங்க டியூட் சிற்றிக்கு. நான் ஆறுதலாக வீட்டுக்கு வந்து பெரியம்மாவை பார்க்கிறன்" என்றதும் சுகன்யாவும், அவள் தோழியும் விடைபெற்று நகர்ந்தார்கள். அவர்கள் போவதையே பார்த்துகொண்டிருந்த ஜெயராஜ் ஒரு கணம் பிரமைபிடித்து நின்றிருந்தான்.

இலங்கையில் இருக்கும் எல்லா வைத்திய சாலைகளும் இப்படிதான் இருக்குமா? அல்லது தமிழர்கள் பகுதில் உள்ள வைத்திய சாலைகளில்தான் இப்படியா? அவன் நாட்டில் இருந்த காலத்திலும் சரி, பின் போர் நடந்த காலத்திலும் சரி போதுமான வைத்திய வசதிகள் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பது உண்மைதான்.

ஆனால் போர் முடிந்த பின் ஏற்பட்ட மாற்றங்கள், அதன்பின் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம், என்பன நாட்டில் மாற்றங்களைக் கொண்டுவரவில்லையா? அரசு, இவற்றைப்பற்றி கண்டு கொள்ளவில்லையா? சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு

என்பன இவை பற்றி சிந்திக்க வில்லையா? இதைவிட உலக சுகாதார அமைப்பு இது பற்றிக் கவனம் கொள்ளவில்லையா? என்ற பல கேள்விகள் அவன் மனதில் எழுந்தும், அவற்றிற்கு பதில்கள் கிடைக்காமல் சைக்கிளில் ஏறி இருந்து அதை மிதித்துக்கொண்டு மருமகள் மலர் வீடு நோக்கி சென்றுகொண்டு இருந்தான்.

---

# அப்பா

விமலன் வேலை விட்டு வீடு வந்து சேர்ந்தான். சமையலறையிலே சங்கரப்பிள்ளை அண்ணன் சமைத்துக் கொண்டிருக்கும் நேரமது. எனவே சமையலறையை எட்டிப் பார்த்தான். ஊசாட்டத்தைக் காணோம்.

வழக்கத்திற்கு மாறாக அவனுடைய மனம் பதட்ட நிலையில் இருந்தது. காரணங்களிலே தொங்காத ஓர் ஊமைச் சோகம் உள்ளத்திலே ஊர்வதைப் போலவும். அதற்குச் சரணாகதியடையாத ஒருவிதத் தீர்மானத்துடன், தன் அறைக்குள் சென்று, உடைமாற்றிக் கொண்டு ஹோலுக்கு வந்தான்.

அவனுடைய பெயருக்கு வந்த இரண்டு கடிதங்கள் கிடந்தன. வழக்கமான கடிதங்கள் ஒன்று 'டெலிபோன் பில்' மற்றையது 'பாங் ஸ்டேற்மன்ட்'. அவற்றைப் பிரித்துக் கணக்கு விபரங்களையும் மனசிலே பதித்துக் கொண்டான்.

உடல்கூட அசதியாக இருந்தது. 'பணம் உழைக்கும் மெஷ'னாக வாழ்ந்தால் இப்படித்தான்' என்று மனஞ் சலித்துக் கொண்டது. இரண்டு வேலைகள். ஒரு வேலை காலை ஐந்து மணி தொடக்கம் மாலை மூன்று மணி வரை. ஒரு மணித்தியாலத்திற்கு வீடு வந்து, மீண்டும் தயாராகி நாலு மணிக்குத் துவங்கும் வேலைக்கு ஓடுவான். அந்த வேல இரவு பதினொரு மணிக்குத்தான் முடியும். 'உடம்பில தென்பிருக்கிற நேரம் உழைக்க வேணும்' என்கிற உற்சாகத்திலே வேலை செய்கின்றான்.

ஆனால் கடந்த இரண்டு தினங்களாக உடல் 'ஆத்தாது' என்று கெஞ்சுவதுபோல அவனுக்குத் தோன்றியது. இன்று 'சிக்' லீவ் எடுத்துக் கொண்டு நேரத்துடன் வந்துவிட்டான்.

'அப்பாவுக்கு எப்படி இருக்கு...' என்கிற ஏக்கமே இந்த அசதிகளுக்கும், பதட்டங்களுக்கும் காரணம் என்பதை அவன் உள்மனம் ஏற்றுக் கொண்டாலும், ஒன்றுமே நடக்காததுபோலவே அவன் வாழ விரும்பினான்.
'அப்பாவின் அருளுக்கும் ஆண்மைக்கும் முன்னல், எமன் வருவதற்குச் சரியாக யோசிப்பான்' என்று அவன் தன் மனசிலே ஏற்படுத்திக் கொண்ட கற்பிதம் குழந்தைத்தனமானது. பரவாயில்லை, விமலன் எப்பொழுதும் 'அப்பாவின் குழந்தை'யாக இருப்பதையே விரும்பினான்.

'சோறுடைத்துச் சோழவள நாடு' என்று ஒரு காலத்திலே பேசினார்கள். ஆனால், அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தின் தென்சீமையை அறியாத

காலத்திலேதான் அவ்வகையான ஒரு சொலவடையை ஏற்படுத்தியிருப்பார்கள்.
'மீன் பாடும் தேனாடு' என்று அழைக்கப்படும் மட்டக்களப்புத் தமிழகத்தின் அனைத்து வளங்களின் திரட்சித் திருக்கோவிலாக விளங்குவதினாலேதான், அந்தக் கிராமத்தைத் திருக்கோவில் என அழைப்பதாகச் சிறுவயசிலே விமலன் மிரட்சி கொண்டிருக்கிறான். அப்பா அவனுக்குத் திருக்கோவில் பற்றிய தலவரலாறு சொல்வதற்கு என்றுமே சலித்தது கிடையாது.

சூரபத்மனை வதம் செய்தபோது ஸ்ரீமுருகன் வீசிய வேல் வாகூரக் கல்லைப் பிளந்து, ஒரு வெள்ளை நாவல் மரத்தில் வந்து தங்கியது அந்த இடத்தில் எழுந்தருளியிருப்பது தான் ஸ்ரீசித்திர வேலாயுத ஸ்வாமி கோயில் என்று சொன்னார். ஆரம்பத்திலே இந்தக் கோவில் மேற்கு நோக்கி இருந்ததாகவும் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தைப் போன்று இதுவும் கிழக்கு நோக்கிய கோவிலாக இருப்பதுதான் சிறப்பானதாக இருக்கும் என்று குருக்களும் பக்தர்கள் பேசிக் கொண்டார்களாம். மறுநாள் அவர்கள் வந்து பார்த்த பொழுது பக்தர்களுடைய பிரேரிப்பினை ஏற்றுக் கொண்டது போல, இப்பொழுதுள்ளது போல, வாயில் கிழக்கு நோக்கி மாறி இருந்ததாக அப்பா சொன்ன கதையைக் கேட்டு, அது எப்படிச் சாத்தியமாயிற்று என்று பல இரவுகள் தூக்கத்தைக் கெடுத்து யோசித்திருக்கிறான்.

திரும்பிய கோவில் என்பதுதான் காலப்போக்கில் திருக்கோவிலென வழங்கலாயிற்று என்கிற அப்பாவின் விளக்கத்தினை அவனால் ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. கடலையே தீர்த்தக்கரையாகக் கொண்டு திகழ்வதினால், ஈழத்துத் திருச்செந்தூர் என்கிற புகழ் முற்றிலும் நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்டான். இந்தத் தலபுராணப் பெருமைகளுக்கு அப்பாலான ஓர் ஈடுபாடு அந்தப் பிறந்தமண் மீது விமலனுக்கு எப்பொழுதும் உண்டு உதய சூரியன் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத ஸ்வாமியைக் கும்பிட்டு எழும் காட்சி அவனைப் பரவசப்படுத்தும். கடற்கரையிலே அடர்ந்து கிடக்கும் தாழை, இராவணமீசை, அடம்பன் ஆகியன கடற்கரையின் சுகத்தினை அநுபவிப்பதற்கு விமலனுக்கு என்றும் தடையாக இருந்ததில்லை.

சின்ன வயசிலே கடற்கரையின் ஒவ்வொரு குறுணி மணலையும் அவன் அடியளந்திருக்கிறான். திருக்கோவிலின் கிழக்குப் பகுதி நெய்தல் அழகு சிந்த, மேற்குப் பகுதியில் காடு! அதன் காவல் கோபுரங்கள்போல சங்கமாங் கண்டி, உகந்தமலை, மொட்டையாகல் மலை ஆகியன ரம்மியமாகத் தெரியும். அந்தக் காட்டுக்கு இப்ப ஏதோ புதுப் பெயர். ஆனால், அப்பா அதனைப் பூமுனைக்காடு என்றுதான் அழைப்பார். கடற்கரை சார்ந்த பகுதியிலே எத்தனை ஆயிரம் தென்னை மரங்கள்! அளகபாத்தினை உலர்த்தும் இளம் பெண்களின் கோலத்திலே, வங்கக்

கடலின் சீதளத்தை அள்ளிவரும் தென்றலிலே சுகிக்கும் அழகே அழகு! திருக்கோவிலுக்குச் சொந்தமான நன்செய் வயல்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்திலே பரந்து கிடக்கின்றது.

மண்ணின் மைந்தரின் உழைப்புக்கு அவை போதவில்லை. காடுகளை அழித்துச் சேனைகளாக்கினார்கள். அக்கினி நாளிலே நெருப்பு வைக்கும் நிகழ்ச்சியை விமலன் சிறு வயசில் ஆவலுடன் ரசிப்பான். சேனையாகத் திருந்தாத அந்தக் காட்டிலே நாட்டுக் கட்டைகள் குத்தபட்டு நிற்கும். அந்த நிலையில் அந்த நிலத்திலே சோளன் நன்றாக வளரும். பின்னர் கச்சானுக்கும், ஏனைய சேனைப் பயிர்களுக்கும் வாகான பூமியாக அவர்கள் உழைப்பு அதனை மாற்றிவிடும். மண்ணின் மைந்தருடைய உழைப்புகளின் ஓர்மை மிகுந்த ஓர் உந்நத உருவமாக எப்பொழுதும் விமலனுடைய அப்பா அவன் நெஞ்சிலே குடியிருக்கிறார்.

திருக்கோவில் வீடுகளிலே உள்ள உணவுத் தட்டுகளிலேதான் எத்தனை சுவையான உணவுகள் கொலுவிருக்கும்? கடலிலே கிடைக்கும் மச்சம். கோரைக்களப்பு வாவியிலே கிடைக்கும் நண்டுக்கும் றாலுக்கும் தனிச்சுவையுண்டு என்று இன்றும் விமலனின் நாக்குப் பொச்சடிக்கும்! பற்களின் ஊத்தை கழற்ற இறைச்சி தின்ன விரும்பிக் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற யாரும், இன்றுவரை வெறும் கையுடன் திரும்பயதில்லை. பாலும் தேனும் அவர்களுடைய உணவுத் தட்டுகளிலே வழியும்! யாரே ஓர் எழுத்தாளன் தான் பிறந்த கிராமத்தை நினைவு கூர்ந்தபொழுது, 'சொர்க்கத்திலிருந்து ஒழுகி விழுந்த ஒரு துளி'யாகப் பாராட்டி அதிசயித்திருக்கிறார்.

இத்தகைய ஒரு கற்பிதத்திலே தான் பிறந்த ஊரின் வனப்பு எப்பொழுதும் விமலனின் நனவுகளிலே பவனி வரும் அதன் எழிலுக்கும் வளத்துக்கும் ஆண்மை சேர்க்க அவதரித்த ஒரு மாமனிதர் என்கிற வியப்புக் கலந்த பக்தி எப்பொழுதும் அவனுக்கு அவன் அப்பாமீது உண்டு.

அந்த அப்பா இப்பொழுது முடங்கிக்கிடக்கிறார் என்பதை அவனாலே நம்ப முடியவில்லை. உண்மையை ஆசைகள் விழுங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிச்சயமற்ற நிலையிலே விமலனின் மனசு தளும்பியது.

அப்பாவுக்கு ஐந்து பிள்ளைகள்; மூன்றுமகன்கள். இரண்டு மகள்கள் அவன் அநேகமாக சின்னம்மாவுடன் தங்கிவிடுவான். சின்னம்மாவின் அன்பும், ஆதரவும், காருண்யமும் அவனுடைய பிஞ்சு மனசிலே ஆழமான பதிவுகளை விட்டிருந்தன. அந்த சின்னம்மாவின் செல்வாக்கின் காரணமாகவே தான் கலை-இலக்கியத் துறைகளிலே ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் வளர்த்துக் கொண்டதாக ஒருவகை நன்றியறிதல் உணர்ச்சியுடன் நினைவு கூருவான். மெல்லிசைப் பாடல் நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டு பெயர் பிரபலமானமை, கலையையும் இலக்கிய ஆர்வங்களையும் வளர்த்தெடுக்கூடிய விதத்திலே கொழும்பில் உத்தியோகம் கிடைத்தபொழுது விமலன் மனம்கொள்ளாச்

சந்தோஷத்திலே மூழ்கினான். சின்னம்மாவின் கலாரீதியான செல்வாக்கினாலேதான் இது சாத்தியமாயிற்று என விமலன் நினைத்துக் கொள்ளுவான்.
1983 ஆம் ஆண்டில், இலங்கையில், சிங்களப் பேரின வாதிகளினால், அரங்கேற்றப்பட்ட இனப் படுகொலை ஈழத்திலே வாழ்ந்த அத்தனை தமிழர்களுடைய வாழ்க்கையிலும் ஏதோ வகையில் ஒரு பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. விமலனின் வாழ்க்கையிலும் அத்தகைய மாற்றம் ஏற்பட்டது. கொழும்பு உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு, ஊர் வந்து சேர்ந்தான்.

அந்தக் காலத்திலேதான் அவனுக்குத் திருமணம் நடந்தேறியது. வீட்டார் பேசிக் செய்த கல்யாணந்தான். மனைவி படித்தவளாகவும் உத்தியோகம் பார்ப்பவளாகவும் இருந்தாள். குடும்ப வாழ்க்கையின் நிறைவுக்கும், மகிழ்ச்சிக்கும் சான்றாக, ஒரு பெண்ணும் ஒரு ஆணுமாக இரண்டு குழந்தைகள் கிடைத்தார்கள். அப்பா எப்படித் தன் பிள்ளைகளை உருவாக்கி ஆளாக்கி வைத்தாரோ, அதே போன்று தானும் தன் பிள்ளைகளை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்கிற ஆசை ஒரு வெறியாகவே மாறலாயிற்று.

நாட்டிலே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் அவலத்திலே, விமலனின் தம்பி வெளிநாடு சென்று, அலைந்து திரிந்து, ஈற்றில் நோர்வே நாட்டிலே வாழத் தலைப்பட்டான் அவனுடைய உதவியாலும், அவன் எடுத்த சாதுர்யமான நடவடிக்கைகளினாலும், விமலன் நோர்வே நாட்டிற்கு வந்து வாழத் தலைப்பட்டான்.

நாடு புதிது. அதற்குரிய பருவ காலங்கள் புதிது. அவர்கள் பேணிய விழுமியங்களும் நாகரிகங்களும் புதிது. இந்த நிலையிலே குடும்பத்தை அழைத்து, இந்நாட்டிலே ஒரு குடும்ப வாழ்க்கையை நிரந்தரமாக அமைத்துக் கொள்வதிலுள்ள சாதக பாதகங்களை நீண்ட காலமாகச் சிந்தித்தான். ஈற்றில் தன் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் தமிழ் நாட்டுச் சூழலிலே வாழ ஏற்பாடு செய்தான்.
மூன்று கேந்திரங்களுக்கிடையில் அவனது மனசு ஊசலாடியது.
அவனுடைய இளம் குடும்பம் தமிழ் நாட்டில்.
அவனுடைய அப்பா-அம்மா-வளர்த்து ஆளாக்கிய சின்னம்மா ஆகியோர் திருக்கோவிலில்.

அவன் மட்டும், ஒரு வகையில் பணம் உழைக்கும் எந்திரமாக நோர்வே நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.
இரண்டு வாரங்களுக்கு முன்பு அவன் அப்பா நோய்வாய்ப்பட்டு, கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டார் என்கிற செய்தி கிடைத்தது.

'அப்பாவுக்கு ஒப்பரேஷன் ஒண்டு செய்யனுமாம் மனே' என்று அம்மா தொலைபேசியிலே சொன்ன பொழுது ஆடிப் போனான்.
அவன் அறிவறிந்த பருவத்திலிருந்து அப்பா ஒரு தடுமன், காய்ச்சல் என்றுகூட வைத்தியசாலைக்குச் சென்றதில்லை.
அவருக்கு ஆப்பரேஷன் செய்யக் கூடியதாக என்ன நோய்?
அடுத்த நாள் மீண்டும் ஒரு செய்தி தொலைபேசியிலே கிடைத்தது.
'ஒப்பரேஷன் செய்வதற்கு அப்பாவின் உடல் நிலை ஏற்றதாக இல்லை என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். எனவே, ஊருக்கே திரும்பிக் கொண்டு போறம். இனி நாட்டு வைத்தியம் ஏதாவது செய்து பார்க்கலாம்.'

விஞ்ஞான ரீதியான மேலைநாட்டு வைத்திய முறையினால் குணப்படுத்த இயலாத வியாதியை, நாட்டு வைத்தியன் மாந்திரீகத்தின் மூலமா குணப்படுத்தப் போகின்றான்?
எந்த நேரமும் ஏதாவது செய்தி வரும் என்று மனம் பயந்தது.
அந்தச் செய்தியைத் தாங்க மிகந்த பிரயாசைப்பட்டு மனசைப் பக்குவப்படுத்த வேண்டும் என்கிற நினைவே ஆக்கினை நிறைந்ததாக இருந்தது.

இடைக்காலத்தில் இரண்டாவது வேலையை விட்டுவிடலாமோ என்றும் விமலன் யோசித்தான். இரவில் தூங்க முடியவில்லை. இளமைக் காலத்திலே அப்பாவுடன் செலவு செய்த அந்த இனிய நிகழ்ச்சிகள் மனசிலே குமைந்து குமைந்து எழுந்தன. அவை கனவா நனவா என்று நிதானிக்கவும் முடியவில்லை.

அப்பா தன்னுடைய மனசிலும் இரத்த ஓட்டத்திலும் இவ்வாறு பின்னிப் பிணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அவன் முன்னரெப்போதும் உணர்ந்ததும் இல்லை.
நண்பர்களும், வேலையிடத்தின் சகாக்களும் 'என்ன சுகமில்லையா? என்று கேட்கவும் செய்தார்கள்? ஏன் இப்படி எல்லாம்?
மனம் குழம்பிப் போய்க் கிடந்தது. உடம்பிலே அவனாலே நிதானிக்க இயலாத ஒடுக்கமும்-.உறக்கமும்!
வெளிக் கதவு திறக்கப்படுவது போன்ற சத்தம்.

'யாரு? அண்ணனா?' என்று குரல் கொடுத்தான்.
'ஓமோம்...' என்று சொல்லிக் கொண்டே சங்கரப்பிள்ளை அண்ணன் நுழைந்து கொண்டிருந்தார்.
'அது' முடிஞ்சு போச்சு. அதுதான் 'வீன்மொன பேர்'லுக்கு போய் வாங்கி வந்தனான்...' என்று சொல்லி, 'தெரியாதே?' என்கிற குழு ஊக்குறிக்குள் சொல்ல விரும்பாத விஷயங்களை மூடினார்.
சங்கரப்பிள்ளை அண்ணன் பாவம். வயசு ஐம்பதாகிறது. வீட்டைக்

காப்பாற்றும் கடமையிலே, நோர்வேக்கு வந்து, இந்த வயசில் ஒண்டிக்கட்டையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருக்குக் கொழுவியுள்ளதோ இரவு வேலை. கணகணப்புக்குக் கொஞ்சம் 'விஸ்கி' வயிற்றுக்கள் போட்டுக் கொண்டால்தான் இயக்கங்கள் நேர்சீராக இருக்கும் என்கிற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் சாவகாசமாகத் தன்னுடைய அலுவல்களை முடிப்பதற்கு இடமளித்து, விமலன் ரி.வி. ஸ்ராண்டின் கீழ்த்தட்டிலே இருந்த ஈழநாடு பத்திரிகையை எடுத்து மேயத் துவங்கினான். அந்தப் பத்திரிகையை ஏற்கெனவே நாலஞ்சு தடவைகள் விமலன் வாசித்து விட்டான். இருந்தாலும்...
சங்கரப்பிள்ளை அண்ணன் தான் வாங்கி வந்த 'அப்ப ரென்' விஸ்கியை, அதற்குரிய சடங்கு முறைகளை மிகவும் பவ்வியமாக அநுசரித்து ஒரு 'பெக்' குடித்து முடித்து, ஏதோ அவஸ்தையிலிருந்து விடுபடுபவரைப் போல செருமினார்.

அந்த ஈழ நாட்டின் தலைப்புச் செய்தி 'கொழும்பில் எண்ணெய்க் குதங்கள் தீப்பிடித்து எரிந்தன. எனப் பளிச்சிட்டது! அப்பாவைக் கொழும்புக்குக் கொண்டு வந்த அன்றோ, அல்லது மறநாளோ அது நடைபெற்றது அதனைத் தொடர்ந்து கொழும்பில் நிலவிய பதட்ட நிலையினால் அப்பாவை ஊருக்கக் கொண்டு போக அவசரப்பட்டார்களோ? அல்லது நாட்டு வைத்தியமே சர்வ பரிகாரம் என்று முடிவெடுத்தார்களோ? உண்மைத் தகவல்கள் மறுமுனையிலிருந்து கிடைப்பது அரிதாக இருப்பதாகவே விமலனுக்குத் தோன்றியது.
சட்டென்று அவன் மனசிலே அப்பாவுடன் சம்பந்தப்பட்ட இளவயசு நினைவுகள் ஊர்கோலம் வந்தன.

அறுவடை காலத்திலே அடம் பிடித்து, அப்பாவுடன் வயற்காட்டுக்குப் போய்விடுவான். பள்ளிக் கூடம் இல்லாத நாட்கள் என்றால், நீர்ப் பாய்ச்சும் காலங்களிலும், உரம் போடும் காலங்களிலும் விமலன் அப்பாவின் வயலுக்குச் செல்வான். அப்பாவின் வயலிலே வேலை செய்யும் அனைவருக்கும் விமலன் மகா செல்லம். விமலனை 'பள்ளியான்...பள்ளியான்...' என்று செல்லமான பட்டப் பெயர் சூட்டி அழைப்பார்கள்.
'நீங்க போய் நிழலில் இருங்க தம்பி' என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அப்பா, அப்படி அல்ல. வயல் முழுதும் வரப்புகளில் எல்லாம் மகனை அழைத்துச் செல்வார். அவனுடைய குஞ்சுக்கால்கள் அந்த வயலிலே படுவதை அவர் விரும்பினார். அது ஏன் என்று விமலனுக்குப் புரிவதில்லை.

நெல் செய்கையை ஒரு தொழிலாக, பொருளீட்டும் உபாயமாக அப்பா நோக்கவில்லை என்பதை விமலன் இலகுவாகப் புரிந்து கொண்டான்.

அதனை அவர் பக்தி பூர்வமாக மேற்கொண்டார் வளர்ந்த பின்னர், கிருஷகப் பகுதியினர் நெறிப்படுத்திய புதிய முறைகளையும் யுக்திகளையும் பிரயோகிக்கவேண்டும் என்று விமலன் ஆர்வம் காட்டினான். அவனுடைய ஆர்வங்களை அப்பா வேளாண்மைச் செய்கையிலே புகுத்துவதில் மகிழ்ந்தார்.
விளைச்சல் அமோகமான பொழுது, அப்பா வார்த்தை கண்டுபிடிக்கத் திணறி, மனசும் முகமும் மாபெரும் சிரிப்பாக மாறும் அந்தக் காட்சியை விமலன் என்றுமே மறந்ததில்லை.
யானைக்காவல், பன்றிக்காவல் என்று அப்பா செல்வதுண்டு. அவற்றிற்கும் வரப்போவதாக விமலன் அடம் பிடிப்பான் கடைசியிலே விமலனின் பிடிவாதங்களுக்கு மசிந்து கொடுப்பதுதான் அப்பாவின் சுபாவமாக மாறியது.
காட்டோரம் பரண் அமைத்து, அதிலே படுக்கையும் அமைத்து, யானை வரும் வழியில் தீ மூட்டி 'ஹாய்...கூய்...' என்று காவல் காப்பதை விமலன் எப்பொழுதுமே வீர சாகஸம் நிறைந்த விளையாட்டாக கற்பனை செய்து கொள்ளுவான். காவல் இருக்கும் பொழுது, பெரிய புரையிலிருந்து, 'தப்பி, மகன்...கவனம்...' என்று அவர் சொல்லிக் கொண்டே இருப்பார் அவர் எப்பொழுதும் விமலனைக் குழந்தையாகவே தரிசிக்கிறார் என்பதை விமலன் நினைத்துச் சிரித்துக் கொள்ளுவான்.

காலையிலே விமலன் சற்று கண்ணயர்ந்து போவதுண்டு. அவனை எழுப்பாது, காட்டுக்குள் சென்று கணபதியின் சேனையில் பிஞ்சு சோளக் கதிரும், அவித்த கச்சானும் எடுத்து வந்து சூடாகத் தேநீரும் தயாரித்த பிறகே விமலனை எழுப்புவார். அப்பாவின் கரிசனையிலே விமலன் பூரித்துப் போனாலும், காவலுக்கு வந்த இடத்தில் தூங்கி விட்டோமே என்று விமலன் வெட்கப்படுவதும் உண்டு.
இந்த நினைவுகளிலிருந்து சற்றே விடுபடுவது போல, 'சரியண்ணே, சமையல் ஒன்றும் செய்யலியா?' என்று விமலன் கேட்டான்.
'இண்டைக்கு அடுப்பு மூட்டிச் சமையல் செய்ய வேண்டாம் எண்டு யோசிச்சன 'பிச்சா'வுக்கு ஓடர் கொடுத்துச் சாப்பிடுவம். ஒரு மாற்றத்துக்கு நல்லது' என்று சொல்லிக் கொண்டே அவர் இரண்டாவது 'ரவுண்ட்' விஸ்கி எடுப்பதற்கு அடுக்குப் பார்க்கலானார்.

சங்கரப்பிள்ளை அண்ணர் வழக்கத்திற்கு மாறாக நடப்பது போல விமலனுக்குத் தோன்றியது அதைப் பற்றி யோசிப்பதற்கிடையில், அவனுடைய மனசிலே அப்பா பற்றிய வேறு நினைவுகள் மொய்த்துக் கொண்டன.
கொழும்பில் உத்தியோகம் பார்த்த காலங்களில் மாதமொரு முறையாவது வீட்டுக்கு வந்து விடுவான். அப்பா தன்னுடைய மகிழ்ச்சியை மற்றவர்கள் அறிந்து கொள்ளக்கூடாது என்கிற எச்சரிக்கையுடன், துள்ளல் நடைபோடுவது அவனை மகிழ்விக்கும். இரண்டு நாட்கள்தான் ஊரிலே

நிற்பான். புறப்படுவதற்கு முன்னர் அப்பா விமலனைத் தன்னுடைய காய்கறித் தோட்டத்துக்குள் அழைத்துச் செல்வார். திறமான காய்கறிகளை ஆய்ந்து ஒரு பையிலே போடுவார். மரவள்ளித் தோட்டத்தில், மரங்களைப் பிடிங்கி, 'ஒத்த வேர் கிழங்குகளை மட்டும் சீர்செய்து கொண்டே, 'நல்ல மாக்கிழங்கு மகன். ஒரு அவியலுடன் அவிந்துவிடும்' என்று சொல்லும் பொழுதே, விமலனுக்கு நாக்கில் நீர் ஊறும்.
எப்பொழுதும் உற்சாகமாக வயல், வரப்பு, கடை, கண்ணி என்று இருந்தவருக்கு, எங்குமே சென்று எதுவுமே செய்ய முடியாத நிலையை நாட்டுப் பிரச்சினைகள் ஏற்படுத்திய பொழுது, வீட்டிலேயே அடைபட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இளைய மகன் பிய்ச்சுக் கொண்டு வெளிநாடு போய்ச் சேர்ந்தான். அவருக்கு அது சந்தோஷம் தந்தது. ஆனால், விமலன் வெளிநாடு செல்வதை அவர் விரும்பவில்லை. நாட்டின் இனப்பிரச்சனை நாளாக நாளாக முற்றி, மோசமடையலாயிற்று எத்தனையோ இழப்புகளை அப்பா அடுக்கடுக்காகச் சந்திக்க நேர்ந்தது. இவற்றின் மத்தியிலே விமலன் வெளிநாடு செல்வதை அவர் தடுக்க விரும்பவில்லை. விரும்பம் வேறு, நிர்ப்பந்தம் வேறு என்பதை அவர் அறிந்து கொண்டார். அரசு ஆதரவுடன் வளர்க்கப்பட்ட வன்முறைத் தொடரில் அப்பா மூத்த மகனையும் இரண்டாவது மகளையும் பறிகொடுத்தார். அந்த இரண்டு இழப்புகளும் அவரைப் பாதி மனிதனாக மாற்றியது.

நோர்வே நாட்டில் வாழ்ந்த விமலன், குடும்ப ஒன்று கூடல் போல, தன் தம்பிக்கு தமிழ்நாட்டில் கல்யாணம் நடத்த ஏற்பாடு செய்தான். 'படித்த குடும்பம். பையன்கள் வெளிநாட்டிலே வேலை செய்கிறார்கள். கலை-இலக்கியங்களிலே மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். மகளுக்கு வெளிநாட்டிலே வரன் தேடுகிறார்கள். கல்யாணச் செலவுகளையும் தாராளமாக ஏற்கக் கூடிய வசதியும் உள்ளவர்கள்' என்கிற அறிமுகத்துடன் வந்த திருமணப் பேச்சு விமலனுக்குப் பிடித்ததாக இருந்தது. 'அண்ணா நீங்கள் பார்த்துச் செய்தால் எனக்கு எல்லாம் சம்மதம்' என்று தம்பி சொல்லி விட்டான்.

திருமணத்தின்போது எத்தனை எதிர்பார்ப்புகளும், எத்தனை ஏமாற்றங்களும்! பணத்திற்காக மனிதனுடைய பண்புகள் இவ்வளவு அதல பாதாளத்துக்கு இறங்கிவிடுமா? இதனைச் சம்பந்தி வீட்டார் 'சாமர்த்தியம்' கெட்டிக்காரத்தனம்' என்று பாராட்டி மகிழ்ந்தது அவன் மனசை கூனிக் குறுகச் செய்தது ஏமாந்தது அல்ல. அந்த ஏமாற்றத்தின் எக்காளங்களால் அப்பா அடைந்த வேதனைகளைத் தான் விமலனால் ஜீரணிக்க முடியவுமில்லை; தாங்கிக் கொள்ள முடியவுமில்லை.

சென்னையிலே விமலனின் மனைவியும் குழந்தைகளும் வசித்து வந்த

வீட்டின் மொட்டை மாடியிலே அப்பா விமலனைச் சந்தித்தார். அவனுடைய கைகளைப் பாசமுடன் கட்டிக் கொண்டார். அவர் குரல் அடைத்திருந்தது. நா தழுதழுத்தது . 'மகனே, நீ எவ்வளவு மனக் கஷ்டப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும் யாரை மகன் நோவது? சிறிசுகளை வாழவிட்ட பெரிய மனசு மகன் உன்னுடையது எல்லாம் அவரவர் தலைவிதி...' என்றார். யார் யாரைத் தேற்றுவது? அப்பாவுக்கு எப்பவும் மிகப் பெரிய மனசு.
இன்னொரு சந்தர்ப்பத்திலே அப்பாவுக்கும் அவனுக்கும் இடையில் நடந்த சம்பாஷனை விமலனின் மனசிலே விஸ்வரூபம் எடுத்தது.
தாய்நாடுக்குச் செல்வதற்கு மட்டும் மிகப் பெரிய சிரமங்கள். அகதி நிலை பெற்றுவிட்டால் மற்ற நாடுகள் எல்லாவற்றுக்கும் போகலாம், சொந்த நாட்டினைத் தவிர! இதன் நியாய அநியாயங்களைப் பட்டி மன்றம் வைத்துப் பேசுவதிலும் பயனில்லை. நியாங்கள் எப்பொழுதும் தர்மங்களாய் அமைவதும் இல்லை. பெரும் பணம் செலவு செய்து, பல ஆபத்துக்களை ஏற்றுக்கொள்ளும் துணிச்சலுடன் தாய்நாடு சென்று, அப்பா முன் விமலன் தோன்றினான்.

'எனக்குத் தெரியும் என் மகன் என்னைப் பார்க்க வருவார்' என்று ஓராயிரம் தடவைகள் சொல்லியும் அவர் மனசிலே புரண்டோடிய மகிழ்ச்சியை அவராலே வெளியிட முடியாது தவித்தார்.
பிரியும்பொழுது மட்டும் அப்பாவினால் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏதோ உள்ளுணர்வுகள் அவர் மனசிலே குமைந்து கொண்டிருந்திருக்க வேண்டும்.
'மகன் திரும்பவும் போகப் போறியா? ஊரோட குடும்பத்தோட இருந்திடன். நான் கண்மூடினால், கொள்ளி வைக்கவோ அல்லது ஒருபிடி மண்போடவோ ஆர் இருக்கினம்?'

'அப்பா, உங்களுக்கு இப்ப என்ன வந்திட்டுது? இன்னும் இரண்டு மூண்டு வருஷம், உழைச்சுக் கொண்டு ஊரோட வந்திடுறன். பிறகு உங்கள் கண் பார்வை எட்டும் இடத்திலதான் வாழுவன்' என்று கணணீர் மல்க விமலன் கூறினான்.
அப்பாவின் நெடிய உருவம்; விபூதிக்கு அழகு சேர்க்கும் அகன்ற நெற்றி; கலகலப்பான பேச்சு; உலகின் வஞ்சகமற்ற அன்பு முழுவதையும் குழைத்து வைத்தது போன்ற சிரிப்பு...
நாட்டு வைத்தியர், அப்பாவை, விமலன் நாடு திரும்பு மட்டும் காப்பாற்றி வைப்பாரா?
விஸ்கியின் அநுசரணையிலே சங்கரபிள்ளை அண்ணன் சமநிலை அடைந்தார்.

'விமலன், நான் வெளியால போறதுக்கு முந்தி உனக்கு ஊரில இருந்து ஒரு

'ரெலிபோன் கோல்' வந்தது...'
'என்னவாம்? யார் பேசினது? அப்பாவுக்கு ஏதும்? என்று விமலன் பரபரத்தான்.
'உன்ரை மைத்துனர்தான் எடுத்துப் பேசினவர். விஷயம் எதுவும் அவர் சொல்லேல்லை...விமலன் எப்ப வருவான் எண்டு கேட்டவர்...'
'நீங்கள் என்ன சொன்னனீங்கள்?'

'தம்பி இன்னும் ஒன்றரை மணி நேரத்திலை வீட்டிலை நிற்பான் எண்டு சொன்னன்...'அப்ப அந்த நேரம் எடுக்கிறம். ஆளை வீட்டிலை நிக்கச் சொல்லுங்கள். அவசியம் பேச வேணும் எண்டு சொன்னார்...இப்ப அவை எடுக்கக்கூடிய நேரத்தான்...'

'நீங்கள் வேலைக்குப் போகேல்லையே...கூடக்குறைய எடுக்கிறியள்...'
'நான் இண்டைக்கு வேலைக்குப் போகேல்லை. 'சிக்' போட்டுத்தான் வெளியிலை போனனான்.'
விமலன் அவரை உற்றுப் பார்த்தான்.

'மூப்பு, பிணி, சாக்காடு ஆரைத்தான் விட்டது?'
'என்னண்ணை, தத்துவம்...'

'தத்துவமோ? புத்தர் போதித்த போதனைகள்...விஸ்கி உள்ளே போக ஞானம் புறப்படுகிறது....'
விமலன் ஏதோ சொல்ல வாய் உன்னியபொழுது டெலிபோன் மணி சிணுசிணுத்தது. எடுத்து பேசினான்.

"ஹல்லோ ..யாரு"

"விமலனா நான் குணா பேசுறன்.. இன்று மாமா தவரிப்போயிட்டர், அதை சொல்லத்தான் அப்போது எடுத்தனான்.நீ வீட்டில இல்லை."

"விமலனால் பேசமுடியவில்லை. குரல் அடைத்து தொண்டையோடு நின்றது.. விம்மல் மட்டும் வெளியில் வந்தது.கண்களில் நீர் சுரந்தது.
'இஞ்ச விமலன், நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறன்'

' அத்தான்,நான் ஊரில் இருந்தால், அப்பாவுக்கு என்னனென்ன செய்வனோ, அத்தனையும் செய்யுங்கள்.' நா தழுதழுக்க பேசினான் விமலன்.

'எங்களுக்கும் கடமைகள் இருக்கு அவர் என்னை சொந்தப் பிள்ளை

போலதான் நேசித்து நடத்தியவர். நாங்கள் எந்தக் குறையும் விடமாட்டம். ஒண்டுக்கும் யோசிக்காதேயுங்கோ... விஷயங்கள் முடிஞ்ச பிறகு, விரிவாக பேசுறம்."...

'சரி.. அப்பா ..ஐயோ அப்பா .எங்களை விட்டிட்டு போயிட்டீங்களா" விமலன் வாய்விட்டு கத்திவிட்டன்.

'. நீ எதுக்கும் யோசிக்காத...எனக்கு தெரியும் உனக்கும் மாமாவுக்கும் இடையில் இருந்த அன்புபாசம் என்ன செய்வது, அவர் நல்லபடி போய் சேர்ந்திட்டார். நீ போய் தனிமையில் இருந்து நல்லா அழுது தீர்த்திடு. சரி வைக்கிறன் நிறைய வேலை இருக்கு,"

விமலனும் போனை வைத்தான்
சங்கரப்பிள்ளை அண்ணன் ஏன் புத்தரின் தத்துவம் பேசினார் என்பது இப்பொழுது விளங்கியது.

மற்றைய இரு நண்பர்களும் வீடு வந்து சேர்ந்தார்கள். சங்கரப்பிள்ளை அண்ணர் அறிவித்ததின் பேரிலே அவர்கள் லீவு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்...

சங்கரப்பிள்ளை அண்ணர் 'யாருக்கும் வேணுமோ?' என்று கேட்பதுபோல, 'அப்பர் ரென்' விஸ்கிப் போத்தலை மேஜையிலே எடுத்து வைத்தார்.

விமலனுக்கு அழுகை பொத்துக்கொன்டுவர, தன் அறைக்குள் ஓடிசென்று கதைவை பூட்டிக்கொண்டான்.

---

# அச்சங்கள்

ஒற்றைப் பலகை திறந்த சில கடைகள்..
ஓய்ந்து வெறிச்சோடிய வீதிகள்..
இடையில், பள்ளிக்கூட மாணவிகள் பாலியல் வன்கொடுமைக்கு
பலியாகுவதை எதிர்த்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ..
கடந்த ஆட்சியில் கட்டவிழ்த்து விடப்பட்ட கலாசார சீர்கேடுகள்...
அது இன்றைய நல்லாட்சியிலும் தொடர்கின்ற அவல நிலை.....

இவற்றைப் பார்த்துக் கொண்டு கையாலாகாத வர்களாக தமிழ்
தலைவர்கள்....
இப்படியான சங்கதிகளைக் கோர்த்து ஒரு கவிதை எழுதும் ஆசையுடன்
நாற்காலியில் அமர்ந்து கொண்டான் விஸ்வம்.

தோதான, பதமான வார்த்தைகள் பற்றிய கற்பனையிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனை தொலைபேசியின் அலறல் நிச உலகிற்குக் கொண்டு வந்தது.

'ஹலோ...'

'ஹலோ...குரல் தெரியுதல்லே?...ஏதும் வைச்சிருக்கிறியா?' மறுமுனையில் விஸ்வத்தின் நண்பன் குணா பேசுகிறான்.

'என்ன?'

'உன்ர கற்பனைகள என்னில சொருகாத...நாளைக்கு ஒரு போத்தில் விஸ்கி பிறியா கிடைக்குமெண்டு சொன்ன நீயல்லா ?'

'அது கிடைச்சதுதான். அதைச் சனிக்கிழமைக்கு அடிப்பம் ...'

'இஞ்ச...தேவல்லாத கதய விட்டிட்டு, அதயும் எடுத்துக் கொண்டு கீழே இறங்கு...நான் ஐஞ்சு நிமிஷத்தில வந்து 'பிக்'அப் பண்ணுறன். ஓ.கே?'

'....'

'என்ன மிரடு முறிக்கிறாய்?'

'ஓ.கே! வந்து துலை...'

தொலைபேசியை அதன் தொட்டிலில் வைத்தான் விஸ்வம்.

அவள் விருப்பின்படி
முருகையில் ஏறி, முறிந்து
விழுந்தேன்.
'அந்தோ! வந்த அருங்கவி
இந்த அமளிகண் டெங்கோ மறைந்ததே!'

என்கிற நீலாவணன் கவிதையின் வரிகளை முணுத்தபடி, குணாவைச் சந்திப்பதற்கான புறப்பாட்டில் ஈடுபட்டான்.

வானம் முழுவதும் இருண்டு விரிந்து...மழை பொடு பொடுத்துக் கொண்டிருந்தது.

குளிர் காற்றும் சாரலும் காரைத் தோய்த் தெடுத்தன.

நெடுஞ்சாலையிலே கார் சீரான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

விஸ்வம்த-ஈமோ இருவருடைய நட்பும் ஒரே சீராக ஓடிக் கொண்டிருப்பதும் விநோதமே...

ஒரே ஊர்க்காரர். ஒரே பள்ளியில் படித்தார்கள். ஒன்றாகவே வேலை பார்க்கும் அரிய வாய்ப்பும் கிட்டியது. உத்தியோகம் பார்த்த இடத்தில் தமிழர்களாகப் பிறந்த ஒரேயொரு காரணத்திற்காக ஒரே வகையான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க நேரிட்டது. இந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, நிம்மதியான புதுவாழ்வு தேடி வெளிநாடு போகலாம். என்று இருவருமே ஒன்றாக முடிவெடுத்தார்கள். எத்தனையோ எத்தனங்கள், எத்தனையோ தோல்விகள். திடீரென்று விஸ்வத்துக்கு நோர்வே செல்வதற்கான வழி பிறந்தது. வெளிநாடு செல்வதற்கான வழிகளையும் ரூட்டுகளையும் நம்மவர்கள் பரம இரகசியமாக வைத்துக் கொள்வது வழக்கம். ஆனால், விஸ்வம் அந்த இரகசியம் முழுவதையும் குணா வுக்குச் சொன்னான். 'மச்சான் நான் முந்திப் போனாலும், நீ எப்பிடியும் வந்து என்னோடை சேர்ந்து கொள்வாய். இது உறுதி' என்று சொன்னான். விஸ்வத்தின் நம்பிக்கை போலவே, குணாவும் வந்து சேர்ந்தான். இருவருடைய நட்பும் நோர்வே மண்ணிலும் தொடர்ந்தது. குணா தன் குடும்பத்தை நோர்வேக்கு அழைத்துப் பெரிய குடும்பஸ்தனாக வாழ்கிறான். ' ஆனால், விஸ்வத்தின் குடும்பம் தமிழ் நாட்டில். இங்கே ஒருவகை 'பச்சிலர்' வாழ்க்கை.

'என்ன மச்சான்...நம்மட ஊர் மார்கழி மாசப் 'பவ்வல்' மாதிரி விடமாட்டன் எண்ணுது மழை' என்று மௌனத்தைக் கலைத்தான் குணா.

'...அந்த அடை மழையிலயும், எங்கட சனம் வயல்-வரப்பு, தோட்டம்-துரவு எண்டு எப்பவும் ஓடி ஓடிப் பாடுபட்டவங்கதானே? பிறகு கூத்தும் பாட்டும் எண்டு சந்தோஷமா இருந்தவங்கதானே...இப்ப தங்கட காணி பூமிகளை இராணுவத்தினரிடம பறிகொடுத்து விட்டு பரிதவிக்கிறார்கள். வடகிழக்கில் இன்னும் இக்கட்டான நிலைதான் ...என்று விஸ்வம் முடிப்பதற்கு முன்னரே--

'உனக்கிட்ட ஏதாவது ஒன்றைப் பற்றி பேச்சுக் கொடுத்தாப் போதும், நாட்டோட இணைச்சுப் பேசாம விடமாட்டா...அதெல்லாம் விட்டுப் போட்டு நீ முதல்ல 'பெல்ட்'ப் போடு பாப்பம்...இல்லையெண்டா ஐ நூறு குரோனர் வெச்சிரிக்கியோ 'பொலித்தி'க்குக் கட்ட?' என்றான் குணா.

தான் 'பெல்ட்' போடாமல் இருப்பதை அப்பொழுதுதான் விஸ்வம் உணர்ந்தான்.

அதனைச் சரிசெய்து கொண்டே,
'இந்த மழைக்கும்
ஈனேவாறே கூதலுக்கும்
சொந்தப் புருஷனென்றால்
சுணங்குவாரோ வட்டையில'

என்று தன் கிராமத்துக் காற்றிலே தவழ்ந்து வரும் நாட்டார் பாடல் ஒன்றினை மனம் ஒன்றிப் பாடலானான்.
நெடுஞ்சாலையிலோ கார் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது...

அப்பாவையும் மாமாவையும் கண்டவுடன் குணாவின் பிள்ளைகளுக்கு ஒரே குதூகலம். சின்னவள் சந்தாவுக்குத்தான் அதிகம். அவள் மகா சுட்டி. நடுவிலாள் ரூபா குறும்புக்காரி. ஆனால், முகத்தை மட்டும் சம்மனசுபோல வைத்திருப்பாள். மூத்தவள் சீதா 'மிரிச்ச இடத்துப் புல்லும் சகா!' அவ்வளவு அமைதியான சுபாவம்.
குணாவின் மனைவி விஸ்வத்துக்கும் சேர்த்து சாப்பாடு தயார் செய்யத் துவங்கினாள்.
குணா இரண்டு கிளாஸ்"களைக் கொண்டு வந்து, விஸ்வம் கொண்டு வந்து வைத்த விஸ்கிப் போத்தலுக்கு அருகில் வைத்தான். பிரிஜிலிருந்து கோலா போத்தலை எடுத்துத் திறந்து கொண்டே, 'ம்...எடு மச்சான்...இந்தா சண்டிக்கு 'கோலா'...இப்ப துவங்கினாத்தான் சாப்பாட்டு நேரத்துக்குக் கணகணப்பா இருக்கும்...' என்றான்.

'சமா' துவங்கியது. விஸ்வத்தைத் சாப்பாட்டுக்கு என்று அழைத்தால் அருக்கணியம் பண்ணுவான். இப்படி ஒரு 'மாட்டு'ப் போட்டாத்தான் நடக்கும். மற்றும்படி இருவரும் குடியின் பரம பக்தர்களல்லர்.

'மச்சான், மறந்து போனேன். கம்யூட்டரில ஒரு சின்ன பணிவிட, பாத்திட்டு வந்துடுறன்.'

குணா கணினியின் முன் அமர்ந்து தன் வேலையை அவசரமாக முடுக்கி, செய்து கொண்டிருந்தான். 'பிறிண்ட் அவுட்' எடுக்கும் பொழுது, மூத்தவள் சீதாகுணா வின் காதைக் கடிப்பதுபோல ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அவள் சுபாவமே அப்படித்தான்.

திடீரென்று, 'நோ! நீ போக முடியாது' என்று குணா வெடித்தான். சீதா திகைப்புடன் விழித்தாள்.

எல்லோரர் கவனமும் அத்திசையிலே திரும்பிற்று.

'நான் கேட்ட ஒரு கேள்விக்காவது நீ ஒழுங்கான பதில் சொன்னயா?'

'இல்லை...' என்று சீதா தலையைக் கவிழ்த்து மெதுவாகச் சொன்னாள்.

'எல்லாருக்கும் கேட்கட்டும் -விஸ்வம் அங்கிளும் எங்கட ஆள்தான் - கேட்கட்டும். நீ பதில் சொல்லு. உன்னோட படிக்கிற எல்லாப் பிள்ளைகளும் போறாங்களா?'

'இல்லை.'

'உன்ர வகுப்பில படிக்கிற பாகிஸ்தான் பிள்ளைகள் போகுதுகளா?'

'இல்லை.'

'எல்லா நேர்வேஜிய பிள்ளைகளும் வர்றாங்களா?'

'தெரியாது.'

'உங்கட பள்ளிக்கூடத்தால ஒழுங்கு செய்யப்பட்டதா?'

'என்னெண்டு தெரியாது.'

'ஒன்றுமே தெரியாது. "நான் போகயா அப்பா?" என்று கேட்டால் எப்படி?'

அவன் மேஜைக்கு வந்து, தன் பங்குக்கு ஊற்றி வைத்திருந்த கிளாஸைக் காலி செய்தான்.

'அவளுக்கு 'பாஸ்கட்பால்' விளையாட விருப்பமாக இருக்குதாம். உங்ககிட்ட முதலிலயும் கேட்டவளாம். நீங்க ஒன்றும் சொல்லேல்லயாம்...' சமயலை விட்டு, எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தாய் சமாதானமான குரலிலே சொன்னாள்.

'நீ ஒன்றும் விளங்காமல் பேசுறாய்...செல்லம் கொடுத்து நீ பிள்ளைகளைப் பழுதாக்கப் போறாய்... நான் கேட்ட ஒரு கேள்விக்கும் அவள் சரியான பதில் சொல்லேல்ல...தெரியுமா உனக்கு? பாஸ்கட்பால்' விளையாட பள்ளிக்கூடத்தைவிட்டு, தனியான இடத்துக்கு அவள் போவதை நான் அனுமதிக்க மாட்டன்...இங்க பலபேர் பல மாதிரி நடக்கலாம்...ஆனா...என்ர பிள்ளைகள்...மரியாதையாகத்தான் நடக்க வேண்டும்.... அப்படி உங்களுக்கு இஷ்டமில்லாமல், உங்கட விருப்பத்திற்கு நடக்கிறதெண்டால்; இங்க ஒருவரையும் வைச்சிருக்கமாட்டன்; உடனே எல்லோரையும் ஊருக்கே அனுப்பிடுவேன்". குணா வழக்கத்துக்கு மாறாக உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

'இது ஏன்? இப்படியெல்லாம் கதைக்கிறீங்க...அவள் விருப்பப்பட்டுக் கேட்டாள் ...நமக்குப் பிடிக்கவில்லையென்றால் விடவேண்டியதுதானே?' என்றாள் தாய்.

ஏதோ ஆவேசமாகக் கதைக்க முயன்று, பின்பு கதைக்காமல் அதே ரென்சனில் திரும்பி, 'என்னடாப்பா விசு! நீ பேசாமல் இருக்கிறாய்?' என்று நண்பனை விவகாரத்திற்குள் இழுத்தான்.

'நான் என்ன பேச இருக்கு? முதல்ல நீ கொஞ்சம் உணர்ச்சி வசப்படாம இரு பாப்பம்...'

'இல்ல மச்சான்...இந்த நாட்டுல பிள்ளைகளை வளர்க்கிறது லேசுப்பட்ட காரியமில்லை. கண்ணுல எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கவேண்டும். முதலிலும் நான் ஒரு விசயத்தில் அனுபவப்பட்டு...நல்லாப் பட்டுத் தேர்ந்தவன்; அது உனக்குக்கூடத் தெரியாது. 'பாஸ்கட்பால்' விளையாட எல்லாப் பிள்ளைகளும் போகாமல், இவ எப்பிடிப் போகலாம்? பள்ளிக்கூடம் என்றால் பரவாயில்லை. இது, வேறு எங்கேயோ...ஒரு ஹோலில் நடக்குதாம்...இதை யார் ஒழுங்கு செய்தது என்று ஒன்றுமே தெரியாது; ஒரு வயது பிள்ளைய தனியா அனுப்ப நான் விரும்ப இல்ல. பாகிஸ்தான் பிள்ளைகள்... தங்கட கலாசாரத்தின் படி தனியாக வெளியில செல்வதில்ல...நமக்கும் ஒரு கலாசாரம் இருக்குத்தானே. அதை ஏன் நாம கடை பிடிக்க முடியாது? நோர்வேஜியப் பள்ளிக்கூடத்தில் படிச்சாப்போல...நாம அவர்களப்போல மாறிடலாமா?

இன்றைக்கு பாஸ்கட்பால் விளையாடப் போனால்; நாளைக்கு டிஸ்கோ தேக்குக்கு வாறியா என்று கூப்பிடுவாங்க. மறுநாள்...மற்ற விசயங்களுக்கும் கூப்பிடுவாங்க...இது நமக்குத் தேவையா?'

'சரி சரி!! விடு. விடு...சீதா நல்ல பிள்ளை...அவள் ஏதோ ஆசைப்பட்டுக் கேட்டுட்டாள்...'

'அதுதானே! இவருக்கு சாந்தமாகவே பேசத் தெரியாது...பாவம் சீதா அறையில் இருந்துகொண்டு அழுதுகொண்டே இருக்கிறாள்...'அப்பா, இப்படி ஆத்திரப்படுவார் என்றால், நான் கேட்டே இருக்க மாட்டன்...' என்று சொல்லுறாள்...' என்று சொல்லிய தாய் சமையலைக் கவனிக்கத் திருபினாள்.

'இஞ்சே! நீ சும்மா இருக்கணும்...நான் பேசும் போது, நீ குறுக்கால-- பிள்ளைகளுக்குச் சார்பாகப் பேச வராதே...ஒரு தகப்பனும் பிள்ளைகளைத் தண்டிப்பதற்கு சந்தர்ப்பத்தைக் கொடு. அப்படி இல்ல, இங்கு இருக்கிற ஒரு சில தாய் தகப்பன் மாதிரி நீயும் பிள்ளைகள் வளர்க்கப் பிரியப்பட்டால், அதுக்கு நான் தயாரில்ல...நீங்க எல்லோரும் நாட்டுக்குத் திரும்புங்க...அங்கே போய் என்ன கஸ்டப்பட்டாலும் மரியாதையா வாழுங்க. இங்க என்னால இதை ஜீரணிக்க முடியாது. விளங்குதா உனக்கு?' என்று சீறி முடித்தான் குணா.

சிறிதுநேர அமைதிக்குப் பின்; விஸ்வம் தன் கருத்தைச் சொன்னான். குணா சொல்வதிலும் அர்த்தமிருக்கிறது...நானும், இங்கு ஒரு சில வீடுகளில் நடக்கும் சம்பவங்களை அறிந்திருக்கிறேன்! நண்பர்கள் சிலர் சொல்லக் கேட்டுமிருக்கிறேன்...சில பிள்ளைகள் தாய்-தகப்பனுக்கே எதிர்த்துப் பேசுதுகள்...தாயும், தகப்பனும் வேலைக்குப் போகும் வீடுகளில், பிள்ளைகள் தங்கள் விருப்பத்திற்குத் தகுந்த மாதிரி நடக்க முயற்சிக்கிறாங்க...ஐரோப்பிய கலாசாரத்திற்கு அடிமையாகி, எமது பண்பாட்டுக் கோலங்களை அழித்துக் கொள்கிறார்கள். பிள்ளைகளின் சூழல் இப்படியான தவறுகள் நடப்பதற்கு வழிவகுத்தாலும், பெற்றோர்களின் கவனக்குறைவும், அசிரத்தையுமே...இவர்கள் தான்தோன்றித் தனமாக நடப்பதற்கு பாதை அமைத்துக் கொடுக்கின்றது. சில வீடுகளில் பெற்றோரே தறி கெட்டு நடக்கும்போது பிள்ளைகள் எம்மாத்திரம்...பல குடும்பங்கள்; எமது பண்பு, பழக்கங்களிலிருந்து பாதை மாறினாலும், ஒரு சில குடும்பங்கள் மானத்தோடும் மரியாதையோடும் கௌரவமாகவும் வாழ நினைப்பதே எவ்வளவோ மேலான விசயம்...இந்த நாட்டிலே பருவ வயதுப் பிள்ளைகளை படிப்பித்து, ஆளாகும்போது, பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது...' என்று விஸ்வம் பெரிய நியாய விளக்கம் சொன்னான்.

'சொல்லு மச்சான்! நல்லாச் சொல்லு...உன்ர பாணியில நல்லா எடுத்துச் சொல்லு' இடையிலே குறுக்கிட்டான் குணா ...ஏற்கனவே அடிச்சிருந்த விஸ்கி அவனுக்கு இறங்கிவிட்டதுபோல இருந்தது குரல் சமநிலைக்கு இறங்கி விட்டது.

'ஆண், பெண் இருபாலாரும் படிக்கும்....'கோ எடிக்கேசன்' பள்ளிக்கூடம் என்றபடியால் இங்குள்ள நோர்வேஜியப் பெடியன்கள் வெளிநாட்டுப் பெண் பிள்ளைகளிடம் 'சேட்டையும்', 'நக்கலும்' விடுவதும், வம்புத்தனம் செய்வதும் தவிர்க்க முடியாததொன்றாக இருக்கிறது. இதை நமது பிள்ளைகள் நன்றாக உணர்ந்து, அதற்குத் தகுந்தபடி நடக்க வேண்டும். இந்த நாட்டுச் சட்டம் கொடுத்திருக்கிற சுதந்திரத்தை நமது பிள்ளைகள் துர்ப்பிரயோகம் செய்யக்கூடாது கண்டியளோ? இவர்களை நோர்வேஜியக் கலாச்சாரத்தில் வளர்ப்பதா? இல்லை, நமது கலாச்சாரத்தில் வளர்ப்பதா? என்று ஒரு தீர்மானம் எடுக்காமல் பெரிய தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டுள்ள ஒரு சில பெற்றோரை நான் அறிவேன். நமது நாட்டில் மட்டுமல்ல, இங்கும்தான். ஒரு தாய்தான் பிள்ளைகளை நெறியாக வளர்க்கமுடியும். அதுவும் இந்த நாட்டைப் பொறுத்தவரையில்--ஒரு தாய் தவறு விட்டால்--பிள்ளைகள் தரம் கெட்டுப் போவதை யாரும் தடுக்கமுடியாது...' என்று விஸ்வம் தனது ஞானத்தையும், உள்ளே சென்றிருக்கும் நீதவானின் நியாயத்தையும் குழைத்துப் பேசினான்.

'ஐயோ! அப்படி ஒரு நிலை வந்தால், நானே எல்லோருக்கும் நஞ்சு கொடுத்துவிட்டு, எல்லோரும் செத்தபிறகு நானும் குடித்துச் செத்திடுவன்' என்று குணாவின் மனைவி அழத் தொடங்கினாள்

'நீங்கள் ஏன் ரென்சன் ஆகிறியள்? கொஞ்சம் சும்மா இருங்கோ...அப்படியெல்லாம் ஏன் நடக்கப் போகிறது? நீங்கள் ஒழுங்காக இருந்தால் எல்லாம் நல்லபடியாக நடக்கும். எனக்கு ஒரு சந்தோஷம் என்ன தெரியுமா?' என்று கேள்வி கேட்டு நிறப்பாட்டிய விஸ்வம், நண்பனும் மனைவியும் தன்னிலே கவனம் குவித்திருப்பதை உணர்ந்து சொன்னான்:

இங்கே எப்படியும் வாழலாம் என்று எண்ணும் ஒரு சிலரின் மத்தியிலே...இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒரு வரையறை வகுத்து வாழும் குணாவைப்போல் உள்ளவர்களை நான் பாராட்டுகிறேன்' என்று சொல்லி, குணாவை அன்புடன் தட்டி, 'டேய், நீயும் பிள்ளைகளிடம் அன்பாகவும், சாந்தமாகவும் நடந்து கொள்ளப் பழக வேண்டும் மச்சான், கண்டிப்பு என்பது சத்தம் போடுறதில்ல. பிஞ்சு மனம் பாதிக்கப்பட்டால், உளரீதியான தாக்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது... நல்லது கெட்டதுகளைப் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். என்ன நான்

சொல்றது விளங்குதா? கூப்பிடு...சீதாவைக் கூப்பிட்டு அமைதியாச் சொல்லு...அதுக்கு எல்லாம் விளங்கும். இந்தா ஒரு 'பெக்' அடி, உன்ர ரென்ஷனில அடிச்சது எல்லாம் நியூற்றலாயிருக்கும்' என்று சிரித்துக் கொண்டே, இரண்டு கிளாஸ்களிலும் விஸ்கியை ஊற்றினான் விஸ்வம்.

'சீதா, சீதா!! இங்க வா மகள்...' என்று அழைத்தான் குணா, பயத்துடன் அவனிடம் வந்த சீதாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான்.

'அப்பா உங்கட நன்மைக்காத்தான் எதுவும் சொல்லுவன்...நமக்கு வேணாம் மகள். இந்த மண்ணின்ர எடுப்புகள் வேணாம். நமது நாட்டுப் பிரச்சினையளால ஊரில இருக்க முடியாமல் இந்த நாட்டுக்கு வந்திட்டம். அங்கே கௌரவமாக வாழவிட மாட்டாங்க என்றுதானே உங்களை இங்க கூட்டி வந்தது? இல்லாட்டி இந்தக் குளிரில வந்து செத்துக் கொண்டிருப்பமே? நீ வளர்ந்த பிள்ளை. சரி-பிழையை விளங்கிற அறிவு இருக்கு. இல்லையா? நீ ஒழுங்கா இருந்தாத்தானே உன்ர சகோதரிகளும் ஒழுங்கா வளருவாங்க ...'

'எனக்கு விளங்குதப்பா!' என்று சீதா சிரித்தாள். வாடியதாகத் தோன்றிய மலர், அன்பு நீரும், நியாய வெளிச்சமும் கண்டு என்ன பிரகாசமாக மலர்ந்தது!

அம்மாவுக்கு உதவும் கடமை உணர்வுடன் சீதா சமையலறை சென்றாள். விஸ்வம் விஸ்கியைக் கையில் எடுத்துக் கொண்டு, 'மச்சான், எங்களை அச்சங்கள் துரத்திக் கொண்டே இருக்கின்றன. உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிற பயங்களினால் விரட்டப்பட்டு, தாங்கள் வாழக் கனவுகள் காணாத நாடுகளிலும் குடியேறி வாழுகிறோம். உயிரைப் பற்றிய பயங்கள் போனதும், தனமு இனத்துவ அடையாளங்களை இழந்துவிடக்கூடாது என்று அச்சங்களுடன் வாழ்கிறோம்...இந்தப் பயங்கள் நீங்கிய விடியல் எங்கட இனத்துக்கு எப்ப வருமோ?...' என்று தத்துவார்த்தமாக பேசிய விஸ்வம், 'எங்களைப் போன்றவர்களுக்குப் பயங்களைப் போக்குவதற்கு ஒரு மருந்து இருக்குத் தெரியுமோ?' என்று கேட்டு நிறுத்தினான்.

'அது என்ன மச்சான்?' என்று குணா ஆவலுடன் கேட்டான்.

'அது விஸ்கிதான்!' என்று சொல்லி, விஸ்வம் மிக நிதானமாக தன் கிளாஸ்'ல் இருந்த விஸ்கியைக் குடிக்கலானான்!

---

# புதிய தலைமுறை

சோபாவுக்குள் சுருண்டு படுத்த டேவிட் ராஜாவுக்கு தூக்கம் வரவில்லை. மனநிம்மதி இழந்து உழன்றான்.

நேற்றிரவு நடந்த சண்டையும், காட்சிகளும் மாறி மாறி மனசை வதைத்தன.

'வளர்ந்த மகளைக் கைநீட்டி அடிச்சது சரியில்லை' என்று மனசு நெருடிற்று.

'அடியாத மாடு படியாது. கெறு பிடிச்சவள்' என்பது அறிவின் சமாதானம்.

ஆளுக்கு ஆள் தங்களுடைய நியாயங்களைத் தான் சொன்னார்கள். மனைவி ரஞ்சிக்கு தன் நியாயங்கள். மகள் ஸ்டெல்லாவுக்கு தன் நியாயங்கள். தமிழ் மண்ணிலே பிறந்து வளர்ந்த தன் நியாயங்களுக்கு இந்த மண்ணிலே இடமில்லையா?

மனம் வலிக்க மறுபக்கம் திரும்பினான்.

'அலார்ம்' மணிக்கூடு அடிக்கத் துவங்கியது.

அதனை நிறுத்துவதற்கு மனைவி ரஞ்சி படுக்கை அறையிலிருந்து விரைந்து வந்தாள். அதற்கிடையில் ராஜாவே எழுந்து அதை நிறுத்தினான். ரஞ்சியின் கண்கள் சிவந்திருந்தன. முகத்தில் சோர்வு டன் கூடிய வாட்டம் அவளும் தன்னைப்போல தூக்கமின்றித் தவித்திருக்கக் கூடும் என்று தோன்றியது. இந்தச் சிந்தனைகளுக்கெல்லாம் இடம் கொடுக்காமல் அவன் அவசரமாக பாத்ரூமுக்குள் நுழைந்தான். அவன் ஆறு மணிக்கு வேலைக்குப் போக வேண்டும். அவசரமாகப் புறப்பட்டால்தான் முடியும்.

பாத்ரூமிலிருந்து வெளியே வந்த ராஜா, அறைக்குள் சென்று அவசர அவசரமாக உடைகளை மாற்றிக் கொண்டிருந்தான்.

ரஞ்சி கோப்பி கலந்து எடுத்து வந்து டைனிங் மேஜையில் வைத்தாள்.

வேலைக்குச் செல்லும் உடைகள் அணிந்து, ராஜா அறைக்கு வெளியே வந்தான்.

நேற்றிரவு வீட்டிலே நடந்த சச்சரவுக்கு பின் மயான அமைதி நிலவியது.

'கோப்பி போட்டிருக்கிறேன்...குடியுங்கோ' என்றாள் ரஞ்சி. அமைதியைக் குலைத்து சகஜ நிலையை மீட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பேச்சுக் கொடுத்தாள்.

ராஜா பேசாமல் கோப்பியைக் குடிக்கத் துவங்கினான்.

சடுதியாக, அந்த அதிகாலை வேளையில், வீட்டு அழைப்பு மணி ஒலித்தது.

'இந்த நேரத்தில் யாராக இருக்கும்?' என்கிற கேள்வி தொக்க, இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பாபு கதவைத் திறந்தான்.

இரண்டு நோர்வேஜிய போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜாவும், ரஞ்சியும் உறைந்தார்கள்.

'குமோர்ண். வீ.ஆர் பொலித்தி கான்ஸ்டபிள், கொம்மர் பிரா ஓஸ்லோ பொலித்தி ஸ்ரகுன்...' என்று
தங்களை நோர்வேஜிய மொழியான நொஸ்க்கில் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

(அவர்களுக்கிடையில் நோர்வேஜிய மொழியில் நடந்த உரையாடல் வருமாறு:)

'இங்க ஸ்டெல்லா என்ற பெண் இருக்கிறாளா?'

'ஆம். அவள் என் மகள்.'

'நல்லது. அவள் இரவு கொடுத்த முறைப்பாட்டின்படி உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம்.

'என்ன? என் மகள் முறைப்பாடு செய்தாளா?'

' நேற்றிரவு நீங்கள் உங்கள் மகளை மோசமான முறையிலே அடித்திருக்கிறீர்கள். கொடுமைப்படுத்தியிருக்கிறீர்கள். இதுபற்றி ஸ்டெல்லா முறைப்பாடு செய்திருக்கிறாள்.'

இந்த உரையாடல் ராஜாவுக்கு ஞானத்தை ஏற்படுத்தியது.

நேற்றிரவு நடந்த சச்சரவில், 'அடியாத மாடு படியாது' என்று மகள் ஸ்டெல்லாவுக்கு இரண்டு தட்டுத் தட்டினான் ராஜா. அவள் அதனை ஆட்சேபிப்பதுபோல, 'து ஹார் இக்க லோ ஸ்லோ மை' என்று

நோர்வேஜிய மொழியில் ஆத்திரமாகப் பேச முற்பட, ராஜாவின் கோபம் கட்டுங்கடங்காது போனது. தன்னை மறந்து அவன் அவளைத் தாறுமாறாக அடிக்கவும், அவள் ஓடிச் சென்று தன் அறைக்குள் கதவைச் சாத்திக் கொண்டாள்.. இடையிலே புகுந்த ரஞ்சிக்கும் நல்ல அடி.

போலிஸ்காரர்கள் மிகப் பண்பாக விசாரித்து, அவர்களுடைய அனுமதியுடன் ஸ்டெல்லாவின் அறைக்குள் நுழைந்தார்கள்.

அந்த இடைவெளியைப் பயன்படுத்துவது போல, டேவிட் ராஜா அவனுடைய வாழ்வின் சில முக்கிய பக்கங்களைப் புரட்டினான்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர், டேவிட், ஒரு வெள்ளைக்கார சுவாமியாரின் உதவியால், நோர்வே நாட்டுக்கு ஒரு மாணவனாக வந்து சேர்ந்தான். முதலில் நோர்வே மொழி கற்று, பின்னர் அதே மொழியில் தொழிற் கல்விப் பட்டமும் பெற்றான் கல்வித் தராதரத்துக்கு ஏற்ற வேலையும் கிடைத்தது. நோர்வே பெண் ஒன்றைக் கல்யாணம் செய்யும் வாய்ப்பினைத் தவிர்த்து, தமிழ் அடையாளத்தைத் தன்னுடன் கல்லறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்கிற தாகத்துடன், விடுமுறையில் ஊருக்குச் சென்று, ரஞ்சியைக் கல்யாணம்செய்து கொண்டான்.

ரஞ்சி ஊரிலேயே நர்ஸ் வேலை பார்த்ததால், ஓஸ்லோ வந்து சேர்ந்ததும், அவளுக்கு வேலையில் சேர்வது கஷ்டமாக இருக்கவில்லை. ஒன்பது மாதத்திலேயே மொழியைக் கற்று, முதியோர் வைத்திய இல்லம் ஒன்றில் வேலை தேடிக் கொண்டாள்.

கணவன்-மனைவி இருவருமே வேலை செய்ததால், வீடு-கார்-மற்றும் ஆடம்பர பொருள்கள் என்று சேர்த்து, வசதிகளுடன் கூடிய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

ஸ்டெல்லா பிறப்பை ஒட்டி, ரஞ்சி மூன்று மாதம் பிரசவ விடுப்பில் நின்றாள். தொடர்ந்து வேலை செய்தால் வளத்தினைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது தீர்மானமாகவே, குழந்தை ஸ்டெல்லாவைப் பார்த்துக் கொள்ள ஒரு டாக் மம்மா (Dag mamma) தேவைப்பட்டது. அவளுடன் வேலை செய்யும் நோர்வேஜிய நர்சுகள், டாக் மம்மாவாகப் பல குழந்தைகளைப் பராமரிக்கும் ஒரு நோர்வேஜியப் பெண்மணியை அறிமுகஞ் செய்து வைத்தார்கள். ஸ்டெல்லாவை அவளுடைய பராமரிப்பிலே சேர்ப்பதில் எவ்வித சிரமமும் இருக்கவில்லை. வேலைக்குச் செல்லும் பொழுது டாக் மம்மாவிடம் குழந்தையை ஒப்படைத்து, வேலையை விட்டு வரும்பொழுது குழந்தையை அழைத்து

வருவது ரஞ்சிக்கும் வசதியாக இருந்தது ஸ்டெல்லாவும் நோர்வேஜிய டாக் மம்மாவின் பராமரிப்பில் வளர்ந்தாள். பின்னர் 'பாண ஹாகென்' என்றழைக்கப்படும் குழந்தைகள் கூடத்திலே சேர்க்கப்பட்டாள். இப்பொழுது 'உண்டம்' ஸ்கூலில் சேர்ந்து, இன்று எட்டாவது படிக்கிறாள்.

ஸ்டெல்லா இவ்வாறு நோர்வேஜிய பராமரிப்பிலும், சூழலிலும் வளர்வது அவர்களுக்குப் பெருமையாகவும் இருந்தது. இருவரும் வேலை செய்து வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அது தோதாக இருந்தது. நோர்வேயில் வாழும் சகதமிழர்களுக்கு தங்களுடைய அந்தஸ்தினைப் பறைசாற்றி விருந்துக் கேளிக்கைகளை வார இறுதி சிலவற்றிலே நடத்தி மகிழவும் வாய்ப்பு ஏற்பட்டது. எல்லாமே மகா சுமூகமாக நடைபெறுகின்றன என்று டேவிட் ராஜா தம்பதி கட்டிய கோட்டைதான் நேற்று மாலை நடந்த சம்பவம் ஒன்றினால் தகர்ந்தது.

நேற்று வேலையிலிருந்து திரும்பும்பொழுது, இரண்டு தமிழ் படங்களை எடுத்து வரலாம் என்று கடைக்குப் ராஜா சென்றான். அவன் அங்கு நிற்பதைச் சட்டை செய்யாத இளவட்டக் கும்பல் ஒன்று அரட்டையில் ஈடுபட்டிருந்தது.

'ஆரு மச்சான், அந்த வெள்ளப் பொடிச்சி? முழு எடுப்பும் உந்த நோர்வேஜியன் காரியளைப் போல, விழுந்து விழுந்து, ஸோ சோஷல்! என்னாலை நம்ப முடியேல்லை மச்சான்!'

'எனக்கெண்டாப் போலை? அவளைத் தமிழ் பெட்டை எண்டே சொல்ல முடியாதாம். அவள் இங்கைதான் பிறந்து வளந்தவளாம். எங்கடை தமிழ்ப் பொடிச்சியளோடை பழக மாட்டாவாம். எல்லாம் நோர்வேஜிய பெடியன்களும் பெட்டையளுந்தான் அவவின்ரை பிரண்ஸ்மாராம்.'

'அவவின்ரை அப்பர் இங்கை ஸ்ருண்டாக வந்து, இங்கேயே படிச்சவர் எண்ட எடுப்பு.'

'உமக்கு இன்னொரு விஷயம் தெரியுமே? அவை வீட்டிலையும் தமிழிலை கதைக்கிறேல்லையாம். நொஸ்கிலைதான் குசுவும் விடுகினமாம், மச்சான்" என்று ஊத்தை பகிடியை விட்டுக் கடகடத்துச் சிரித்தான்.

'அவளின்ரை பெயர் என்ன மச்சான்?'

'ஸ்டெல்லாவாம்...என்ரை அண்ணனின்ரை மகள்கூட இவள் படிக்கிற 'உண்டம்'ஸ்கூலிலதான் படிக்கிறாள். இன்னும் ரெண்டு மூண்டு தமிழ்ப் பிள்ளையளும் அங்கை படிக்கினம். அவங்களோடை இவள் கதைக்கவும் மாட்டாளாம்.'

'நான் கேள்வி மச்சான், இவள் நோர்வேஜிய பொடியளோடை சேர்ந்து பியரும் அடிக்கிறவளாம். அவள் வளையம் வளையமாப் புகை விடுறதைப் பார்த்து நாங்கள் பிச்சை எடுக்க வேணும் மச்சான்...'

இதற்கு மேல் அவர்களுடைய சம்பாஷனையைக் கேட்டுக் கொண்டிருக்க டேவிட் ராஜாவால் முடியவில்லை. பொடியன்கள் இவரின்ட மகளைப் பற்றித்தான் 'கமெண்ட்' அடிக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்ட கடைக்காரன் மசிந்தினான். ராஜாவுக்கு உலமெல்லாம் இருண்டு வருவது போல இருந்தது. தான் கட்டிக் காத்த கௌரவம் எல்லாம் றோட்டிலே அடிக்கப்பட்ட சிதறுதேங்காயைப் போல ஆகிவிட்டதோ என்று நினைத்துக்கொண்டு வீடியோ படமும் எடுக்காமல் உடனேயே திரும்பிவிட்டான்.

எங்கேயோ பிழை நடந்துவிட்டது!

எத்தகைய ஒரு மகத்தான வாழ்க்கையை அவன் தனது குடும்பத்துக்கு அமைத்துக் கொடுக்க உழைத்து கொண்டிருக்கின்றான்.

இந்த அந்நிய நாட்டிலிலும் கௌரவமாகப் பரம்பரை பரம்பரையாக வாழலாம் என்கிற இனிய கனவுகள், காற்றிலே கலைந்த கடுதாசிக் கூட்டமாளிகை போல...கலைந்தது

அவன் மனம் துர்வாச முனிவனாக மாறியது...நெஞ்சிலே கனன்று கொண்டிருந்த அக்கினியை யார் மீதாவது கொட்டித் தீர்க்க வேண்டும்...

இரவு ஏழு மணிக்கு ரஞ்சி வேலையிலிருந்து வீடு திரும்பினாள். அவள் வந்து கால்கூட ஆறவில்லை.

"உவள் ஸ்டெல்லாவை நீ எப்படி வளர்த்து வச்சி இருக்கிறாய். தமிழ் பண்புக்கு தேவையான அச்சம்-மடம்-நாணம்-பயிர்ப்பு வேண்டாம். கொஞ்சம் அடக்க ஒடுக்கமாவது வேண்டாமா?'

'அவளுடைய போக்குக்கு எப்பவும் நீங்கள்தானே 'சப்போர்ட்'. இப்ப என்ன வந்தது?'

'றோட்டிலை நிண்டு கண்டவன் நிண்டவன் எல்லாம் பேசுறான். பியர் குடிக்கிறாளாம். சிகரெட்டாய் ஊதித் தள்ளுறாளாம். நோர்வேஜிய பெட்டை' எண்ட நினைப்பிலை குதிக்கிறாளாம்...'

'உங்களுக்கு கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை. வேலைக்குப் போகாமல்

அவளைக் கவனிக்கலாம் எண்டு நான் சொன்னன். நர்சு வேலையிலை பொல்லாலடிச்ச காசு வருகிதெண்டு நீங்கள்தான் சொன்னியள். பணம், பணம் எண்டு சேர்த்தீர்கள். நொஸ்க்கில அவள் விண்ணியானால் போதுமெண்டு குதிச்சீங்கள். இப்ப என்ரை வளர்ப்பைப் பற்றிப் பேச வந்திட்டியள்...' அவளும் தன் பங்குக்குப் பாய்ந்தாள். வேலைக்குப் போய் அவள் படும் சிரமம் அவளுக்குத் தெரியும்.

டேவிட் ராஜாவுக்கும் ரஞ்சிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் சூடேறிக் கொண்டிருந்த பொழுது, ஸ்டெல்லா வீட்டுக்குள் மெதுவாக நுழைந்தாள்.

'உதிலை நில்லும் நோனா. ஸ்கூல் விட்டு எவ்வளவு நேரம்? இவ்வளவு நேரமும் எங்கை உலாத்திப் போட்டு வாறாய்?' என்று ஸ்டெல்லாமீது பாய்ந்தான்.

தகப்பனிடமிருந்து இந்தத் தாக்குதலை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏற்றுக்கொள்ளக்கூடியதான பதிலும் அவளிடம் இருக்கவில்லை. எதுவுமே நடக்காததுபோல தன்னுடைய அறைக்கு சென்றாள்.

'வாடீ இங்கை, அப்பா கேட்டுக் கொண்டு நிக்கிறார். கேட்டதுக்குப் பதில் சொல்லன்டீ!' என்று கத்தினான் ரஞ்சி.

'வா சொம் சேட் போர் தேர இடாக்' என்று நொஸ்கிலே பேசிக் கொண்டு ஸ்டெல்லா தன் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

ராஜாவுக்கு அவள் பேச்சையும் போக்கையும் தாங்க முடியவில்லை.

'தமிழிலை பேசுடி. நொஸ்கில பேசுறாளாம் நொஸ்கில! நீ என்ன நொஸ்கனுக்குப் பிறந்தவளா?' என்று இரைந்தான்.

'ஏன்? என்ன நடந்தது? புதினமா தமிழ், நொக்ஸ் என்று பேசுறியள்? இன்றைக்கு என்ன வந்திச்சு?'

'ஊரிலை சந்திக்குச் சந்தி நிண்டு, நீ நோர்வேஜிய பெடி பெட்டையளோடை அடிக்கிற கும்மாளத்தை பற்றித்தான் பேசுறாங்கள். அதுதான் கேக்கிறான். ஏன் இவ்வளவு நேரம் பிந்தி வீட்டுக்கு வாறாய்?'

'ஓ, அதுவா? அதுதானே பார்த்தன். இரண்டு பேரும் காலையில் எழுந்து வேலைக்கு ஓடுறீர்கள். வீட்டுக்குத் திரும்பினால், சமையல்-ரி,வி-வீடியோ-சாப்பாடு-உறக்கம்! எனக்குப் பேச-பழக-சிரிக்க-எல்லாம் ஸ்கூல் பிரண்ஸ்தான்! இது தெரியேல்லையா?' என்று ஏளனத் தொனியில்

சொன்னாள்.

'பொத்தடி வாயை. உனக்கு நாக்கு நீண்டு போச்சு' என்று பாய்ந்து, ஸ்டெல்லாவுக்கு ஓர் அறை விட்டான் ராஜா.

இதனை ஸ்டெல்லா சற்றும் எதிர்பார்க்க வில்லை.

'ஸ்ரொப். து ஹார் இக்க லோ ஓ ஸ்லோ மை' என்று வலி தாங்கமாட்டாது கத்தினாள் ஸ்டெல்லா.

ராஜா தன்வசம் இழந்தான். கைகளாலும், கால்களாலும் ஸ்டெல்லாவைத் துவைக்கத் துவங்கினான். விலக்குப் பிடிக்க இடையிலே புகுந்த ரஞ்சியும் வாங்கிக் கட்டிக் கொண்டாள்.
மழை ஓய்ந்தது.
ஸ்டெல்லா தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். அவள் விசும்பும் சத்தம் நீண்ட நேரமாகக் கேட்டது.

சோபாவில் வந்து அமர்ந்த பாபுவுக்கு நிதானம் திரும்பியது. அவளுக்கு இப்பொழுது பன்னிரண்டு வயது. தந்தை தாயாக அவர்கள் ஸ்டெல்லாவுடன் செலவு செய்த நேரம் பற்றிய கணக்கெடுப்பும் நடந்தது. பிழை தங்கள்மீதும் உண்டு என்பது இலேசாக உறைக்கலாயிற்று பணம் சம்பாதிப்பதிலே காட்டிய ஆர்வம், சில விஷயங்களை விட்டுக் கொடுக்கச் செய்துவிட்டது.

சாப்பிடவில்லை. யாருடனும், பேசவில்லை. சோபாவில் சுருண்டு படுத்துவிட்டான்.

இப்பொழுது கோப்பி குடிக்கும் பொழுது போலீஸார் வந்துவிட்டனர்.

நோர்வேஜிய சட்டம் டேவிட் ராஜாவுக்கு தெரியாததல்ல.
அச்சட்டத்தின்படி யாரும் யாரையும் அடித்துத் துன்புறுத்துவதற்கு இடமில்லை. கட்டிய மனைவி, பெற்ற பிள்ளை ஆகியவர்களைக்கூட அடித்துத் துன்புறுத்த முடியாது. யாராவது முறைப்பாடு செய்தால் சட்டம் தன் கடமையைச் செய்யும்.

ஸ்டெல்லா நோர்வேயில் பிறந்தவள். வளர்ந்தவள். புதிய தலைமுறையைச் சேர்ந்தவள். சட்டத்தின்படி பாதுகாப்பினைத் தேட அவளுக்கு உரிமை உண்டு.

அந்த உரிமையை எடுத்துக் கொண்டுள்ளாள்.

ஸ்டெல்லாவின் அறைக்குள் சென்ற போலீஸார் திரும்பினார்கள். அவளிடமிருந்து முறைப்பாட்டினை எழுதி வாங்கியிருக்க வேண்டும்.

'டேவிட், நோ கான் விட்ரா தில் பொலித்தி ஸ்டகூன்' என்றான் ஒரு போலிஸ்காரன்.

தான் வேலைக்குச் செல்ல வேண்டும், அன்றேல் வரமுடியாது என்று அறிவிக்க வேண்டும் என்று டேவிட் தயங்கினான்.

அதனை ஸ்டேஷனிலே ஒழுங்கு செய்ய முடியும் என்று அவர்கள் நாகரிகமாகச் சொன்னார்கள்.

ரஞ்சியால் எதுவே பேச முடியாமல் பிரமை பிடித்தவளைப் போல நின்றாள்.

ஸ்டெல்லா அறையைவிட்டு வெளியே வரவில்லை.

'ஸ்கால் வீ என்று போலீஸார் சொன்னதும், எந்தவித மறுப்பும் சொல்லாமல் அவர்களைப் பின்தொடர்ந்தான் டேவிட் ராஜா.

புலம் பெயர்ந்த நாடுகளிலே புதிய தலைமுறை ஒன்றும் உருவாகி வருகின்றது என்கிற ஞானத்தினைப் பரப்பும் முன்னோடியா இந்த ஸ்டெல்லா?

---

## உயர்ந்த உள்ளங்கள்

"ஹலோ மிஸ்டர், வில் யு ப்ளீஸ் பாக் யுவர் கார் ப்ரோப்பலி"
தனது காரின் சட்டரை இறக்கிக் கொண்டே பிழையாக கார் பாக் பண்ணும் ஒருவரைப் பார்த்து சொன்னாள் நிர்மலா.

" உவை, எனி ப்ரோப்புளம்" கேட்டான் கார்க்காரன்

"பிகோஸ் ஐ ஹாவ் டு பாக் மை கார், நெக்ஸ் டு யுவர் கார், யு நோ " சற்று உரத்துச் சொன்ன நிர்மலா,
"பார்த்தால் ஸ்ரீலங்கன் போல இருக்கினம் இல்லையா" என்று குரலை தாழ்த்தி பக்கத்தில் இருந்த தன் மகளிடம் சொன்னாள்.

அவள் சொன்னது கார்க்காரனுக்கு கேட்டுவிட்டது.

"ஓம் ஓம் ... நாங்க ஸ்ரீலங்காதான். நீங்க சிங்கபூரோ" நக்கலாக கேட்டான்.

"டேய், சுரேன் விடடா, அவங்களப் பார்த்தா ஏதோ வசதியான பெரிய இடம்போல தெரியுது." தன் நண்பனுக்கு பணிவாக சொன்னான் பக்கத்திலிருந்த சிவா.

"இல்லடா, எவ்வளவு இடம் அந்தப் பக்கம் இருக்குதல்ல. அங்க கொண்டு அவவின்ற காரை பாக் பண்ணலாம்தானே. இங்கே ஏன் கொண்டுவந்து சொருகிறா"

சுரேனும்.சிவாவும் பேசியதைக் கேட்டுக்கொண்ட நிர்மலா,

"தம்பி நாங்களும் சிறிலங்காதான்.
ஆனா உங்களைப்போல அகதியாக வந்தவங்க அல்ல.
எங்களின்ற அப்பா செவன்டீல ஒக்ஸ்போர்ட் யுனிவெர்சிடிக்கு படிக்க வந்தவர். வந்து படிச்சிப் பட்டம்பெற்று பேந்து இங்கேயே செட்டிலாகியவர்.நானெல்லாம் இங்கதான் பிறந்து வளர்ந்து படிச்சிப் பட்டம்பெற்று, உத்தியோகம் பார்த்து கல்யாணம் பண்ணி ,பிள்ளைகள் பெற்று நல்லபடியா வாழுறம் தெரியுமே" நிர்மலா தன் பூர்விகம் சொன்னாள்.

"மம்மி உவை மம்மி, இதெல்லாம் ஏன் அவங்களுக்கு சொல்லுறீங்க" மகள் தாயை கேட்டாள்.

"இல்ல, இவங்களுக்கு நாங்க யாரென்று தெரிய வேணுமல்ல. அதுக்குத்தான்"

"மேடம் நீங்க யாராக எண்டாலும் இருந்திட்டுப் போங்க. எங்களோட சொருகாதைங்கோ கண்டியளோ"

"உங்களோட நான் ஏன் சொருக வேணும்? நீர் ஒழுங்காக உமது காரைப் பாக் பண்ணு என்றதான் சொன்னனான்."

"அதுதான் கேட்கிறேன் அதை சொல்ல நீங்க ஆரு. ட்ராபிக் போலீசா அல்ல பாக்கிங் அட்ரென்டனா எவ்வளவு இடம் பின்னால இருக்குதல்ல இதுக்குள்ள ஏன் வாறியள்?"

"இங்க பார் தம்பி தேவையில்லாம,புரியாம கதைக்காதையும். நீர் பாக் பண்ணிய இடத்துக்கு பக்கத்தில இருக்கிற இடத்தில நான் பாக் பண்ண அவசியமிருக்கு. அது "டிசாயபில் பாக்கிங்" அதுதான் சொன்ன நான்.

"டேய், வீணா அவங்களோட வாக்குவாதம் பண்ணாமல் காரைப் பின்னுக்கு எடுத்து ஒழுங்கா கோட்டுக்குள் நிற்கிறமாதிரி பாக் பண்ணு. அவங்க "டிசாயப்பில் பேர்சன்" என்று நினைக்கிறன்.
சிவா சொன்னதும், சுரேன் ஒரு முறைப்போடு வேகமாக பின்னுக்கு எடுத்து பாக் பண்ணினான்.

நிர்மலா தனக்கு ஏற்றபடி வசதியாக தன் காரை "டிசாயப்பில் பாக்கிங்" என்ற சைன் போட்டிருந்த இடத்தில பார்க் பண்ணிவிட்டு, காரில் இருந்த சிவாவைப் பார்த்து "தாங்ஸ்" சொன்னாள்.

" பரவாயில்ல மேடம் .நாங்க உங்களுக்கு சிரமம் கொடுத்திட்டம் சொறி வெரி சொறி" என்று நண்பன் சுரேன் சற்று கடினமாக நடந்து கொண்டமைக்காக நிர்மலாவிடம் மன்னிப்புக் கேட்டான் சிவா.

ஆனா. சுரேனுக்குநிர்மலாவின் பேச்சு பிடிக்கவில்லை.அதிலும் தங்களை அகதி என்று பேசியது அறவே பிடிக்கவில்லை.
அவளுடன் மீண்டும் பேசினான்.

" மேடம் நாங்க அகதிதான். தாய்மண்ணில் எங்கள் சொந்தங்களை பறிகொடுத்துவிட்டு உயிரைக் காப்பாற்ற அகதிகளாக வந்தவங்கதான். வந்தும் இங்கேயும் கஷ்டப் படுகின்றோம்.இதைவிட ஊரிலிருந்து எங்கட சனத்தோட செத்துப்போய் இருந்திருக்கலாம்." என்று சொன்ன சுரேன் ,காரை விட்டு இறங்கி,

"டேய் இருந்துகொள் நான் டெஸ்கோ சுப்பர் மார்கெட் உள்ள போய் நமக்கு தேவையானவற்றை வாங்கிற்று வாறன்" என்ற சுரேன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

நிர்மலாவின் காரிலிருந்து அவள் மகள் இறங்கி வெளியில் வந்தாள்.
பதும வயதுப் பிள்ளை பார்க்க அமசமாக இருந்தாள்.
சிவாவும் இறங்கி வெளியில் வந்தான்.

"அங்கிள் டோன்ட் மிஸ்டேகின், மம்மி உங்களோட வீம்புக்கு பேச வரயில்ல. அவ கொஞ்சம் டிசிப்ளின் மெய்ண்டைன் பண்ணுவா.
நீங்க கொஞ்சம் கோணலாக பார்க் பண்ணியதைப் பார்த்ததும் கொஞ்சம் டென்சன் ஆயிட்டா.அத்தோடு அவ டிசாயப்பில் பேச் ஹோல்டர்.
டிசாயப்பில் பாக்கிங் இடத்தில்தான் பாக் பண்ண வேண்டும் என்று நினைப்பவர்." என்றாள் நிர்மலாவின் மகள்.

"நோ நோ ஒரு பிரச்சினையும் இல்லை. என்ர பிரண்ட்தான் காரை ஒழுங்கா பார்க் பண்ணயில்ல அது அவனின் மிஸ்டேக் தான் நாங்கதான் சொறி கேட்கவேணும். அதனால்தான் முதலில் நான் சொறி கேட்டனான்.

நிர்மலா தன் காரை நேர்த்தியாக பார்க் பண்ணிவிட்டு ஊன்று கோல் ஒன்றை எடுத்து ஊண்டிக்கொண்டு தன் காரிலிருந்து மெதுவாக இறங்க முற்பட,மகள் ஓடிச்சென்று தாயின் கையை பிடித்து வெளியில் இறக்கி விட்டாள்.
பார்ப்பதற்கு நடுத்தர வயது இருக்கும். நல்ல களையான முகம்.
மெதுவாக சிவா நின்ற இடத்துக்கு தனது ஊன்றுகோலை ஊண்டிக்கொண்டு வந்தாள்.

சிவா மீண்டும் முந்திக்கொண்டு "சொறி மெடம் நாங்க உங்களுக்கு தொந்தரவு தந்திட்டம். என் நண்பன் காரை கோணலாக பார்க் பண்ணியதாலதான் நீங்க பேசவேண்டியதாய்ப் போயிற்று. ரியலி சொறி போர் தட்"

"இட்ஸ் ஓக்கே. பிழை விடுபவர்கள் தவறுக்காக மன்னிப்புக் கேட்டால் அது அவர்கள் நல்ல குணம் என்று எடுத்துக்கொள்ளலாம். எல்லோரும் மனித நேயத்துடன் நடந்துகொண்டால் நல்லதுதானே. இந்த நாக்குதான் நல்லதைதும் கேட்டதையும் பேசிவிட்டு தன்பாட்டுக்கு வாயினுள் அடங்கி விடுகிறது.ஆனால் அது பேசிய அது வெளிப்படுத்திய சொற்கள்தான் மற்ற உறுப்புகளை துன்புறுத்தும், மற்ற மனிதர்களையும் காயப்படுத்தும்."

"சரியாக சொன்னீங்க மேடம். "எலும்பில்லாத நாக்கினால் எதைவேணுமெண்டாலும் கதைக்கலாமா? எதற்கும் ஒரு வரம்பு முறை இருக்குத்தானே இல்லையா மேடம்"

" கண்டிப்பா இருக்கு. நல்லா பேசுறீர் தம்பி. நீர் என்னை அன்ரி என்றே கூப்பிடலாம்.

" சரி அன்ரி. உங்களின்ர மகளும் நல்லா தமிழ் பேசுகிறா. நீங்களும் நல்ல தமிழ் கதைகிறியள். இங்கே பிறந்து வளர்ந்த நீங்கள் நல்லா தமிழ் கதைக்கிறியள்.ஆனால் ஊரிலிருந்துநீங்க சொன்னமாதிரி அகதிகளாக வ ந்தவையெல்லாம் ஆங்கிலத்திலதான் விளாசிவினம்."

" தம்பி அதற்குள்ள போகவேணாம். அது அவரவர் விருப்பம். எங்களை எங்களின்ற அப்பா அம்மா தமிழ் படிக்க.பேச வைத்தவர்கள். அதுபோல்தான் நானும் எனது பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக்கொள்ள வசதி செய்து கொடுத்திருக்கிறேன். வீட்டிலும் நாங்க தமிழில்தான் பேசுவோம். இடைக்கிடை ஆங்கிலம் பேசுவது தவிர்க்கமுடியாதது."

"சுப்பர் அன்ரி, உங்களை நினைத்து பெருமைப் படுகின்றேன். உங்கள் தாய் மொழிப்பற்றை பாராட்டுகிறேன்."

" சரி தம்பி. நீர் சிறிலங்காவில் எந்த இடம்?"

"அன்ரி ..நீங்களுமா ."

"ஏன் ..என்ன தம்பி?"

" எங்களின்ர ஆட்கள் யாரை முதலில் கண்டு பேசினாலும், முதல் கேள்வி ,நீர் ஊரில் எந்த இடம்?
என்றுதான் அன்ரி கேட்கிறாங்க. ஊரின் பெயரை பதிலாக சொன்னதும் , ஆ அந்த ஊரே என்று சொல்லி, பேந்தும் விலாவாரியாக விசாரித்து நகர்ந்து செல்வார்கள். இவர்கள் எந்த இடம் என்று கேட்பது ஏன் என்று முதலில் எனக்கு விளங்கயில்ல, நண்பர்கள் சொன்னபிறகுதான் தெரிந்து கொண்டேன். சாதியை அறிந்துகொள்ளும் நோக்கத்தில் ஊரை கேட்டு,பின் ரோட்டு,சந்தி, மூலை, முடுக்கு என்று அறிந்து கொண்டு செல்வது. நாட்டை விட்டு வந்த பின்னரும் சாதி பற்றி அறிய அவர்களுக்கு அப்படியொரு ஆர்வம்"

"சே.சே...நான் அப்படியொன்றும் அந்த அர்த்தத்தில் கேட்கயில்ல தம்பி. அந்தமாதிரி வித்தியாசமாக வில்லங்கமாக எல்லாம் எனக்கு கேட்க விருப்பமில்ல. அவசியமும் இல்ல.
நான் சொன்னமாதிரி நாங்க பிறந்தது லண்டனில்தான். எங்களின்ற அப்பா ஸ்ரீலங்கா. அவரின் பூர்விகம் அங்குதான். அதனால் அதில் எங்களுக்கும் ஈடுபாடு உண்டு."

"சரிஅன்ரி. விடுங்கோ.. நாங்கள் யாழ்ப்பாணத்தில கொக்குவில் என்ற ஊரை சேர்ந்தவர்கள். இது
யாழ் டவுனுக்கு பக்கமான ஊர்தான் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"இல்லை தம்பி ... எங்களின்ற அப்பாவின் ஊர் வந்து காரை நகர் என்று சொன்னவர். நாங்கள் சின்னப் பிள்ளைகளாக
இருந்தபோது இரண்டுறை அங்கு கூட்டிக்கொண்டு போனவர்.
அவ்வளவுதான்"

"ஓ .மிச்சம் காலத்துக்கு முந்தி..இல்லையா..நாங்கள் எல்லாம் பிறந்தும் இருக்க மாட்டோம்"

"உண்மைதான். நாங்கள் இங்கு லண்டனில் பிறந்து வளர்ந்து ஏழு வயசு இருக்கும்போது போனபிற்பாடு அங்கு போகவில்லை. ஆனால் அப்பா அடிக்கடி போய் வருவார். அவர் தனது தாய்மண்ணில் கொண்ட பற்றை மறக்கவில்லை. தாய் நாட்டை மறக்கவில்லை.

அவர் படித்த பாடசாலை, பற்றியெல்லாம் சொல்லுவார். இங்கேயும் அவர் பாடசாலை பழைய மாணவர் ஒன்றுகூடலுக்கு வருடாவருடம் சென்றுவருகிறார். அவரது பங்களிப்புகளையும் செய்வதை நாங்கள் அறிவோம்."

" நாடு நல்லா இருந்த காலத்தில் அவர் போய் வந்திருப்பார்.பிரச்சினை தொடங்கி போர் மூண்ட மூட்டம் அங்கு சென்று இருக்க முடியாது. போராளிக் குழுக்கள் தொடங்கி நாட்டில் இயல்பு வாழ்க்கை நிலை குலைந்து அடிபாடுகள் ஆரம்பிக்கப் பட்டபின்னர் மக்கள் பட்ட துன்பம், துயரங்கள் உங்கள் அப்பாவுக்கு தெரிய நியாமில்ல.அது
பற்றி அவர் பிள்ளைகளான உங்களுக்கு தெரியவே வாய்ப்பும் இல்லை."

"உண்மைதான் தம்பி. அங்கு தொண்ணுறுகளிலும், புத்தாயிரம் ஆண்டு ஆரம்பம் முதல் போர் முடிவுக்கு வந்த இரண்டாயிரத்து
ஒன்பது வரை சிறிலங்காவின் வடகிழக்கு மாகாண மக்கள

பட்ட துன்பங்கள், இழப்புகள் ஒன்றும் எங்களுக்கு நேரடியாக தெரியாது. ஆனால் அப்பா இங்குள்ள டிவி,ரேடியோ மூலமாக செய்திகளை, காணொளிகளை பார்க்கும்போது நாங்களும் பார்த்து இருகின்றோம். அந்த காலங்களில் நீங்கள் அங்கு இருந்திருப்பீர்கள் இல்லையா"

"தொண்ணூறுகளின் மத்தியில் நாங்கள் உயர்தரம் படித்து முடித்துவிட்டு பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தமாக இருந்த வேளையில்தான் எங்கள் வாழ்கையில் பேரிடி வீழ்ந்தது. இரண்டு பக்கத்தாலும் பெரும் நெருக்குவாரம் வந்தது. ஒருபக்கத்தில் இராணுவம், போராளிகளையும், அவர்களுக்கு உதவி செய்பவர்களையும் ஒட்டுக்குழுக்களின் ஒத்தாசைகளுடன் பிடித்து கொண்டு சென்றார்கள்.

அடுத்த பக்கம் போராளிக் குழு, போராளிகளை இணைப்பதற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இறங்கி இருந்தார்கள்.

" ஓ இக்கட்டான நிலைமைதான்"

" எங்களுக்கு படிப்பதா? பல்கலைக்கழகம் செல்வதா? அல்லது வீட்டைவிட்டு வெளியேறி மண்மீட்பு போராட்டத்தில் இறங்குவதா? என்ற மனப் போராட்டங்கள் எழுந்தன. இதனிடையில் தமிழர் பகுதியில் ஒவ்வொரு நாளும் ஏதாவது குண்டுவெடிப்பு, துப்பாக்கி சூடு, என்று நடந்து கொண்டு இருந்ததால் உயிர் இழப்புகளும், உடமை அழிப்புகளும் ஏற்பட்டன.

எங்கள் வீடுகளில் எங்களை எப்படி காப்பாற்றுவது என்ற பயம் அப்பா,அம்மாவுக்கு ஏற்பட்டது. வீட்டில் அக்கா,தம்பி,தங்கை வேற இருந்ததால் அவர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்கள் பெற்றோருக்கு.

"அவர்களையும் அவர்கள் காப்பாற்றிக்கொண்டல்லவா, உங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டும்"

"அது சரி, எல்லோரும் உயிரை காப்பாற்ற போராடிய தருணங்கள் அவை. அப்பாவுக்கும் முதுமை நிலை. என்னைவிட்டால் வீட்டில் ஆண் துணையில்லை. என்னை எப்படியாவது காப்பாற்றினால்தான் பின்னுக்கு குடும்பம் நல்லா இருக்கும் என்பதால், என்னை ஊரை விட்டு வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சி செய்தார். எங்களூரிலிருந்து பலர் வெளிநாடுகளுக்கு பல சிரமங்கள் பட்டு சென்று கொண்டு இருந்தார்கள். அப்பாவும் பலரையும் அணுகி, கொழும்பு ஏஜன்ட்மார் உண்மையில் தன் மகனை அனுப்பி வைப்பார்களா என்று அவர்களை விசாரித்து

தெரிந்துகொண்டே என்னை இங்கு அனுப்ப ஒழுங்குகளை மேற்கொண்டார்.

" எப்படி தம்பி ஏஜன்ட்மார் உதை செய்வினம்"

" எல்லாம் பணம்தான் அன்ரி. பல லட்சம் பணம் வாங்கிக்கொண்டே செய்வார்கள். அப்பாவும் அவ்வளவு பணம் கொடுக்க மிகவும் கஷ்டப்பட்டார். காணி விற்று, நகை அடவு வைத்து,கடன் வாங்கிதான் பணம் கொடுத்தார். எல்லாம் முடிந்ததும் ஊரிலிருந்து கொழும்பு வருவது பெரிய பிரச்சினையாக இருந்தது. வழியில் தடைகள், கேள்விகள். இராணுவத்திற்கும் பதில் சொல்லவேண்டும்.

போராட்டக் குழுவுக்கும் பதில் சொல்ல வேண்டும். ஒருபடியாக கொழும்பு வந்த பின்னர் முகவர் இழுத்தடிப்பு இரண்டு மாதங்கள். கொழும்பில் தங்குவது பெரிய சிரமம் ..ஐயோ அன்ரி அந்த உபாதைகளை இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. இதையெல்லாம் சொல்லப்போனால் ஒரு நாள் வேணும். நீங்களும் அலுவலாக வந்திருப்பியள்"

"தம்பி எங்களுக்கு, அங்கே நீங்கள் பட்ட துன்பங்கள் தெரியாது. அப்பாவுக்கு தெரியும்.இங்கு லண்டனிலுள்ள தமிழ் மக்களும் அங்கு போர் நடந்த நேரம்,போரை நிறுத்த பல போராட்டங்களில் ஈடுபட்டார்கள்.

அப்பா அந்த நிகழ்வுகளுக்கு சென்றவர். அதை நாங்கள் அறிவோம்.

" உண்மைதான். இங்குள்ளவர்கள் மட்டுமல்ல. உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் இன அழிப்புக்கு எதிராக குரல்கொடுத்து,கடைசியில் உடைந்து போனவர்கள்தான். என்ன செய்ய,ஒருத்தராலும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

நாங்களும் உயிரைக் காப்பாற்ற இங்கு வந்து மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இன்றும் இருக்கின்றோம். ஒரு நல்ல நிரந்தர வேலையில்லை. இந்த நாட்டில் இருப்பதற்கான அனுமதி கிடைக்க படாத பாடு பட்டோம். ஒரு சமயம் எங்களை நாட்டை விட்டு வெளியேற்ற அரச முடிவு செய்தது. அதற்கு எதிராக பல அமைப்புகள் நடவடிக்கை எடுத்தன.

ஒரு வழக்கறிஞர் வைத்து வாதாடினோம். அவருக்கு பணம் கொடுக்க இராப் பகலாக வேலைக்கு சென்றோம். இப்பொழுது நாட்டில் இருக்க அனுமதி வழங்கி இருக்கிறார்கள்.

"அப்படியா தம்பி.. நல்லது ,,சந்தோசம்."

"ஓம் அன்ரி. அது ஒரு வகையில் சந்தோசம்தான். ஆனாலும் மனதில் பல உடைசல்கள்,காயங்கள் விழுந்து விட்டன.
நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலை இருந்திருந்தால் நாங்களும் படித்து பட்டம்பெற்று பெற்றோரையும் மகிழ்ச்சிப்படுத்தி, உறவுகளையும் சந்தோசப்படுத்தி, நாங்களும் நல்ல நிலையில் இருந்திருப்போம். ஆனால் அது நடக்கல்ல. இங்கு வந்து பெரும் பாடுபட்டுக் கொண்டிருகின்றோம். ஊரில் இருக்கும் குடும்பமும் பல கஷ்டம் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

" உங்கள் குடும்பத்தில் எல்லோரும் இருக்கிறாங்களா? அப்பா,அம்மா உட்பட.

"கடவுள் புண்ணியத்தில் அவர்கள் எல்லோரும் உயிருடன் இருக்கிறார்கள். இடப்பெயர்வு அங்கு ஏற்பட்ட போது நிறைய துன்பங்கள் பட்டார்கள்."

" அக்கா,தங்கை,தம்பி இருப்பதாக சொன்னீர்கள் அவர்கள்?"

" அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு வழி கிடைக்கல்ல அன்ரி. அப்பா,அம்மா முதுமையின் பிடியில். அக்கா முதிர்கன்னி. தங்கை படிக்கிறாள். தம்பியும் படிக்கிறான். எல்லோரும் இப்போ என்னை நம்பித்தான் அன்ரி.
நான் பணம் அனுப்பினால்தான் அவர்கள் வாழமுடியும் என்ற நிலை.
எனக்கோ ஒரு நிரந்தர வேலை இல்லை."

"உங்கள் பிரண்ட் எப்படி? அவரும் உங்க மாதிரித்தானோ?"

" இல்லை. அவரின் இரண்டு சகோதரர்கள் வெளியில்தான்.ஒருவர். கனடா.மற்றவர் சுவிஸ். இவர் இங்கே. ஊரில் அவர் குடும்பம் நல்லா இருக்கிறது. நானும் என் குடுப்பதை நல்லா வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். எனக்குத்தான் படிப்பை தொடர முடியவில்ல. என் தம்பி தங்கையாவது படித்து பட்டம்பெற்று நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று விரும்புகின்றேன். அக்காவிற்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க பாடுபடுகின்றேன்."

"ஓ ஐ பீல் வெறி சொறி தம்பி .. உங்க பெயர் என்ன தம்பி "

" என் பெயர் சிவதாசன். சிவா என்று கூப்பிடுவார்கள்."

" நல்லது தம்பி சிவா. உங்களுக்குள் இருக்கும் துன்பங்களை, துயரங்களை. உங்களோடு பேசியபோதுதான் அறிய முடிகிறது இல்லையா?"

"என்னைப்போல இன்னும் பலர் இங்கு இருக்கின்றார்கள் .'

"கண்டிப்பாக இருப்பார்கள். எங்களுக்கு எந்தக் கஷ்டமும் தெரியாமல் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்து நல்லபடி வாழ்கின்றோம். ஒருவேளை அப்பா இந்த நாட்டுக்கு வராமல் அவரது ஊரான காரை நகரில் இருந்திருந்தால் எங்கள் நிலைமையும் மாறி இருக்கும் இல்லையா? என்னதான் நாங்கள் இங்கு பிறந்து வளர்ந்து கல்விகற்றாலும் எங்களுக்கும் இந்த நாட்டில் சில பிரச்சினைகள் எழுந்தன. நாங்கள் இனப்பாகுப்பாடு, நிறப்பாகுபாடு, என்று பள்ளிக்கூட காலங்களில் "டிஸ்க்ரிமினேசனுக்குள்" தள்ளபட்டோம்.

என்ன இருந்தாலும் நாங்கள் வெள்ளைக்காரர் இல்லைத்தானே. தமிழர்கள். தமிழ் பாரம்பரியம்.
தமிழ் கலாசாரம். இதை எல்லாம் புறந்தள்ளி வாழ முடியுமா?"

" நீங்கள் சொல்வது முற்றிலும் சரி . எம்மில் பலர் இங்கு எங்கள் விழுமியங்களை, அடையாளங்களை ஒதுக்கி, இந்த நாட்டு எடுப்புகளில் வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அது முடியாது. பல இடங்களில் அவர்களும் "டிஸ்க்ரிமினேசனுக்கு" ஆளாகி இருக்கினம். தங்களை தாங்களே எம்மாற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கை அன்றி அது."

"சிவா சரியாக கணித்திருக்கிறீர். நாங்கள் நிறைய பட்டு தேர்ந்திருக்கிறோம். அதன் பின்னர் எங்களை மாற்றிக்கொண்டு வாழ்கின்றோம். எனது பிள்ளைகளையும் எங்கள் பண்பாட்டுடன் வளர்க்க அதீத அக்கறை எடுத்துள்ளோம். அவர்களும் எங்கள் அனுபவங்களை உள்வாங்கி நல்லபடி வளர்கின்றார்கள்."

"மம்மி, வன் மினிட், கொஞ்சம் வாரீங்களா" என்று அழைத்தாள் நிர்மலாவின் மகள். நீண்ட நேரம் சிவாவும்,நிர்மலாவும் பேசியதை அவள் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். நிர்மலா தன் ஊன்றுகோல் துணையுடன் அவளை நெருங்கினாள். இருவரும் ஏதோ பேசினார்கள்.

அதை தொடர்ந்து நிர்மலாவின் முகத்தில் ஒரு மகிழ்ச்சி மின்னி தெறித்தது.

" சிவா. இங்கே வாங்க. அழைத்ததும் அவர்கள் பக்கம் சென்றான் சிவா.

" இந்தாங்க என் கணவரின் விசிடிங் கார்ட். அவரை போய் உடனே சந்தியுங்க. உங்கள் பிரச்சினைகள்,கஷ்டங்கள், உங்கள் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும். நீங்கள் என்னோடு பேசும்போது உங்கள் கஷ்டங்களை நினைத்து நான் வருந்தத்தான் முடிந்தது.
ஆனால் என் செல்ல மகள் அந்த கஷ்டங்களை எப்படி தீர்க்கலாம் என்று சிந்தித்து இருக்கின்றாள்.
வாட் ஏ பெண்டாஸ்டிக் டாட்டர். ஐ ரியலி லவ் ஹேர்."
என்று உணர்ச்சி வசப்பட்டு தன் மகளை அணைத்து முத்தம் கொடுத்தாள்.
சிவா, நிர்மலா கொடுத்த விசிடிங் கார்டை பார்த்துக்கொண்டு இருந்தான்.
அதில் மிஸ்டர் ஆர்.சந்திரசேகர் என்ற பெயர் இருந்தது. கீழே பல கொம்பனிகள் குறிக்கப்பட்டு அதற்கு சொந்தக்காரர் என்ற தகவலுடன்,விலாசமும் இருந்தது.

"தம்பி சிவா, என் கணவர் இங்கு தொழிலதிபராக இருந்து பல தொழில்கள் செய்கிறார். நேற்று அவர் ஒரு புதிய வியாபார நிலையம் ஒன்று வாங்கி இருக்கிறார். அதை நடத்துவதற்கு நல்ல நம்பிக்கையான ஒருவரை அவர் தேடுவதாக என் மகள் சொல்கிறாள். உங்களுக்கு விருப்பமானால் நான் அவரிடம் சொல்லி இந்த வேலையை வாங்கித் தருகின்றேன்."

" யெஸ் அங்கிள். நீங்கள் மம்மியுடன் பேசும்போது நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

உங்க பாமிலி, உங்க சிஸ்டர்,பிரதர், எல்லாம் நல்லா இருக்க,நீங்க கஷ்டப் படுறீங்க. ஒரு வேலை. பர்மனட் வேலை கிடைச்சா இட்ஸ் குட். நான் டாடிக்கு சொன்னால் அவர் கேட்பார். வி வில் ரெக்கமன்ட் யு அங்கள்."

நிர்மலாவின் மகள் சொல்ல சிவாவுக்கு உள்ளம் சிலிர்த்தது. கல்லுக்குள் தேரைக்கும் கடவுள் படியளப்பான். கஷ்டப்படும் பலருக்கும் பராசக்தி கண்திறந்து இருக்கின்றாள் .

எனக்கும் அம்பிகை இந்த சின்ன பொண்ணு மூலம் அருள் தந்திருக்கின்றாள் என்று எண்ணியபடியே நிர்மலாவின் மகளை நெருங்கி,

" தாங்கஸ் தங்கச்சி. இந்த அங்கிளின் கஷ்டத்தை கேட்டு இந்த நல்ல வாய்ப்பை தர நினைத்த உங்களுக்கு கடவுள் எல்லா நலன்களையும் தருவார். நன்றி "

என்று பிள்ளையின் கையைப்பிடித்து குலுக்கினான். அந்த பிள்ளையும் "கோட் பிளேஸ் யு அங்கிள்" என்று வாழ்த்தியது.
அந்த சமயத்தில் நிறைய சாமான்கள் வாங்கிக்கொண்டு சுரேன் வந்து காரில் ஏறினான்.

சிவா, நிர்மலாவுக்கும், மகளுக்கும் வணக்கம் சொல்லி விடைபெற்றான்.

சுரேனுடன் காரில் வரும்பொழுது அவனின் கஷ்டங்கள் படிப்படியாக காற்றில் கரைந்து போவதாக சிவா உணர்ந்தான். உயர்ந்த உள்ளங்கள் இன்னும் இந்த உலகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த உள்ளங்களைச் சந்திக்கும் காலமும், நேரமும்தான் மனிதர்களுக்கு சரியாக வாய்ப்பதில்லை. என்று எண்ணிக்கொண்ட சிவா. நிர்மலா கொடுத்த விசிடிங் கார்டை மீண்டும் ஒரு முறை பார்த்துக்கொண்டான். நாளை அவன் வாழ்க்கையை மாற்றும் உன்னத துருப்பு சீட்டு அல்லவா அது.

"டேய் சிவா என்னடா அது கார்ட்." கேட்டான் சுரேன்.

" ஆ, சொல்லுறன் நீர் கவனமாக காரை ஓட்டு " என்ற சிவா.

தன் இருக்கையில் சாய்ந்துகொண்டு கண்களை மூடிக்கொண்டான். அப்போது ஊரில் உள்ள அவனது அப்பா,அம்மா, அக்கா,தங்கை, தம்பி எல்லோரும் அவனுக்கு வாழ்த்து கூறுவதுபோல் காட்சி தெரிவதாக உணர்ந்தான்.

---

# வீரையடி

எல்லாமே முடிந்து எல்லோரும் வந்துகொண்டு இருந்தார்கள். தியாகு, செய்யவேண்டிய கடமைகள் முடிந்தவுடன், அவனை தனது மோட்ட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு கொண்டுவந்துவிட்டான் தியாகுவின் பள்ளித்தோழன் பிரபு.

தாய் மரணித்த செய்தி தியாகுவிற்கு சொல்லப்பட்டதும் லண்டனிலிருந்து உடனே பயணித்துவிட்டான். நான்கு வருடங்களுக்கு முன்னர் அவனது தந்தையின் மரணத்துக்கு அவனால் வரமுடியவில்லை. பயணிக்க கூடிய சூழ்நிலை அன்று அவனுக்கு அமையவில்லை.

இப்போது தாயின் மரணத்துக்காவது சென்று தன் இறுதிக் கடமைகளை செய்யவேண்டும் என்று துடித்து, உடனே புறப்பட்டு வந்து இறுதிக் கடமைகளை முடித்து வீடுவந்து சேர்ந்திருகின்றான் தியாகு.

மயானத்திலிருந்து அவனது தாயாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஊரவர்,உறவுகள்,நண்பர்கள் எல்லோரும் வந்து தியாகுவின் வீட்டின் முன்னால் போட்டிருந்த பந்தலுக்கு கீழும், வளவுக்குள் நின்றிருந்த மாமர நிழல்களுக்கு கீழும் போடப்பட்டிருந்த கதிரைகளில் அமர்ந்து கொள்கிறார்கள்.

அவர்களுக்கு கோப்பி, தேநீர். சிகரெட்,சுருட்டு,பீடி,வெற்றிலைபாக்கு எல்லாம் கொடுக்கப்படுகின்றன.
இரவுச்சாப்பாடு பல உறவுகளால் கொண்டு வரப்படுகின்றன.

பெரிய வீடு. எல்லாதிசைகளிலும் மின் ஒளி.
'தியாகு நான் சாகிறதுக்கு முந்தி பெரிய வீடு ஒன்று கட்டிவிட்டுத்தான் சாகுவன்' என்று அப்பா சொன்னது நிறைவேறி இருக்கிறது என்று தியாகு எண்ணிக்கொண்டான்.

பலவருடங்களுக்கு பின் பார்க்கும் முகங்கள். பல முகங்கள் அவனுக்கு தெரிந்த முகங்களே. சிலரை பார்த்ததும் அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. சிலர் தங்களை அறிமுகப் படுத்தியபொழுது புரிந்துகொண்டான். ஒன்று இரண்டு வருடங்களா? இருபது வருடங்கள் அல்லவா.

மரண வீட்டுக்கு வந்த பலர் தியாகுவை பார்க்கவேண்டும் என்பதற்காகவும் வந்திருந்தார்கள்.

அவர்கள் எல்லோரும் அவனை சந்தித்து விடைபெற்றபோது தியாகு மிகவும் மனம் வருந்தினான்.
அந்த நேரத்தில் அவனுக்கு ஒரு ஜேர்மனிய சொல்லாடல் நினைவுக்கு வந்தது.
'பகிர்ந்து கொள்ளப்படும் இன்பம் இரட்டிப்பாகும். பகிர்ந்து கொள்ளப்படும் துன்பம் பாதி குறையும்.'
இதில் அவன் எதை எடுத்துக்கொள்வது? ஊரவர்,உறவுகளைக் கண்ட இன்பத்தையா? அல்லது தாயை இழந்து நிற்கும் துன்பத்தையா? தன் நிலை தடுமாறிய போதும், துக்கம் பகிர்ந்து விடைபெற்று செல்பவர்களை வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தான்.

விநாயகபுரம் பிரதான வீதியில் முதலாவது வீடு. பெரிய வளவு. தென்னைமரங்களும்,மாமரங்களும் நிறைந்த பாரிய வளவு. இருபது வருடங்களுக்கு முன்னர் இளம்பிள்ளை தென்னைகளாக இருந்தவை இப்போது நெடுதுயர்ந்த மரங்களாக நின்றன. தியாகு கையால் நட்ட மாமரங்கள் நன்றாக கிளைகள் விட்டு காய்த்து நின்றன. எதிரிலிருந்த சின்னதோட்டம்,அங்கு இருந்த பங்களா, ஒன்றுமே இப்போ அங்கு இல்லை. எல்லாம் குடிமனைகளாக இருந்தன. தியாகுவின் அப்பாவின் கடை.கடைக்குமுன் ரோட்டோரம் நின்றிந்த வீரமரம் எதுவுமே இல்லை. தியாகுவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தபோது கையில் கோப்பிக் கப்போடு வந்தான் பிரபு.

"என்ன தியாகு உனக்கு எல்லாமே புதிதாக படுகிறதா? இஞ்ச,எல்லாம் மாறிப்போச்சுடா.அன்று இருந்த நிலைக்கும் இன்று இருக்கும் நிலைக்கும் நிறைய வேறுபாடு.வித்தியாசம். இந்தா முதல்ல கோப்பியை குடி."
என்று கையிலிருந்த கோப்பி கப்பை கொடுத்தான் பிரபு.
அதை வாங்கிக்கொண்ட தியாகு,

" ஏண்டா,எல்லாமே மாறிப்போச்சு. இரண்டு தசாப்தங்களாக நான் இந்த ஊரில் இல்லைதான். அதற்குள் இத்தனை மாற்றங்களா?"

"எல்லாம் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள்தான் காரணம். சொந்த மண்ணிலே சுதந்திரமாக வாழ முடியாத நிலை இருந்தது. அன்றாடம் இயல்பு வாழ்க்கை பறிபோன பரிதாபம். அரை வயிற்று கஞ்சிக்கே அவதிப்பட்ட காலம் இருந்தது. விவசாயம், மீன்பிடி, கூலித் தொழில் என்ற எதுவுமே இந்த ஊரில் பண்ண முடியாத ஒரு இக்கட்டான நிலை இருந்தது. உன் அப்பாவுக்கு அவரது கடையை நடத்த முடியாத கட்டுப்பாடுகள் இருந்தன. அதனால் அவர் மனசு பாதிக்கப்பட்டது. இதெல்லாம் நான் உனக்கு கடித மூலம் முன்பு அறிவித்திருக்கிறேன் இல்லையா"

"ஓம் நீ எழுதிய  கடிதங்களில் உள்ள விஷயங்களை நான் வாசித்துவிட்டு கண் கலங்கியதுண்டு"

"நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல தியாகு. ஏதோ உன் நல்ல காலம் நீ ஊரைவிட்டு போயிட்டா.
அதனால் நாங்க பட்ட கஷ்டம் உனக்கு தெரியாது"

"சேச் சே ..அப்படி சொல்லாதே. தாய்,தந்தை,உறவுகள்,தாய்மண் எல்லாவற்றையும் விட்டுப் போய் அந்நிய  நாட்டில் அகதியாக வாழ்கின்ற கொடுமையை நான் அனுபவித்தவன்.இந்த மண்ணின் வாசத்தையும், மக்களின் நேசத்தையும் நான் இழந்தவன்.  செம்பருத்தியும், மல்லிகையும் பூத்துக் குலுங்கி நிற்கும் என் வீட்டு  முற்றத்தை,
கிணற்றடி,வாழை,கமுகை, வேலியோர முருங்கை, அம்மாவின் புடலங்காய்பந்தல்,வல்லாரை பாத்தி எல்லாமே இழந்தவன். இவைகளை மறந்து போன குற்ற உணர்ச்சி எனக்குள்  இருக்கிறது. ஏதோ ஒரு வேகத்தில் தாய் மண்ணைப் பிரிந்து போனது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த பிரிவு தந்த துன்பம்,துயரம் இருக்கே  அது மிக கொடியது.அதை நான்   இந்த இருபது வருடங்களாக  னுபவிக்கின்றேன். தாய் நாட்டின் சேதிகள் நாள்தோறும் கேட்டு கண்கள் குளமாகி, நெஞ்சம் தடுமாறி எப்போ எமக்கு விடியல் வரும் என்று ஏங்கி விம்மி,வெதும்பி தூக்கமின்றி துடித்த இரவுகள் ஏராளம்."

"தம்பி தியாகு.. இங்க  வா ராசா உன்னை பாக்க சோட்டையா  இருக்கு எவ்வளவு காலம் உன்ன பாத்து"

குரல் வந்த திசையை திரும்பிப் பார்த்தான் தியாகு. அவனுக்கு  தெரிந்த தங்கமணி மாமி கூப்பிட்டுக் கொண்டிருந்தா.
பிரவுயையும் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றான் தியாகு.
தங்கமணி மாமி அவனை கட்டிப்பிடித்து  ஓ வென்று ஒப்பாரி வைத்து விட்டார். சற்று நேரத்துக்கு பின்  அது அடங்கியதும் பேசினா.

"அந்த மகராசி இருக்கும்வரைக்கும் அடிக்கடி வீட்டுக்கு வந்துபோவன். இனி  ஆரு இருக்கா."
தங்கமணி மாமி மூக்கை சிந்தி அவனின் அம்மாவின் பாசத்தை,பிரிவை சொல்லச்சொல்ல இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அழுகையை அவனால் அடக்க முடியவிலை அழுதுவிட்டான்.

"அழு ராசா நல்லா அழுதிடு. வாய்விட்டு அழுதிடு.உங்க அம்மா உன்னை ஏழு வயசுவரைக்கும் அவட இடுப்பில தூக்கி சுமந்தவ.
வயலென்றும்,வரப்பென்றும் ஆண்வேலையும், பெண் வேலையும் செய்து உன்ர அப்பாவுக்கு துணையாக இருந்தவ.
இன்று நம்மை விட்டு போய்டா. நான் வாறபோற நேரமெல்லாம் சாப்பிடு,தேத்தண்ணி குடி, என்று சொல்லி நல்ல கவனிப்பு செய்துதான் அனுப்புவா.அந்த சீவன் போயிட்டே இனி நான் எல்லாம் என்னத்துக்கு கிடக்கிறது. என்ர மச்சாள் என்னையும் கூட்டிக்கோடி" என்று தியாகுவின் அம்மாமேல் வைத்திருந்த பாசத்தை தங்கமணி மாமி வெளிப்படுத்திய போது தியாகுவின் மனம் கனத்தது.

"தியாகு நான் புறப்படுறன். உனக்கும் பிரயாண களைப்பு, மனச்சோர்வு எல்லாம் இருக்கும். படுத்து ஓய்வு எடுத்துக்கொள்.நாளைக்கு கலையில் நான் வாறன்." என்று சொல்லி புறப்பட்டான் பிரபு.

அவனை வழியனுப்பி விட்டு ஹோலுக்குள் வந்த தியாகுவிடம்,

"மாமா சாப்பிட வாங்க, சாப்பிட்டுவிட்டு சாமி அறைக்குள் படுக்கை இருக்கிறது.படுத்து தூங்குங்க."
என்றாள் தியாகுவின் அக்கா மகள் மலர்.

"இல்ல,எனக்கு ஒன்றும் வேண்டாம்.நான் பிறகு சாப்பிடுறன்." என்று அவளுக்கு பதில் சொல்லிவிட்டு சாமி அறைக்குள் நுழைந்தான் தியாகு. அவன் அப்பாவின் படத்துக்கு சந்தன மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அவரை வணங்கி விட்டு படுக்கையில் சாய்ந்தான். அவனுக்கு உடனே தூக்கம் வரவில்லை. நெஞ்சம் நிறைய துக்கம் இருந்தது. அவனின் அப்பாவின் சாவுக்கு அவனால் வரமுடியவில்லை. அவர் பற்றிய நினைவு வந்து கொண்டது.கண்களை மூடிக்கொண்டான்.

அவர் உருவம் அவனுக்கு நன்றாக தெரிந்தது.
நீண்ட நெடிய மனிதர்,அகன்ற நெற்றி,அள்ளிப்பூசிய விபூதி,கபடமில்லாத சிரிப்பு, என்று அவரது உருவம் அவன் கண்களில் நிழலாட,அம்மாவின் ஆவி அவனை கட்டி தளுவுவதுபோல ஒரு பிரமை. அவன் கண்ணயர்ந்து போக அவன் உள்ளம் பேசியது.
'அப்பாவும் அம்மாவும் அன்பாக வாழ்ந்தவர்கள்.நான் அறிந்தவகையில் அவர்கள் ஒருபோதும் ஒரு பிரச்சினையும் பட்டதில்லை. ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்துகொண்டு அன்பாக வாழ்க்கை நடத்தியவர்கள்.ஒருவரை விட்டு ஒருவர் ஒருநாள் கூட பிரிந்ததில்லை. அவ்வளவு அன்பாக இருந்தார்கள். வயல் விதைப்பு, அறுவடை,சூடு மிதிப்பு

என்று எல்லா வேலைகளிலும் அம்மா,அப்பாவுடன் இணைந்தே இருந்தா. விநாயகபுரம் வீரையடிக் கடை என்றால் பக்கத்து ஊர்க்காரருக்கும் தெரியும். அதிகாலை நான்கு மணிக்கே அம்மா எழுந்து கடை வாசல் பெருக்கி, கைகால் முகம் கழுவி சாமி கும்பிட்டு வந்து அப்பாவை எழுப்புவா.

"இஞ்சாருங்கோ , எழும்பயில்லையா, இக்கணம் பால்க்கார கந்தன் வந்து கூப்பிடப்போறான்."

"ம் ..ம் நான் முளிப்பாத்தான் கிடக்கிறன். நீ நேரத்தோட எழும்பிட்டியாக்கும்"

"இரவு முழுக்க நான் கண்ணோட கண் மூடயில்ல. இவன் தம்பி படுக்கிற அறைக்குள்ள.சரியான நுளம்பு.
அவன் யன்னல திறந்துபோட்டு படுத்திட்டான்."

"அப்ப நல்லா குத்தி ரத்தம் குடிச்சி இருக்கும்."

"ஓம் மெண்ணுறன்.. பிறகு நான் உரிமட்டை பற்றவைத்து அதில வேப்பமிலைகளை போட்டு புகைச்சி அறைமுழுக்க பிடிச்சபிறகுதான் ஓரளவு நுளம்புகள் கலைஞ்சு போயின. தம்பியும் அதற்கு பிறகு படுத்தான்.

"இரவு காத்தே இல்ல. ஒரு கொத்துக் குழைகூட உசும்பயில்ல. காத்து இருந்தா நுளம்பு கலைஞ்சு போயிருக்கும்." என்று சொல்லிக்கொண்டே எழுந்து முகம் கழுவிவந்து சாமி கும்பிட்டு, கடை திறக்கும் அலுவலில் இறங்குவார். வீட்டோடு கடை அமைந்திருந்ததால் கடையிலிருந்து வரும் சாம்பிராணி வாசம், ஊதுபத்தி மணம் நித்திரையில் இருக்கும் எனக்கு இதமாக இருக்கும். இடைக்கிடை அப்பாவின் பேசுக் குரல் கேட்கும்.

" வா வா குஞ்சித்தம்பி ..என்ன விதைச்சிப் போட்டியோ"

"அத என்னத்த ராசாண்ணே கேட்கிறீங்க..இன்னுமில்ல. முதல்ல ஒரு கிளாஸ் பால் தாங்கோ"

"சரி தாறன். என்ன நடந்தது."

"இண்டைக்கு என்று இருக்கு . அதுவும் சரிவருமோ தெரியாது."

"ஏண்டாப்பா ...இந்தா பால் சுடசுடச் குடி. நீ கணபதிப்பிள்ளை அண்ணனின் மெசினுக்கு அல்லோ காசு கட்டின நீ. அவர் கண்டபடி பலரிட்டையும் காசுவாங்கிப் போட்டு இன்றைக்கு நாளைக்கு என்று சொல்லுற மனிசன் இல்லையே. நானும் அஞ்சு வருசமா அவர்ர மெசினாலதான் விதைப்பு தொடங்கி சூடடிப்பு வரை செய்யிறன்."

"ஓமண்ணே ,அவர் நல்ல மனிசன்தான். என்ர போதாத காலம் நேற்று வேறு ஒரு வயலில் விதைச்சஅவரது மெசினின் 'அக்சல்' உடைஞ்சு போச்சுதாம்.

அதை இன்று கொண்டுபோய் வெல்டிங் பண்ணி முடிச்சபிறகுதான் வருமாம். எப்படியும் மெசின் வர பத்துமணிக்கு மேலாகிடும். நான் கொஞ்சம் நேரத்தோட போனால் வக்கடைகளை வெட்டிக்கிட்டி எடுக்கும்போது மெசினும் வந்திடும். இந்தக் கிழமைக்குள் விதைச்சுப்போட வேண்டுமெண்டு வட்டானை சொல்லிப்போட்டார்."

"ஓம் ஓம் பிறகு முந்தி விதைச்சவன்ர வயலுக்குள்ளால மெசின் கொண்டுபோக விடமாட்டானுகள்.
எனக்கு பரவாயில்ல. என்ர பூமி ரோட்டோரம்.அதனால அந்த பிரச்சினை எனக்கு இல்லை."என்று சொல்லுவார்.

அப்பாவுக்கு தனது வயல் ரோட்டோரத்தில் இருக்கிறது என்று சொல்வதில் ஒரு சந்தோசம் இருந்தது. மெயின் றோட்டை விட்டு இறங்கினால் அவர் கால் வைப்பது அவரது வயலுக்குள்தான். தான் வாலிப வயதில் காடு வளைஞ்சு,வெட்டி,பிறகு நாட்டுக்கட்டைகள் புடுங்கி காணியாக்கிய கதையை மிக சுவார்சயமாக சொல்லுவார். நான் அவர் தண்ணி பாய்ச்சும்போதோ அல்லது பசளை எறியும்போதோ அவருக்கு ஒத்தாசையாக போவதுண்டு. அன்றைக்கு அம்மா மத்தியானம் சோறு,கறிகள் சமைச்சு எடுத்துக்கொண்டு தபால் பஸ்ஸில் வந்து இறங்குவா.

அம்மாவைக் கண்டதும், ஓடிச்சென்று அவ கொண்டுவரும் தூக்குகளை எடுத்து வந்து வயலின் நடுவில் அப்பா கட்டிய இரண்டு தட்டு புரைக்கு கீழே வைத்துவிட்டு, வயலின் நடுவில் ஓடும் ஆற்றில் இறங்கி கைகால் முகம்கழுவி வர, அப்பாவும் வந்து சேருவார். பள்ளியான் பசி பொறுக்க மாட்டான் என்று சொல்லிக்கொண்டே அவரும் கைகால் கழுவிவந்து அமர்வார். பிறகு என்ன அம்மா பரிமாற அப்பாவுடன் அமர்ந்து சாப்பிடும் சந்தோசம் இருக்கிறதே அதை சொல்ல வார்த்தைகளே இல்லை. மகா அற்புதமான அனுபவங்கள்.

காலைவேளையில் அப்பாவின் கடையில் ஒரே சத்தமும் சந்தடியுமாக இருக்கும். அநேகமான உழவு இயந்திரங்கள்,மாட்டு வண்டில்கள், அவரின் கடையில் வந்து நின்று அப்பம்,புட்டு,இடியப்பம், என்று சாப்பிட்டு பின் பால்,தேத்தண்ணி, குடிச்சி போகும்போது பிடி,சுருட்டு, வெற்றிலைபாக்கும் வாங்கிக்கொண்டே வயல்காட்டுக்கு போவார்கள். அந்த ஆரவாரம் முடிந்ததும்,அப்பாவின் வீரையடிக் கடையடியில் வேறு ஒரு வியாபாரம் களைகட்டும்.

அக்கரைப்பற்று, கல்முனை பகுதிகளிலிருந்து முஸ்லிம் மீன் வியாபாரிகள் கார்களில் வந்து சேர்ந்துவிடுவார்கள். கோரைக்களப்பு ஆற்றில் பிடிக்கும் மீன்,இறால்,நண்டு என்றால் நல்ல கிராக்கி.

எல்லாம் மொத்தமாக வாங்கிக்கொண்டு போவது இந்த வியாபாரிகள்தான். இன்னும் சேனைகளில் இருந்து வரும், காய்கறிகள், ரூபஸ்குளம்,கஞ்சிகுடியாறு, சாவாறு என்று அங்கிருந்து வரும் கருவாடு, வெடிக்கார தம்பியர் சுட்டுவரும் மான்,மரை இறைச்சி, குறவர் வாடியிலிருந்து வரும் காட்டுப்பன்றி,உடும்பு இறைச்சி,கோமாரித் தேன் என்று சகல வியாபார பொருட்களும் வந்து சங்கமமாகும் இடம் அப்பாவின் வீரையடிக் கடைதான்.

அம்மா கடைப்பொறுப்பை எடுத்தவுடன் அப்பா தனது கணக்கு கொப்பியுடன் வந்து அவரின் கொமிஷன் வியாபாரத்தை தொடங்குவார். ஊரிலுள்ள பல தொழிலாளிகளுக்கு முற்பணம் கொடுத்து வைத்திருப்பார். அவர்கள் அப்பாவிடம்தான் தங்கள் பொருட்களை கொண்டுவந்து கொடுப்பார்கள். ஒருவரையும் கண்ணைபொத்தி அடிக்காமல், அவர்களிடம் நல்ல விலைக்கே வாங்கி ஒரு. சின்ன கொமிஷன் வைத்து வெளி வியாபாரிகளுக்கு கொடுப்பார்.

இதனால் தொழிலாளிகளிடம் நல்ல பெயர் வாங்கி இருந்தார். முஸ்லிம் வியாபாரிகளும் ராசண்ணன், ராசண்ணன் என்று மரியாதையுடன் அன்பை பொழிவார்கள்.

சே. எவ்வளவு பிரபல்யமாக இருந்த வீரையடிக் கடை இருந்த இடமும் தெரியாமல் போய்விட்டதே. வீர மரமும் இல்லை. வீரையடிக் கடையுமில்லை.

இந்த இழப்புகளால்தான் அப்பா அதிர்ச்சியடைந்து படுக்கையில் விழுந்து பின் உயிரை விட்டவர். அப்பாவின் மூச்சு இருக்கும்வரை அம்மா உறுதியாக இருந்தார். அவர் போனபின் அம்மா உடைஞ்சு போனா. இன்று அவரும் இந்த உலகத்தைவிட்டு போயிட்டா.

"மாமா மாமா தூங்கிட்டீங்களா..நீங்க சாப்பிட இல்லை. எழும்புங்கோ வந்து சாப்பிட்டுவிட்டு தூங்குங்க." என்று தியாகுவின் மருமகள் எழுப்பியபோதுதான். அவன் தன் நினைவுகளில் இருந்தும், மனசு பேசிய விடயங்களிலிருந்தும் விடுபட முடிந்தது.

"சரி சாப்பிட வாறன்." என்று குரல் கொடுத்தவன் எழுந்து உட்கார்ந்தான். நல்லா தூங்கிட்டேனோ. ஏதோ பழைய நினைவுகள் எல்லாம் வந்ததுபோல் இருந்தது.

மனசுக்குள் நினைத்துக்கொண்டான். அம்மாவின் எட்டாம் நாள் முடிந்த பின் தான் மீண்டும் லண்டன் செல்ல வேண்டுமே என்று நினைக்கையில் அவன் தன்னையே வெறுத்துக் கொண்டான்.

என்னதான் வெளிநாட்டில் வாழ்ந்திருந்தாலும் தாய்மண்ணில் வாழ்வதுபோல் வருமா? என்ற கேள்வி அவனுக்கு எழாமல் இல்லை, விதி வலியது என்ற நினைப்புடன் மருமகளின் அழைப்புக்கு இணங்க சாப்பாடு அறைக்குசென்றான் தியாகு.

---

# ஒரு ஓடலியின் கனவு நனவாகிறது.

தன் அறையில் இருந்தபடி பத்திரிகை படித்துகொண்டிருந்த பரமானந்தர், தனது ஊர் வைத்தியசாலை பற்றி வந்திருந்த செய்தியை பார்த்ததும் பரவசமடைந்தார்.

நீண்டகாலமாக தான் கண்டுவந்த கனவு நனவாகப் போகின்றது. காரியம் கைகூடி வரப்போகின்றது என்ற சந்தோஷத்தில் கையில் பத்திரிகையுடன் அறையிலிருந்து வெளிப்பட்டு குரல் கொடுத்தார்.

"சரசு... சரசு..எங்க இருக்கிறாய்... பேப்பரைப் பார்த்தாயா, படிச்சாயா" என்று தன் மனைவி சரஸ்வதியை அழைத்து கேட்டு வைத்தார்.

."நான் இங்க குசினுக்குள் இருக்கிறன்.உங்களுக்கு தேத்தண்ணி போடுறன். கொஞ்சம் பொறுங்க கொண்டு வாறன்."

என்று பதில் சொன்னாள் சரஸ்வதி.

"அட தேத்தண்ணி கிடக்கட்டும் கழுதை, நீ இஞ்ச வா .இந்த பேப்பரில் வந்திருக்கிற செய்தியை பாரு" என்று அவர் சொல்லிக்கொண்டு இருக்கையில் சரஸ்வதி கையில் தேத்தண்ணி கப்போடு ஹாலுக்குள் வந்தவள் கேட்டாள்.

"அப்படி என்னப்பா இன்றைக்கு பேப்பரில் செய்தி. இவ்வளவு சந்தோசப்படுறீங்க.

முதலில தேத்தணியை குடியுங்கோ. இந்தாங்கோ பிடியுங்கோ" என்று கொடுத்தாள்.

அதை வாங்கி வைத்துக்கொண்ட பரமானந்தர்.

"சரசு பேப்பரில் நல்ல செய்தியல்லோ வந்திருக்கு. நீ பார்க்க இல்ல என்ன"

"இல்லை நான் வேலையாக இருந்திட்டன். படிச்சுப் பார்க்காமல் உங்கட அறைக்குள்ள

கொண்டு வந்து வச்சனான். என்ன செய்தியப்பா வந்திருக்கு."

"இஞ்ச பார் நம்மட ஆசுபத்திரி பெரிய வைத்தியசாலையாகப் போகிறதாம்.

விரைவில் அது சகல வசதிகளுடனும்கூடிய பேஸ் கொஸ்பிடலாக வரப்போகிறதாம்

என்று பெரிய செய்தி படங்களுடன் வந்திருக்கு. இஞ்ச பார்" என்று பத்திரிகையில் வந்த செய்தியை காட்டினார் பரமானந்தர்.

"ஓமப்பா இது நம்மட ஆஸ்பத்திரிதான்... இந்த படத்தில தெரியுதே.. திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலை என்று. ஆட்களும் நிறையப் பேர் மாலையும் கழுத்துமாக
நிற்கிறார்கள். என்னப்பா விசேசம்?" கேட்டாள் வெள்ளந்தியான சரஸ்வதி.

"எடி சரசு, இதில இருப்பவர்கள் கிழக்குமாகாண, சுகாதார அமைச்சரும். நமது நாடாளுமன்ற உறுப்பினரும், வைத்திய அதிகாரிகளுமடி. போன வருஷம் கிழக்குமாகாண முதலமைச்சர் நமது ஆஸ்பத்திரிக்கு,சுகாதார அமைச்சர் அவர்களுடன் வருகை தந்தபோது,மக்கள் வைத்த கோரிக்கைக்கு உறுதிமொழி வழங்கி இருந்தார்.

இந்த திருக்கோவில் வைத்தியசாலை, இந்த பிரதேச மக்களின் வைத்திய நலன்களுக்காக பேஸ் கொஸ்பிடலாக விரைவில் தரம் உயர்த்தப்படும் என்று"

"அதென்னப்பா பேஸ் கொஸ்பிடல்"

"அப்படியென்றால் ஆதார வைத்தியசாலை என்று பொருள்.அது ஓரளவு சகல வசதிகளும் கொண்டது.
இப்போது இருப்பது மாவட்ட வைத்தியசாலை. இது ஆதார வைத்திய சாலையாக
உயர்த்தப் படும்போது மருத்துவ வசதிகள் அதிகரிப்படும். வைத்தியர்கள் அதிகரிக்கப் படுவார்கள்.
தாதிமார் எண்ணிக்கை கூடும். புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.
வாடுகள் நவீனத்துவம் பெறும்"

" உண்மையாகவே சொல்றீங்க. எங்கட மக்கள் போதிய வசதி இல்லாம எவ்வளவு
கஷ்டப்பட்டுப் போயிட்டாங்க. கொஞ்சம் கடுமையான
நோய் வந்தாலும் அக்கரைப்பற்று,
கல்முனை என்று செல்ல வேண்டி இருக்கு . என்னப்பா "

"பின்ன, வேறே என்ன. எவ்வளவு பழமையான வைத்தியசாலை இது. ஆங்கிலேயர் காலத்தில
ஒரு டிஸ்பென்சரியாக இருந்தது."

"நீங்களும் இந்த ஆஸ்பத்திரியில்தானே ஓடலியராக
வேலையை தொடங்கினீர்கள்."

"நான் மட்டுமில்ல. எனக்கு முதல் ராசையா அண்ணர், நடேசபிள்ளை மாமா எல்லோரும் இங்குதான் மருந்தாளர்களாக வேலை செய்தவர்கள். அப்போ தெற்கே கோமாரி தொடக்கம் வடக்கே சின்னமுகத்துவாரம் வரை இருந்து நோயாளிகள் வருவார்கள். காய்சல்,தடிமல்.

என்று வருபவர்களுக்கு அப்போது இருந்த "அப்போதிக்கரி " ஐயா எழுதித் தரும் மருந்தை நோயாளிகளுக்கு கொடுத்திருக்கிறார்கள்.. பலர் காயங்களுடன் வருவார்கள் அவர்களுக்கு மருந்து கட்டி இருக்கிறார்கள்.

"அந்தக் காலத்தில் பிள்ளைகள் பெற்றுகொள்ளவும் இங்கதான் வருவார்கள் என்ன"

"ஓமோம் மகப்பேற்றுக்கு தனியாக ஒரு வாட் இருந்தது எலோருக்கும் தெரியும். நமது திருக்கோவில் பிரதேச மக்கள் அநேகமானோர் நம்மட ஆஸ்பத்திரியில் பிறந்தவர்கள்தான்.

" நாம பிறந்தது, நம்மட பிள்ளைகள் பிறந்தது எல்லாம் இந்த ஆஸ்பத்திரிதானே. எவ்வளவு பெருமை மிக்க ஆஸ்பத்திரி இல்லையா"

"கண்டிப்பாக மிக சிறப்பு வாய்ந்தது. அந்த பழைய ஆஸ்பத்திரி கட்டிடமும், மருந்து கட்டும் முன்பக்க கொட்டிலும், குழந்தை பெறும் வாட்டும், இன்னும் என் கண்களுக்குள் இருக்கின்றன . அன்றைய ஆஸ்பத்திரி எங்கள் பிரதேச மக்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக இருந்தது. நல்ல அப்போதிக்கரி டாகுத்தர் எல்லாம் இருந்திருக்கிறார்கள். நோயாளிகளோடு அவர்கள் அன்பாக பேசுவதிலே நோயாளிகளின் பாதி நோய் பறந்து போய்விடும். காலம் மாற, பிரதேச மக்களின் தொகை பெருக, அந்த ஆஸ்பத்திரி மறைந்து படிப்படியாக இன்றைய எமது வைத்திய சாலை உருவாகியது. இன்று இந்த செய்தியின்பிரகாரம் இன்னுமொருபடி உயரப்போகிறது. சரி சரசு. நான் கிணற்றடிக்கு போயிட்டு வாறன். நீ எனக்கு காலைச் சாப்பாட்டை எடுத்து வை.நான் சாப்பிட்டுவிட்டு ஒருக்கா முச்சந்தி வரைக்கும் ஒரு நடை போயிட்டு வாறன்.

இந்த சந்தோசமான செய்தியை,நம்மட ஆஸ்பத்திரி மருந்தாளர் ஆனந்தனோடும் கேட்டு தெரிந்து கொண்டு வாறன்."

"சரி சரி கெதியா கை,கால் முகம் கழுவிற்று வாங்க நான் புட்டுக்கு சம்பல் போட்டு எடுக்கிறன். இரவையக் கறி, சொதி எல்லாம் இருக்கிறது" என்ற சரஸ்வதி சமையலறைக்குள் சென்றாள்.

எழுபத்திரண்டு வயது நிரம்பிய பரமானந்தர் இன்னும் சுறு சுறுப்பாக இருப்பது அவரின் தேகாரோக்கியத்தை காட்டியது. இந்த வயது வரைக்கும் அவர் எந்தக் கெட்ட பழக்க வழக்கங்கள் இல்லாமல் இருக்கிறார்.

ஊருக்குள் அவருக்கு நல்ல மரியாதையும்,கண்ணியமும் இருந்தது. அவரது வாலிப வயதிலிருந்து ஓய்வு பெறும்வரை இந்த வைத்திய சாலையின் பணியாளனாக, நோயாளிகளை அரவணைக்கும் ஒரு பண்பாளனாக இருந்திருக்கிறார். தனது காலத்துக்குள்ளே இந்த வைத்தியசாலை பெரிய தரத்துடன் உயரவேண்டும் என்று கனவு கண்டவர்.

அந்தக் கனவு இன்று நனவாக போகின்றது என்று அறிந்து அவர் உள்ளம் துள்ளிக்குதித்தது .
அதன் வெளிப்பாட்டில் கம்பீரமாக நடந்து முச்சந்திக்கு வந்துவிட்டார். இங்குதான் இந்த ஆஸ்பத்திரியின் தற்போதைய மருந்தாளர் ஆனந்தன் இருக்கிறார். அவரின் வீட்டுக்கு முன் நின்ற பரமானந்தரை, கேற்றை திறந்துகொண்டு வெளியில் செல்லவந்த ஆனந்தன் கண்டுகொண்டான்.

"ஐயா, வாங்க. எப்படி இருக்கிறீங்க" என்று நலம் விச்சாரிதான்.

" நான் நல்லா இருக்கிறன் தம்பி. நீங்க எங்கேயோ கிளம்பிட்டீங்க போல. நான் உங்களை கண்டு பேசிற்றுப் போகலாம் என்றுதான் வந்தனான்."

"அப்படியே அய்யா வாங்க உள்ள வாங்க. நான் நம்மட கொஸ்பிடலுக்கு முன்னால் இருக்கிற சூப்பர்மார்கெட்வரை போயிட்டு வரலாம் என்று வெளிக்கிட்டனான். பிறகு போய்க்கொள்ளலாம் நீங்க வாங்க" என்று வரவேற்றான்.

ஹாலுக்குள் இருவரும் வந்து அமர்ந்தார்கள். ஆனந்தனின் மனைவி ராணியும் பரமானந்தருக்கு வணக்கம் சொல்லி வரவேற்றாள். பதில் வணக்கம் சொன்ன அவர்

"தம்பி இன்றைய பேப்பர் படிச்சனான். நம்மட கொஸ்பிட்டல், ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படப் போகின்றது என்று

படங்களுடன் செய்தி வந்திருக்கிறது. எனக்கு அந்த செய்தியைப் படிச்சதிலிருந்து சந்தோசம் தாங்க முடியல்ல. அதுதான் உங்களோடு பேசிற்றுப் போகலாம் என்று வந்தனான்"

"ஓம் அய்யா, உங்கள் கனவு பலிக்கப் போகிறது. என்னோடு பேசும்போதெல்லாம் ஒரே இதைத்தானே சொல்வீர்கள். அறுபதுகளில் இருந்து ஓய்வு பெறும்வரை அக்கரைப்பற்று, பாலமுனை என்று மாற்றம் வந்தாலும் உங்கள் அதிகப்படியான காலம் உங்க ஊர் ஆஸ்பதிரியோடுதானே கழிந்தது என்று சொல்வீர்கள்.அது படிப்படியாக மாற்றமடைந்து மாவட்ட வைத்தியசாலையாக மாறியபோதும். பழைய கட்டிடங்கள் போய்,புதிய கட்டிடங்கள் வந்தபோதும் சந்தோசப் பட்டுக்கொண்டீர்கள். இருந்தாலும் திருக்கோவில் பிரதேசம் பரந்த நிலப்பரப்புக் கொண்ட பல கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் அதனால் தற்போதைய வைத்தியசாலை சகல வசதிகளுடனும் கூடிய பேஸ் கொஸ்பிட்டலாக மாறவேண்டும்.

அவசர சிகிச்சைகளுக்குரிய அனைத்து வசதிகளும், போதிய நோயாளிகள் விடுதிகளும் கட்டப் படவேண்டும், புதிய மருத்துவ உபகரணங்கள், அவசர மருத்துவ வண்டிகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று சொல்வீர்களே அதெல்லாம் இனிக் கிடைக்கும் ஐயா"

" ஆனந்தன் நீங்க இப்படி சொல்லும்போதே எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியல்ல. பேப்பரில் செய்தியை படிச்சவுடன் என் மனைவியுடன் சொல்லி அவளுடனும் சந்தோசத்தை பகிர்ந்துகொண்டேன். உங்களிடம் இந்த செய்திபற்றி அறியலாம் என்றுதான் வந்தனான். நீங்களும் இந்த பகுதி மக்களுக்காக இந்த வைத்திய சாலையிலிருந்து பல சிரமங்களுடனும், சில வேளைகளில் மருந்து பற்றாக்குறையுடனும் பணியாற்றுவதாக சொல்லி இருக்கிறீர்கள். இல்லையா தம்பி"

" உண்மைதான் ஐயா. மாத்திரை,மருந்துகள் அடிக்கடி பற்றாக்குறையாக இருந்திருக்கிறது. கடந்த காலங்களில் நோயாளிகளின் வருகை அதிகரித்து இருந்திருக்கிறது. முன்னைய காலத்தைப்போலல்லாமல், தற்போது புதிய நோய்களும் மக்களைப் பாதிக்கின்றன. உங்கட காலத்தில், இந்த கொலஸ்ட்ரோல், ப்ரஷர், ஸுகர், கான்ஸர், என்ற நோய்கள் இருந்ததா இல்லையே"

" நீங்க சொல்லுற நோய்கள் எல்லாம் அன்றைய காலங்களில் பெரியளவு பேசப்படவில்லை. மிஞ்சிபோனா காய்ச்சல், கூதல். சளி,வயிற்றுப்போக்கு, தலையிடி,சொறி,சிரங்கு என்றுதான் வருவார்கள். அன்று நீங்கள் சொல்லுகிற நோய்கள் இருந்திருக்குமோ தெரியாது.

அவற்றை கண்டு சொல்லும் மருத்துவ வசதியும் அன்று நமது ஆஸ்பத்திரியில் இருக்கவில்லை. இப்போது உள்ள மருத்துவ முறையிலும்,வளர்ச்சியிலும் எல்லாவித நோய்களையும் கண்டுபிடிக்க முடிகிறது."

"சரிதான் இன்று மருத்துவத்தின் வளர்ச்சி எங்கேயோ போய்விட்டது. நமது வைத்திய சாலைக்கும் இந்த நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவம் கிடைக்கப் போகின்றது என்ற செய்தி நமக்கு மட்டுமல்ல ஐயா நமது பிரதேச மக்களுக்கும் சந்தோசத்தைக் கொடுக்கும் செய்திதான். கடந்த வருடம் கிழக்குமாகான முதலமைச்சருடன் வருகை தந்த சுகாதார அமைச்சர் நசீர் அவர்கள் நமது வைத்தியசாலை பற்றிப் பேசும்போது, குறிப்பிட்டது எனக்கு நினைவுக்கு வருகிறது.

தன்னுடைய தகப்பனார் பொத்துவிலுக்கு விவசாய தொழில் நிமித்தம் இந்த வழியால் செல்லும்போது, தன்னையும் அழைத்து செல்வதுண்டாம். அந்த நேரம் இந்த ஆஸ்பத்திரியை ஒரு சிறு கட்டிடமாக தான் கண்டதாகவும், இந்த பிரதேச மக்களுக்கு ஒரு முக்கியமான, அவசியமான ஒரு வைத்திய சாலை இது என்று அன்றே தான் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டு,கண்டிப்பாக இந்த வைத்தியசாலையை ஒரு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த ஆவன செய்வேன் என்று உறுதி கூறினார்"

" ஓம் நானும் அன்று வந்திருந்தேன். கிழக்குமாகாண முதலமைச்சரும் அதை ஆமோதித்து கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதாக சொன்னார். இலையா"

"அன்று அமைச்சர்கள் உட்பட,மாகாண சபை உறுப்பினர்,வைத்திய அதிகாரிகள் எல்லோரும் ஒரே மனதுடன் ஒரு மித்த குரலில் நமது மக்கள் மத்தியில் சொன்ன வாக்குறுதி இன்று நிறைவேறுவதாக இன்றை பத்திரிகை செய்தி கூறுகிறது. விரைவில் இது அமுல் படுத்தப் படும்"

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போதே ஆனந்தனின் மனைவி ராணி ஒரு தட்டில் பலகாரமும், டின்பால் தேநீரும் கொண்டு வந்து வைத்து.

" ஐயா பலகாரம் சாப்பிடுங்கள். டீக்கு சீனி போடவில்லை." என்றாள் .

"ஏன் பிள்ளை. நான் இப்பதான் சரசு காலைச்சாப்படு தர, சாப்பிட்டுவிட்டு வந்தனான்"

"பரவாயில்லை ஒன்றை சாப்பிட்டுவிட்டு டீயை குடியுங்கோ" என்றான் ஆனந்தன். அவனும் ஒன்றைக் கடித்து டீயை குடித்தான்.

ஒரு மணி நேரமாக மருந்தாளர் ஆனந்தனின் வீட்டில் இருந்து, வைத்தியசாலை பற்றியும், ஊர்,மற்றும் பிரதேச மக்களின் தேவைகள் பற்றியும் பல விசங்கள் பேசி முடித்து, அவர்களுக்கு நன்றியும், வணக்கமும் சொல்லி விடைபெற்றார் அந்த எழுபத்திரண்டு வயது பரமானந்தர்.அவருடைய நீண்ட நாள் கனவு நனவாகப் போகின்றது என்ற செய்தி அன்று அவருக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. இதற்கு வழிவகுத்த அனைத்து உள்ளங்களையும் அவர் மனதார வாழ்த்தினார்.

---

# எங்கபோய் முட்டிக்கிறது ?

என்னங்க மத்தியான சமையலுக்கு காய்கறி இல்லங்க .சந்தைக்கு போறதில்லையா? நேரம் பத்துமணியாப் போச்சு. இன்னமுமா பேப்பர் படிச்சுக் கொண்டு இருக்கிறீங்க. கெதியா வெளிக்கிட்டு போங்களன்" குசினிக்குள் அலுவலாக இருந்த லட்சுமி தன் கணவர் பாலசுந்தரதை கேட்டு வைத்தார்.

"இந்தா வெளிக்கிடுறன் லட்சுமி . நீ மற்ற வேலைகளை முடிக்கிறதுக்கிடையில நான் போய் மரக்கறிகள் வாங்கிக்கொண்டு வாறன்" என்றவர் தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு கிளம்பிட்டார்.

ஊரில் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் பாலசுந்தரம். ஊரில் நல்லது கெட்டதுகளில் கலந்துகொள்பவர்.

அவருக்கு ஊர் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு மரியாதை இருந்தது. தனது சைக்கிளில் மெதுவாக பாலசுந்தரம் அவர்கள் வந்துகொண்டு இருந்தார்.

முச்சந்தி மணிக்கூட்டு கோபுர வளைவில் ஒரே சனக்கூட்டம். பொலிஸ் வாகனம் நின்று இருந்தது.

வாகனங்கள் முன்னால் செல்ல அனுமதிக்கப்படவில்லை.அதனால் அவர் ஊர் வைத்தியசாலை முன்பாக சைக்கிளிலிருந்து இறங்கி வீதி ஓரமாக நின்று கொண்டு அங்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அந்தப் பக்கம் பார்த்துக்கொண்டே இருந்தார்.

அப்பொழுது வைத்திய சாலையிலிருந்து அம்புலன்ஸ் வண்டி புறப்பட்டு மணிக்கூட்டுக் கோபுர வளைவில் நின்றது. பாலசுந்தரத்தாருக்கு இப்போது புரிந்தது. ஏதோ விபத்து நடந்திருக்கிறது என்று.

அதை உறுதி செய்வதுபோல் எதிர்த்திசையிலிருந்து வந்த அவர் நண்பர் பத்மநாதன் அவரிடம் பேச்சுக் கொடுத்தார். அவரும் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

" என்ன பாலா சந்தைக்கு போறீர் போல."

" அட ஓமடாப்பா. மரக்கறி ஏதும் வாங்குவம் எண்டு வந்தனான். அங்கு என்ன நடக்குது. பத்மா"

" என்ன நடக்குதோ அந்த கூத்த என்ன சொல்லுறது. நானும் சந்தைக்கு போகலாம் என்றுதான் வந்தனான்.

வந்த இடத்தில இந்த பிரச்சினை. ஒரு பெடியன் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து ரோட்டைக் குறுக்கறுத்த மாட்டில் மோதி அடிபட்டு கீழே விழுந்திட்டான். தலையில் அடிபட்டு இரத்தம் கொட்டுது.

அதுதான் அம்புலன்ஸ்ல அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்போறாங்க"

"இந்தக் காலத்துப் பெடியனுகளுக்கு எல்லாம் ஒரு அவசரம் பத்மா.ஆற அமர எதுவும் செய்ய மாட்டானுகள். அதைப்பற்றி பிறகு பேசுவோம் அதென்ன அவ்வளவு கூட்டம். அதுவும் பெடியன்கள் நிறைய பேர் நிக்கிறானுகள்."

"அதுதானே பிரச்சினை. எனக்கும் இப்பதானே தெரிஞ்சுது"

" அதென்ன பிரச்சினைடாப்பா "

"ஊரில் உள்ள கொஞ்சப் பொடியனுகள், இந்தியாவில் இருக்கிற ஆரோ ஒரு நடிகனுக்கு பிறந்தநாளாம் என்று அதற்கு ரோட்டுக் கரையோரம் பந்தல்போட்டு அந்த நடிகனின் படத்தை பெரிதாக ஒரு தட்டியில் வைத்துகொண்டு அதற்கு தீபம் காட்டி பின் கேக் வெட்டிக் கொண்டாடி இருக்கிறானுகள்.
அந்த நடிகருக்கு இவர்கள் ரசிகர்களாம். அதனால் அவர் பெயரால் குளிர் பானங்களும், இனிப்புகளும் போவோர் வருவோருக்கு கொடுத்து மகிழ்ந்தவர்களாம். சிலர் இதை கண்டித்து அவர்களிடம் பேசி இருக்கிறாங்க.
அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்திருக்கிறது."

"எங்கேயோ இருக்கும் நடிகனுக்கு இவனுகள் ஏன் இங்கு பிறந்தநாள் கொண்டாடுகிறானுகள்.
ஊரில் எவ்வளவோ நல்ல வேலைகள் செய்வதற்கு கிடக்கின்றன ."

"அதைத்தான் அங்கு போய் வாக்குவாதம் செய்தவர்களும் கேட்டு இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் 'உங்கட வேலையை பார்த்துக்கொண்டு போங்க. எங்கட விசயத்தில தலையிட வேணாம். இது எங்கட தலைமை மன்றத்தின் வேண்டுகோள். அவங்கட அனுசரணையுடன் தான் இங்கு எல்லாம் செய்கின்றோம்'. என்று சொல்லி, தொடர்ந்து கொண்டாடி இருக்கிறானுகள்"

"தலைமை மன்றமாமோ அது எங்கு இருக்கிறதாம்?"

"அந்த நடிகர் பெயரில் ரசிகர் மன்றமாம். அது யாழ்ப்பாணத்தில் இருக்கிறதாம். அவர்கள் கொடுத்த பணத்தில்தானாம் தாங்கள் எல்லாம் செய்கிறார்களாம்."

"யாழ்ப்பாணம் போருக்குபின்னர் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது என்று பேப்பர்களில் செய்திகள் வருகின்றன. போர் முடிந்து பல வருசங்கள் ஆனபிறகும் இன்னும் அங்கு போதைப் பொருள் பாவனைகளும், பாலியல் குற்றங்களும், வாள்வெட்டுக்களும், களவு, கொள்ளைச் சம்பவங்கள் என்று நடந்துகொண்டு இருப்பதாக பல செய்திகள் வருகின்றன."

"ஓம் பாலா நானும் அவற்றைப்பற்றி அறிந்தனான், இப்போது வந்திருக்கும் தலைமை நீதிபதிகூட அங்கு கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றங்களைக் குறைக்க முயல்கின்றார் என்றும் செய்தி படித்தனான்"

"பத்மா! யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் அங்கு பணப்புழக்கம் அதிகம். நான் சொல்வது தனி யாழ்ப்பாண நகர் மட்டுமல்ல, யாழ் மாவட்டம். பலர் புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். அநேக குடும்பங்களில் குறைந்தது வீட்டுக்கு ஒருவராவது வெளிநாட்டில் இருக்கிறாங்க. அதனால் நல்ல வசதி. வசதி குறைந்தவர்களும் இல்லாமல் இல்லை. இந்த வசதியுள்ள குடும்பங்களின் வாலிபப் பிள்ளைகள்தான் கண்டபடி தறிகெட்டு நடக்கிறார்கள். அதிலும் எல்லாக் குடும்பங்களிலும் அப்படி நடப்பதில்லை. விதி விலக்கும் உண்டு."

" நீர் சொல்வது உண்மைதான் பாலா. எல்லாரும் அப்படி இல்லை.தங்கள் குடும்பத்தை சேர்ந்த யாரோ ஒருவர் கஷ்டப்பட்டு வெளிநாட்டில் சம்பாதித்து அனுப்பும் பணத்தைப் பத்திரப்படுத்தி, பல விஷயங்கள் செய்கிறார்கள் பலர். பொறுப்பாக தங்கள் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். சிலர் அப்படியல்ல. கண்டபடி செலவு. பிள்ளைகளுக்கு தேவைக்கு அதிகமாக பணம், அவர்கள் கேட்கும் சாமானுகள். மோட்டார் சைக்கிள் தொடக்கம் விலை உயர்ந்த கைபேசி, கணினி, மற்றும் ஆடம்பர பொருட்கள், என்று கொடுத்து அவர்களை சமூக அக்கறை அற்றவர்களாக மாற்றி விடுகின்றார்கள்."

" ஆ,, அவர்கள்தான் இப்படி பொறுப்பிலாமல் நடந்து, சினிமா நடிகனுக்கு மன்றம் அமைத்து அவனின் போஸ்டருக்கு ஆராத்தியும் காட்டி அடுக்கெடுப்பவர்கள்.
தமிழ் நாடுதான் சினிமாவுக்குள் சிக்கி அரசியலிலும், வாழ்க்கை நெறியிலும் சிதறி சின்னாபின்னமாக போய்விட்டது.

எங்கட நாட்டுக்கு இந்த சினிமா கலாசாரம் தேவையா? அங்கு சினிமாநடிகர்கள் கோடிகோடியாக சம்பாதிக்கிறாங்க.அவர்களுக்கு ரசிகர் மன்றங்கள் வைத்திருப்பவர்கள்,அவர்கள் படம் வெளிவரும் நாளில் தியேட்டர்களின் முகப்பில் வைத்திருக்கும் அவர்களின் கட்டவுட்டுகளுக்கு பாலாபிசேகம் செய்யிறாங்க."

" அங்கு குழந்தைகளுக்கு பாலே இல்லாமல் ஏழை எளியவர்கள் ஏராளம் பேர் இருக்கிறாங்க. இவனுகள் குடம் கணக்கில் பாலை கொண்டுபோய் நடிகனின் பெரிய தட்டிப் படத்தில கொட்டுகிறான் என்று பத்திரிகை செய்தி ஒன்று படித்தேன்"

" பாலா, இந்தக் கூத்து யாழ்ப்பாணத்திலும் நடந்திருக்கு. நம்மட மட்டக்களப்பு கல்லடி, செங்கலடி தியேட்டர்களிலும் இப்போ அண்மையில் நடந்திருக்கு. தமிழ்நாட்டில் பொறுப்பற்ற, சினிமாவே வாழ்க்கையென்று நினைத்து வாழும் சிலர் செய்யும் இந்த முட்டாள்தனமான செயல்கள் எங்கட வடகிழக்குக்கு ஏன்? இது மிகவும் கண்டிக்கத்தக்கது. சினிமா பார்ப்பதில் தவறு இல்லை. அதைப் பார்த்து ரசிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். சினிமா நடிகனுக்கு பிறந்தநாள் கொண்டாடும் கேவலம் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு என்று இருந்து இப்போ திருக்கோவிலுக்கும் வந்ததிருக்கு. இதை ஊரில் உள்ள சிலர் வன்மையாக சற்று முன்னர் கண்டித்திருகிறார்கள். அதனால் வந்த பிரச்சினையும், விபத்தும்தான் நம்ம இருவரையும் சந்தைக்கும் போகாமல் பண்ணி தடுத்து இங்கே நிற்க வைத்திருக்கு"

"பத்மா இந்த முறை வந்த உயர்தர பரீட்சை முடிவுகள் தெரியும்தானே. நமது பிரதேச பாடசாலைகள் உயர்தரத்தில் குறிப்பிடத்தக்க எந்த சாதனைகளையும் செய்யவில்லை. இதற்கு காரணம் பாடசாலைகளின் தலைமை,நிர்வாகம் ஆகியவற்றின் அக்கறை இல்லாத தன்மையா? ஆசிரியர்களின் போதிக்கும் தன்மையா?
அல்லது மாணவர்களின் ஆர்வக் குறைவா?என்று தெரியல்ல. இந்தமாதிரி விசயங்களை பார்க்கும்போது மாணவர்களின் போக்கும், கவனக்குறைவாக,படிப்பில் நாட்டமற்று இப்படி சினிமா மோகம் கொண்டு திரிவதால் ஏற்பட்ட விளைவோ என்று எண்ணத் தோன்றுகிறது."

"நாங்க ஆசிரியர்களாக இருந்த காலத்துக்கும் இப்போதைய காலத்துக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து கிடையாது. புதிய கற்கை நெறி, புதிதான பாடங்கள், பல துறைகள், எந்தத் துறை வேண்டுமானாலும் மாணவர்களுக்கு தெரிவு செய்யும் சுதந்திரம் எல்லாம் இருக்கிறது.

அத்தோடு நவீன முறையில் அவர்களுக்கு படிப்பதற்கும், தெரியாத,புரியாத விசயங்களை அறிந்துகொள்ள பாடசாலைகளில் வசதிகளும் இருக்கின்றன. மாணவர்களும், அவர்கள் பெற்றோர்களும் கவனமெடுத்தால் கண்டிப்பாக எல்லாப் பரீட்சைகளிலும் மிக சிறப்பாக சித்திபெற முடியும்."

"எனக்கு கவலை என்ன தெரியுமா, ஊரில் எவ்வளவோ செய்ய வேண்டி இருக்கிறது. அவற்றை எல்லாம் செய்ய வேண்டிய பொறுப்பு,அல்லது சம்பந்தப் பட்டவர்களை செய்யத் தூண்டவேண்டிய பொறுப்பு, செய்விக்கவேண்டிய கடப்பாடு இந்த இளைஞர்கள் கையில்தான் இருக்கிறது. அதை அவர்கள் உணரவில்லை என்ற கவலைதான் எனக்கு. சற்றுமுன்னர் நீதானே சொன்னாய் பத்மா, மாடு ரோட்டைக் குறுக்கறுத்து போகும்போது அந்தப் பெடியன் அதில் கொண்டு மோதி விபத்து நடந்து விட்டதென்று.

இந்த கட்டாகாலி மாடுகள் ஊர் முழுதும் கண்டபடி திரிகின்றன.இதை உரிய இடத்தில கொண்டு விட, பிரதேச சபையையோ,அல்லது சம்பந்தப் பட்ட யாரிடமோ சொல்லி காரியம் பார்க்க, இந்த இளைஞர்கள் முன்னுக்கு வரவேண்டும். இன்னும் நமது ஊர்க்கோவில் நிர்வாகச்சீர்கேடு,வயல்,சேனைப் பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம், எமது பகுதி தென்னந்தோட்டங்கள் மாற்று இனத்தர்வர்களுக்கு விற்கப்படுவது, போன்ற பல விசயங்கள் கவலை அளிப்பதாக இருக்கின்றன.இவற்றை இந்த இளைஞர்கள் தலையிட்டு தட்டிக் கேட்கலாம். நடவடிக்கை எடுக்கலாம். தடுத்து நிறுத்தலாம். இவர்கள் கிளர்ந்து எழுந்து வந்தால் ஊரே ஒன்று கூடி ஒத்தாசை செய்யுமே. இவைகளில் கவனமெடுக்காமல் ஒன்றுக்கும் உதவாமால் இப்படி எங்கேயோ இருக்கும் சினிமா நடிகனுக்கு முச்சந்தியில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடி இருப்பது வெட்கக்கேடு இல்லையா? எனக்கு எங்கபோய் முட்டிக்கிறது என்று தோன்றுகிறது பத்மா"

"பாலா! நீ சொல்வது அத்தனையும் உண்மை. இளைஞர்கள்தான் ஒரு கிராமத்தின் எதிர்கால தூண்கள். அவர்கள் நினைத்தால் எதையும் செய்யலாம். ஆனால் அவர்கள் நல்லவற்றை நினைக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். சமுதாயத்தை தூக்கி நிறுத்தவேண்டிய இவர்கள் தடம்மாறி செல்வது எந்த விதத்தில் நியாயம்? இன்று நடந்த விவாதத்தில், தங்கள் செயலை இவர்கள் நியாயப் படுத்தி பேசியிருக்கிறார்கள்.

ஒன்று தெரியுமா? சின்னப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் நடிகர் பெயரால் பரிசும் கொடுத்து அவர்களையும் சினிமா என்றும், நடிகர் என்றும் ஆர்வம் காட்டி நாசமாக்க நினைக்கின்றார்கள். இதை அனுமதிக்க முடியாது பாலா."

"மற்றது, ஊரில் தன்னலம் தலைவிரித்தாடுகிறது. என்ன நடந்தால் நமக்கென்ன நாமமட்டும் நம்மட வேலையைப் பார்த்துக் கொண்டு இருப்போம் என்று பலர் இருக்கிறாங்க. இன்னும் சொல்லப் போனால் இரண்டு பிரிவினர் ஊருக்குள் இருப்பதாகவும் ஒரு தகவல் இருக்கிறது. ஒரு பிரிவினர் ஏதும் செய்ய நினைத்தால் அதை மற்றவர்கள் செய்ய விடாமல் பண்ணுவது. அதையும் மீறி அது செய்துமுடிக்கப் பட்டால் காழ்ப்புணர்ச்சியில் கண்டபடி பேசுவது.

இவைகளும் இந்த இளைஞர்கள் மத்தியில் இருக்குமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஏதோ நம்மட காலம் இன்னும் கொஞ்சம்தான் அதற்குள் என்னென்ன நடக்க இருக்குதோ யாருக்குத் தெரியும்?" என்ற பாலசுந்தரம், மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து அம்புலன்ஸ் வண்டி விரைவாக அக்கரைப்பற்று நோக்கி செல்வதையும், கூட்டம் கலைவதையும், பொலிஸ் வாகனமும் வீதித் தடையை தளர்த்தி எல்லோரையும் பயணிக்க அனுமதிப்பதையும் கண்டுகொண்டார்.

" பத்மா அங்கே பார் எல்லோரும் கலைந்து செல்கிறார்கள். அம்புலன்ஸ்சும் சென்றுவிட்டது. வீதி தடையும் எடுத்தாயிற்று. நான் சந்தைக்கு போகவேண்டும். லெட்சுமி மரக்கறிக்கு காத்துக் கொண்டு நிற்பா. நீரும் வாறீரா"

"பின்ன வேற என்ன. நானும் சந்தைக்குதானே போக வந்தனான். வா, எனக்கும் நிறைய சாமான்கள் வாங்க வேண்டி இருக்கு" என்ற பத்மநாதன் தனது சைக்கிளில் முன்னுக்கு சென்றார்.

பாலசுந்தரமும் அவரை பின் தொடர்ந்து தனது சைக்கிளில் சென்றார். மணிக்கூண்டு கோபுரம் தாண்டி போகும்போது வீதி ஓரத்தில் வைத்திருந்த சினிமா நடிகனின் பெரிய படமும், அதை சுற்றி நின்றிந்த இளைஞர்கள் கூட்டமும் அவர் மனதில் பல கேள்விகளை எழுப்பியதோடு,அவரை அறியாமல் ஒரு பெருமூச்சும் வெளிப்பட்டது.

---

# தலைமுறை இடைவெளி

"என்ன சிவா பின்னடிக்கிறீர். கொஞ்சம் எட்டிப்போட்டு நடவுமன். ஏதாவது பேசிக்கொண்டு பக்கத்தில நடந்து வருவீர். இண்டைக்கு என்ன ஆச்சுது. என்ன செய்யிறது ஐம்பது வயசுக்குமேல நமக்கு சுகரும், டயபிட்டிக்சும் இருக்குது என்று டாக்டர் சொல்லிப்போட்டார்.
ஒரு ஊர்ப்பட்ட குழிசைகளையும் தந்து, காலையில ஒவ்வொருநாளும் ஒரு மணித்தியாலம் நடவுங்க என்றும் சொல்லிப்போட்டார். ம்..என்ன பண்ணுறது, இன்னும் நமக்கு செய்யவேண்டிய கடமைகள் பாக்கி இருக்கே சிவா, என்ன நான் சொல்லுறது "
என்று திரும்பிப் பார்த்த தணிகாசலம்,சிவா இரண்டு யார் பின்னால் சோர்ந்து போய் வருவதை பார்த்து நின்றுகொண்டார்.

" என்ன சிவா களைக்குதே, ஸுகர் குறைஞ்சிபோச்சுதோ . சரி வா அந்த சீமன்ட் பெஞ்சில் இருந்து ஒரு வாழைப்பழம் சாப்பிடுவோம்." என்ற தணிகாசலம் காலிமுக திடலில் உள்ள ஒரு சீமன்ட் பெஞ்சை நோக்கி நடந்தார். சிவாவும் பின்தொடர்ந்தார்.

சிவராசா கொழும்பில் உள்ள நில அளவைத் திணைக்களத்தில் சிரேஷ்ட லிகிதர். தணிகாசலம் இலங்கை வங்கி முகாமையாளர். இருவரும் யாழ் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஒருவர் வடமராச்சி. மற்றவர் வலிகாமம். கால் நூற்றாண்டுகளுக்கு மேல் தொழில் நிமித்தம் கொழும்பு வந்தவர்கள் இங்கேயே வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள். இவர்களின் மனைவி மாரும் அரச பணியில் இருக்கிறார்கள். சிவாவுக்கு ஒரு மகள். உயர்தரம் படிக்கிறாள். தணிகாசலத்துக்கு ஒரு ஆண் குழந்தை அதுவும் பிந்தியே கிடைத்தது..

இருவருக்கும் ஒரே டாக்டர். டாக்டரிடம் அடிக்கடி வந்துபோனதால் நல்ல நண்பர்களாகிவிட்டார்கள்.
அத்தோடு ஒவ்வொவருக்கும் சொன்னமாதிரி ஒரே விதமான நோய்கள் இருந்தன. டாக்டரின் அறிவுறுத்தலின் படியே அவர்கள் காலையில் காலிமுகத் திடலுக்கு நடைப் பயிற்சிக்கு வருவார்கள்.இன்றும் அப்படிதான் வந்தவர்கள். ஆனால் சிவா,தணிகாசலத்தோடு ஈடுகொடுத்து நடக்கமுடியாது போகவே சிவா நடைப் பயிற்சியை இடைநிறுத்திவிட்டார்.

"என்ன சிவா உடம்புக்கு முடியல்லையே, அப்படியானால் தொடர்ந்து நடக்கவேணாம், இண்டைக்கு இத்தோடு நிறுத்திக்கொள்வோம். ஒக்கேயா"

"எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லடா தணி, மனசுதான் கொஞ்சம் கஷ்டமா இருக்கிறது."

"என்ன வீட்டில் நளினிக்கும் உனக்கும் ஏதும் பிரச்சினையே. அவ,அப்படி பிரச்சினைப் படுற ஆளில்லையே"

"சேச்சே அவவால எனக்கு ஏதும் பிரச்சினை இல்லை."

"அப்பபின்ன மகள் அர்ச்சனா ஏதும்?" என்ற தணிகாசலம் பேச்சை நிறுத்தி சிவராசாவைப் பார்த்தார்.

சிவராசா குனிந்தபடி கையைப் பிசைந்துகொண்டு இருந்தார். தொடர்ந்தார் தணிகாசலம்.

" என்ன சிவா, அவளுக்கு பள்ளிகூடத்தில் ஏதும் பிரச்சினையே. அவள் பயங்கரக் கெட்டிக்காரிதானே.
ஓ லெவலில் ஒன்பது "ஏ" ஒரு "பி" எடுத்தவள். உயர்தரத்திலும் திறமாக பாஸ் பண்ணுவாள்."
அர்ச்சனாவில் தணிகாசலம் கொண்டு இருந்த மதிப்பு அவரை அப்படிப் பேசவைத்தது.

"அதில எனக்கு எந்தவிதமான டவுட்டும் இல்லைக்கண்டியோ"

"அப்ப பின்ன வேற எதில உனக்கு டவுட் வந்தது. பள்ளிக்கூடத்தில ஏதும் அப்பிடி இப்பிடி"

"என்ன காதல் கீதல் என்றே கேட்கவாறீர். தணி, அவள் அதற்குள் போகமாட்டாள் என்பது எனக்கும் தெரியும்.அவள் தாய்க்கும் தெரியும். ஏன் நீ அறிந்தவகையில் உனக்கும் தெரியும் இல்லையே"

"அதுதான் கேட்கிறேன். அவளுக்கு படிப்பை தவிர வேறு எதுவும் தெரியாது என்று எனக்கும் தெரியும்தானே. வேறு என்னதான் பிரச்சினை சொல்லுமன்" சற்று உரத்து கேட்டார் தணிகாசலம்.

"அது ஒண்டுமில்லடாப்பா, ராத்திரி சனாவை பேசிப்போட்டன் கண்டியோ.அவள் கோவிச்சுக்கொண்டு சாப்பிடாமல் படுத்திட்டாள். தாய்க்காரி எவ்வளவு சொல்லியும் அவள் எழும்பி சாப்பிடவே இல்ல. இன்று சனிகிழமை என்றபடியால் அவள் அறையை விட்டு நான் வரும் வரைக்கும் எழுந்திருக்கல்ல."

"என்னத்துக்கு சிவா அவளை பேசின நீ. அவள் ஏதும் தப்பு தண்டா செய்திட்டாளே. அப்படி செய்தாலும் அதை தாயிட்ட சொல்லி கண்டித்திருக்கலாமே. நீ என்னத்துக்கு பேசப் போனாய். நளினியை பேசவிட்டு இருக்கலாம்தானே."

"தணி, உனக்கு தெரியாது. இரண்டுபேருக்கும் சேர்த்துத்தான் நான் பேசினனான்."

"என்னடா சொல்லவாறாய்.இரண்டுபேருக்கும் சேர்த்து பேசின நீயோ"

"ஓமடாப்பா. உனக்குத் தெரியும்தானே நான் வீட்டில் இன்டெர் நெட். கொம்பியூட்டர் கூட இன்னும் எடுத்துக் கொடுக்கவில்லை. காரணம் இந்த சமூக வலைத்தளங்கள் எல்லாம் கன்னாபின்னா என்று இருக்கின்றன. நான் பத்திரிகைகைகளிலும் பல செய்திகள் படிக்கிறேன். இந்த பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களால் வரும் பிரச்சினைகள் எல்லாம் நாளுக்கு நாள் பயங்கரமாய் வருகின்றன. அதனால் இப்போதைக்கு வேண்டாம் என்று, மகளுக்கு ஒரு சாதாரண மொபைல் போன்தான் வாங்கி கொடுத்து இருக்கிறேன். அதுவும் தாயுடன் பேசுவதற்கு மட்டும்."

" சரி .அது அவசியம்தானே. ஏதும் அவசரத்துக்கு தொடர்பு கொள்வதற்கு. கண்டிப்பாக தேவை."

" ஓம் அதுதான் அவளுக்கு வாங்கி கொடுத்தேன். இப்ப பிரச்சினை என்ன என்னென்றால் அவளுக்கு நல்ல ஸ்மார்ட் போன் ஒன்றும், ஒரு லாப்டாப்பும், வாங்கிக் தரட்டாம். இன்டெர் நெட் இணைப்பும் தேவையாம்"

"எடே சிவா. இன்டர்நெட் இணைப்பு இருந்தால்த்தான் ஸ்மார்ட் போன்,லாப்டாப் எல்லாம் பார்க்கமுடியும்"

"அது எனக்கு தெரியாமலே சீனியர் கிளாக்காக இருக்கிறன். விசர்க்கதை கதைக்கிறீர். அதெல்லாம் இருந்தால் அர்ச்சனா படிப்பில் கவனம் செலுத்த மாட்டாள். அத்தோடு இந்த பேஸ் புக்,வாட்சப்,
வைபர் என்றும், யூடியூப் என்றும் மினக்கெட்டுப் படிப்பை கோட்டை விட்டுவிடுவாளோ என்ற பயம்.
அத்தோடு இந்த சாமான்கள கையாள்வதால் வரும் பிரச்சினைகளை பத்திரிகைகளில் பார்த்துப் படித்து பயந்துபோய் இருக்கிறான்"

"சிவா உன்னுடைய பயம் நியாயமானதுதான். அண்மையில் தமிழ் நாட்டில் முகநூலில், சிநேகமான ஒரு பையனும்,பெண் பிள்ளையும் நேரில் சந்தித்தபோது,அந்தபிள்ளைக்கு பையனை பிடிக்காமல் போக அவள் அவனை இக்னோர் பண்ணியுள்ளாள் ஆனால் அந்த பையன் அவளை தொடர்ந்து தொந்தரவு செய்து தன்னை காதலிக்கும்படி கேட்டுத் திரிந்திருக்கிறான். அவள் மறுக்க, அவளை கழுத்தை வெட்டிக் கொன்றுபோட்டான். மற்றது இன்னுமொரு செய்தி. முகநூலில் ஒரு பொண்ணு தன் படத்தை போட, அந்த படத்தை மோபக் செய்து ஒரு நிர்வாண முண்டதுடன் இணைத்து ஒருவன் வெளியிட, அந்த அவமான தாங்காமல் அந்த பிள்ளை தற்கொலை செய்துகொண்டது. இதில் கடும் வேதனை என்ன தெரியுமே. அந்த பிள்ளையின் பெற்றோர் கூட அந்த பிள்ளையை நம்பவில்லை.

பொலிஸ் கூட குற்றவாளியை பிடிக்க அந்த பொண்ணிடம் மொபைல் போன் ஒன்றை லஞ்சமாக கேட்டு இருக்கிறது.
என்ன கொடுமை பார்த்தியா சிவா இதெல்லாம் தமிழ்நாட்டில் நடக்குது"

"இதைத்தானே நான் நேற்று இரவு முழுதும் தாய்க்கும் மகளுக்கும் சொன்னனான். இந்த பிரச்சினைகள் இருக்கின்றன. உனக்கு இப்போது வேண்டாம். முதலில் படிப்பை கவனமாக பார். ஸ்மார்ட் போன் கையில் இருந்தால் எந்தநேரமும் அதை நொண்டிக்கொண்டே இருக்க தோன்றும். லாப்டாப் இருந்தால் அதில் முழுநாளும் இருக்க வேண்டி மனசு விரும்பும் என்று"

" இந்த ஸ்மார்ட் போன், லப்டப் எல்லாம் இன்று தவிர்க்கமுடியாத அறிவியல் சாதனங்களாக மக்கள் மத்தியில் ஆகிவிட்டன. ஸ்மார்ட்போன் கையில் இல்லாதவர்கள் இன்று உலகில் மிக குறைவு.நீர் பார்க்கையில்லையே.பஸ்ஸில்,ட்ரையில் பிரயாணம் செய்பவர்கள் எல்லோரும் கையில் ஸ்மார்ட் போனை வைத்துக்கொண்டுதானே நோண்டுகிறார்கள்.பக்கத்தில் இருப்பவர்களை கூட அவர்கள்

நிமிர்ந்து பார்ப்பது கிடையாது. என்ன செய்வது காலம் அந்த மாதிரி ஆயிப்போச்சி. சரி நீ சொன்ன விசயத்திற்கே அவள் சாப்பிடாமல் படுத்தவள்.

"இல்ல இல்ல. அதற்கு மேலயும் நடந்தது. தாய்க்காரியும் மகளுக்கு வக்காலத்து வாங்கினா. 'அவள் ஏ/எல் அல்லவே படிக்கிறாள். பெரிய வகுப்பு பிள்ளைகளுக்கு படிக்கிறதுக்கும்.தங்கட ப்ரொஜெக்ட்டுகள தயார் பண்ணுவதற்கும் லாப்டாப் தேவைப்படுகிறது. நீங்க கண்டிப்பாக சனாவுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்றல்லோ நளினியும் சொல்லுறா"

" சிவா ஒரு விசயத்தை நீ புரிஞ்சிக்கோடாப்பா. நாம படிச்ச காலம்மாதிரி இப்ப இல்ல. இப்ப எல்லாமே வித்தியாசம்.முழுதும் கம்பியூட்டர் மூலம் படிக்கிற காலமல்லே இது.. ஆய்வு கூடம் போகாமல் அனைத்து பரிசோதனைகளும் லாப்டாப்பிலே பார்க்கலாம். கொம்பியூட்டர்களில் எல்லாமே இருக்கின்றன.உயர்வகுப்பு பிள்ளைகளுக்கு நளினி சொல்வதுபோல் கண்டிப்பாக இது இருந்தால் கூடுதல் நன்மை இருக்கிறது.

மற்றது அவள் இவ்வளவு நாளும் உன்னைக் கெட்டவளே. தேவை என்று வரும்போதுதானே கேட்கிறாள்.
இன்னும் சொல்லப்போனால் நளினி,தன் மகளுக்கு சும்மா வக்காலத்து வாங்கமாட்டாள்.அவளும் அவளின்ர ஸ்கூலுக்கு போய் நாலு பேரிட்ட விசாரிச்சுப் போட்டுதான் வந்திருப்பாள் இல்லையா"

"ஓமடாப்பா அவள் ஸ்கூலில் ப்ரின்சிபில் தொடக்கம் சனாவின் கிளாஸ் டீச்சர் வரையும் கேட்டு விசாரிச்சு இருக்கிறாள். அவர்கள் எல்லோரும் அதன் அவசியத்தை சொல்லி இருக்கினம்."

" பார்த்தியே நான் சொன்னன் நளினி கறாராய் எதுவும் செய்பவள். நீ என்ன கண்டபடி பேசிப்போட்டியே."

"எனக்கு இந்த பத்திரிகை செய்திகள் மூலம் தெரியவந்த கொலை, சமூக சீரழிவு, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத தன்மைகள் எல்லாம் இந்த கறுமம் புடிச்ச சாமானுகளால்தான் வருகிறது என்ற கொதி கண்டியோ, அதுதான் கொஞ்சம் காரசாரமாக பேசிப்போட்டன். அவள் போய் அறைக்குள்ள கதவை சாத்திப்போட்டாள்.
பேந்து நளினி என்னை பிரிச்சு மேஞ்சா. அவ்வளவுதான்.அவவுக்கும் நான் நல்ல பாட்டுக் கொடுத்தன்."

"அப்ப நீயும் இரவு பட்டினிதான் என்று சொல்லு. எடே விசரா, நீ டயபிட்டீக்ஸ்காரன் என்பதை அடிக்கடி மறந்து போறா கண்டியோ. மற்றது டென்சன் கூடினால் பிரசர் கூடும் உனக்கு தெரயும்தானே. அதுதான் உன்னால இன்று நடக்க முடியாமல் போயிட்டு. சரி இந்தா இந்த பழத்தை சாப்பிடு" என்று தன் கைப்பையிலிருந்து ஒரு பழத்தை சிவாவுக்கு கொடுத்து விட்டு.தானும் ஒரு பழம் எடுத்துக் கொன்ன்டார் தணிகாசலம். பழம் சாப்பிட்டு முடிந்ததும். சிவா பேசினார்.

"தணி, நான்தான் இரவு அவசரப்பட்டு கண்டபடி திட்டிப் பேசிப்போட்டேன் என்று இப்ப பீல் பண்ணுறன். அவர்கள் இருவரும் சொன்ன கருத்துகளையும்,நியாயத்தையும் நான் கொஞ்சம் அமைதியாக கேட்டிருக்கலாம் இல்லையோ"

"இல்லையே பின்ன. சிவா. கெட்டுப்போறதுகள் எப்படியும் கெட்டுப்போகும் கண்டியோ. நாம எப்படித்தான் கண்ணைக்கட்டி வச்சிருந்தாலும் அதற்கு மாற்று வழி அவர்களிடம் இருக்கும். ஆனா ஒன்று, ஒரு தகப்பனா நல்லது கெட்டது என்ன என்பதை பிள்ளைகளுக்கு கண்டிப்பாக சொல்ல வேண்டும். தாய் இரண்டு மடங்கு கவனம் எடுக்க வேண்டும். நளினியைப் பொறுத்தவரையில் நீ பயப்பட வேண்டிய தேவையே கிடையாது. ஒரு தாயாக அவள் சரியான நிலைப்பாட்டைத்தான் எடுத்திருப்பாள். இன்னும் ஒன்று சொல்லுறன். நம்மட தலைமுறை, நமக்கு முதல் இருந்த தலைமுறை எல்லாம் வேறடாப்பா.அதை புரிஞ்சுகொள்ளு.நாங்க குப்பி விளக்கு, சிமினி விளக்கிலதான் படிச்சனாங்க. இப்ப அப்பிடியே. ஒரு மணித்தியாலம் கரண்ட் கட்டாப்போச்சுதென்றால் நமக்கே இப்போ கஷ்டமாக இருக்குதல்லே.இந்த தலைமுறைக்கு எப்படி இருக்கும். நம்மட தலைமுறையில் உள்ளவர்கள் பத்து வயசுவரைக்கும் அம்மா,அப்பாவுடன் படுத்து உறங்கினவை. இப்ப அவர்களுக்கு தனி அறை வேண்டும்.ஓமோ இல்லையோ."

"ஓமடா, அதிலும் அவர்கள் விரும்பிய படிதான் எல்லாம் ஒழுங்கு செய்கிறார்கள். தாயோ,தகப்பனோ அவர்கள் ரூமிற்குள் போய் எதுவும் செய்ய முடியாது"

"புரியுதல்ல...அதுதான் தலைமுறை இடைவெளி. இந்த தலைமுறைக்கு பல இழப்புகளும் இருக்கிடா சிவா"

"இழப்புகளோ. நினைச்ச சாமான்கள் வாங்கித்தர கேட்குதுகள். பிடிச்ச சாப்பாடுதான் சாப்பிடுதுகள்.

விருப்பமான உடுப்புகள்தான் உடுத்துதுகள். என்ன இழப்புகள் அவர்களுக்கு இருக்குது"

"சிவா நிறைய இருக்கிடாப்பா. சொல்லுறன் கேளு. அந்தக் காலத்துல நாங்க விளையாடின விளையாட்டுக்கள் இவர்கள் இப்போ விளையாட முடியுமே. கிட்டிப்பொல்லு, பச்சைக்குதிரை, கள்ளன்பொலிஸ், கிளித்தட்டு, கெந்திமிதித்தல்,குண்டடித்தல், வாரோட்டம், என்று எத்தனை கிராமத்து விளையாட்டுகள் விளையாடி இருப்பம். இவர்கள் அறைக்குள்ளேதான் அடைபட்டு கிடக்கினம். நமக்கு இவ்வளவு பெரிய படிப்பு சுமை இருந்ததே. பள்ளியால வந்தால் புத்தகங்களை மூலையில் போட்டுவிட்டு முன்வளவுகளுக்குள் ஓடி விளையாடிவிட்டு சாயங்கலாம்தான் மேல்கழுவி வந்து படிக்கத் தொடங்குவோம். இப்பெல்லாம் இவர்கள் அப்படி செய்யமுடியுதே.

பள்ளிகூடங்களில் பயங்கர கொம்பிடிசன் இருக்கு. எல்லோரும் கெட்டித்தனமாக படிக்கிதுகள்.ஏதோ உன்ர மகள் கொஞ்சம் கெட்டிக்காரி என்றபடியால் மற்றவர்களுடன் போட்டி போட்டு படிக்கிறாள். அவளுக்கு படிக்க இன்னும் நீ வசதி செய்து கொடுக்கவேண்டும். நீ உன்னோட காலத்தை நினைச்சிக் கொண்டு அவளோட காலத்தோட விளையாடாத கண்டியோ. பேந்து பிழையாக போயிடும் சொல்லிப்போட்டன் ஓ. மற்றது அவர்களின் சிந்தனைகள், செயல்பாடுகள் எல்லாம் இன்றைய அறிவியல் சார்ந்தது. ஒரு தாய் தன் மகளின் நலனில் அதிக அக்கறை எடுப்பாள். நளினி நல்ல தாய் என்பது எனக்கு தெரியும்"

"நீர் சொல்வது உண்மைதான் தணி, ஒரு தகப்பனைவிட தாய்க்கு பிள்ளைமீது அதித அக்கறையும் கவனமும் இருக்கு. அர்ச்சனாவில்,நளினி அதிக கவனம் எடுப்பவள்.அவளை எடுத்து எறிஞ்சு பேசி இருக்கத் தேவையில்லை. என்னை நினைச்சால் வெட்கமாகவும் என்மேல் கோபமாகவும் வருகுதிடாப்பா."

"நீ ஒன்றுக்கும் யோசிக்காத கண்டியோ. எல்லாம் நல்லபடியா நடக்கும். கிளம்பு வீட்ட போ.. போய் நளினியோடும்,அர்ச்சனாவோடும் நல்லமாதிரி பேசு.. அவள் விரும்பியதை இன்றைக்கே வாங்கிக் கொடு சரியே.' என்று சொன்ன தணிகாசலம் எழுந்து நடக்க தொடங்கினார்.

ஒரு மனப்பாரம் இறக்கி வைக்கப்பட்ட உணர்வில் சிவராசா தன் நண்பனை பின் தொடர்ந்தார்.
தன் மகளை கட்டி அணைத்து இரவு கடுமையாக நடந்து கொண்டமைக்கு வருத்தம் தெரிவித்து அவளைக் கூட்டிக் கொண்டு கடைக்குபோய் அவள்

கேட்டபடி,லாப்டாப்பும், ஸ்மாட் போனும் வாங்கிக் கொடுத்துவிடவேண்டும் என்ற எண்ணம் உந்தித்தள்ள அவரது நடையில் வேகம் கூடியது.

---

## ஆசிரியரின் பிற நூல்கள்

*01.* இளமைக் கோவில் ஒன்று – நாவல்

*02.* மலைக் கோட்டை மர்மம் – தொடர்கதை *(சிறுவர்)*

*03.* படகுத்துறை அருகினிலே - நாவல்

*04.* லாவண்யா ஒரு முற்றுப்புள்ளி – நாவல்

*05.* புதுக்கோலங்கள் – மெல்லிசை பாடல் தொகுப்பு

*06.* மண்வாசம் – கவிதைத்தொகுப்பு

*07.* விடியாத இரவுகள் – சிறுகதைத் தொகுப்பு
*(லில்லி தேவ சிகாமணி இலக்கிய விருது- கோயம்புத்தூர், தமிழ் நாடு)*

*08.* தேசத்தின் தென்றல் – தாயக உணர்வு பாடல் தொகுப்பு

*09.* பக்திப் பாடல்கள் தொகுப்பு

*10.* இல்லாமல் போன இன்பங்கள் – கட்டுரைத் தொகுப்பு

# ஊருக்குத் திரும்பணும்



திருக்கோவில் என்ற தனது ஊரை "கோவிலூர்" என்று சுருக்கி தன் பெயரோடு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே அடைசேர்த்துக் கொண்டுள்ள இப் படைப்பாளி எப்போதோ இயற்றியிருந்த

"ஊர் பற்றி யாரும் பேசிவிட்டால் சுடு
தார் அள்ளி முகத்திலே ஊற்றி வைப்பேன்
கூர் வேல் வந்து தங்கிய எந்தனூரில்
யார் வந்து கோலோச்சிப் பார்க்கிறது"

என்ற பாடலடிகள் இப்போதும் என் நினைவிற்குள் பரவி இருக்கின்றன. அத்தகைய படைப்பாளி ஒருவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான இந்நூலிற்கு அணிந்துரை எழுத முற்படுவது களிபேருவகை தருகின்றது.

இந்த தொகுப்பிலுள்ள இவரின் புகலிட நாடு சார்ந்த சிறுகதைகள் ஈழத்து இலக்கிய போக்குகளை அகலப்படுத்துகின்றன என்றால் இவரது ஈழத்துடன் தொடர்புள்ள சிறுகதைகள் ஈழத்து சிறுகதை போக்குகளை ஆழப்படுத்துகின்றன என்று சொல்வதில் தவறில்லை. இவற்றுள் சில ஈழத்தில் வாழும் எழுத்தாளர்கள் இதுவரையும் பேசாப்பொருளாகவும் உள்ளன.

புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து கொண்டே, புலம்பெயர்ந்து திரிகின்ற கோவிலூர் செல்வராஜனிடமிருந்து எதிர்காலத்தில் நல்ல நாவல்களையும் ஈழத்துலகம் எதிர்பார்த்து நிற்கிறது.

வாழ்த்துகளுடன்,
பேராசிரியர். பெ. யோகராசா

ISBN Bar code
9 781234 567897
**RS 200/=**